உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 13 திங்கட்கிழமை (29.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 003

# தமிழ்க் கட்சிகளை சந்திக்காமலேயே நாடு திரும்பினார் அமைச்சர் கிருஷ்ணா

## இறுதி நாள் நிகழ்ச்சி நிரலில் கடைசி நேரத்தில் மாற்றம்

கொழும்பு, நவம்பர் 29

**இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளைச் சந்திக்காமலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்று நாடு திரும்பினார். இதனால் தமிழ்க் கட்சிகள் ஏமாற்ற மடைந்தன. நேற்றுக் காலை அம்பாந்தோட்டை துணைத் தூதரகத்தைத் திறந்து வைத்த அவர், அங்கிருந்து கட்டுநாயக்க சென்று நேரடியாகப் புதுடில்லி பறந்தார்.**

இந்திய அமைச்சர் கிருஷ்ணாவின் இறுதிக் கட்ட நிகழ்ச்சி நிரலில் தவிர்க்க முடியாத மாற்றங்கள் ஏற்பட்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு இடம்பெறவில்லை என கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு நேற்றுக் காலை இடம் பெறவிருந்தது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோர் அமைச்சர் கிருஷ்ணாவைச் சந்திப்பதாக இருந்தது.

இதேவேளை, தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்கும் நேற்று நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. முற்பகல் 10 மணிக்கு இந்திய இல்லத்தில் நடைபெறவிருந்த சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது என தமிழ்த் தேசிய விடுதலை (24ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை-பாக். வெளிவிவகார அமைச்சர்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடுகிறார்கள்.

## இலங்கை -பாக். நாடுகள் இடையே 4 ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்து

### மஹிந்த - சர்தாரி பேச்சு

கொழும்பு, நவ. 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அல்-சர்தாரிக்கும் இடையில் பேச்சுகள் இடம்பெற்றன. நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இப்பேச்சு ஒரு மணித்தியாலத்துக்கு மேல் தொடர்ந்தது.

இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தனது கவலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முதலில் தெரிவித்தார்.

இலங்கை மக்களை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு வழங்கிய அர்ப்பணிப்பையும் (24ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் எண்ணத்துக்கு உரமூட்டவே துணைத் தூதரகம் அம்பாந்தோட்டையில்

### கிருஷ்ணா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டிருக்கும் எண்ணத்துக்கு உரமூட்டி உதவும் வகையிலேயே அம்பாந்தோட்டையில் இந்தியா தனது துணைத் தூதரகத்தைத் திறந்து வைக்கிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார். அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள புதிய இந்திய உதவித் தூதரகத்தை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றியபோதே இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மிக நீண்ட காலமாக (24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் மழை தொடரும்

கொழும்பு, நவ. 29

வாயு மண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இப்போது பெய்து வரும் கடும் மழை மேலும் அதிகரிக்க இடமுண்டு என்று வானிலை அவதான நிலையத்தின் நிபுணர் டி.ஏ.ஜயசிங்க ஆராய்ச்சி தெரிவித்தார்.

குறிப்பாக மன்னார் (04ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி உறுதி அளித்தபடி மக்களுக்கு நிவாரணம் இல்லை

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.29

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமே இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி உறுதியளித்தபடி அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுமில்லை. (24ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கு நாடுகளில் உணர்வுபூர்வமாக மாவீரர் தினம்

கொழும்பு, நவ.29

உலகில் இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. லண்டன் நகரில் கடந்த சனிக்கிழமை கொண்டாடப்பட்ட மாவீரர் தின நிகழ்வில் சுமார் 50 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டன் எக்செல் மண்டபத்தில் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மாவீரர் தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாலை 6.00 மணிவரை பல் (24ஆம் பக்கம் பார்க்க)

## அடை மழையினால் 55 ஆயிரம் பேர் நிர்க்கதி 250 வீடுகள் சேதம்; தொற்றுப்பரவும் அபாயம்

கொழும்பு, நவ. 29

தற்போது நிலவிவரும் அசாதாரண காலநிலை காரணமாக இதுவரையில் நாடு முழுவதும் 55 ஆயிரத்து 520 பேர் இருக்க இடமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை 58 வீடுகள் முற்றாகச் சேதத்துக்குள்ளாகியுள்ளன. மேலும் 192 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களைத் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கு (02ஆம் பக்கம் பார்க்க)

உலக எயிட்ஸ் தினம் 2010

"HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும் மனித உரிமைகளை மதித்தலும்"

- எயிட்ஸ் நோய்க்குக் காரணமான HIV கிருமி தொற்றிய ஒருவர் பல வருடங்கள் வரை நோயாளியென சந்தேகிக்கக் கூடிய அறிகுறிகள் எதுவுமின்றி சாதாரணமான ஒருவரைப் போல் இருக்க முடியும்.
- இதனால் HIV தொற்றுள்ளவரை வெளித் தோற்றத்தை வைத்து கண்டு பிடிக்க முடியாது.
எனவே முறையற்ற ஆபத்தான பாலியல் தொடர்புகள் உங்களையும் எயிட்ஸ் நோயாளிகளாக்கலாம்.
- யாழ் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் HIV தொற்றுக்கள் பரவக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் அதிகரித்து வருகிறது.

"HIV/AIDS - எங்களது பாதுகாப்பு எமது கைகளிலேயே"

ஆக்கம் : சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் அனுசரணை: Unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்கள் குடியேற வசதியாக தேச வழமைச் சட்டத்தில் திருத்தம்

## நாடாளுமன்றில் ஐ.தே.க. உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு, நவ.29

யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள தேசவழமைச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவசேன சிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். வரவு செலவுத் திட்டம் மீதான பிரேரணையின் மீது அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து உரையாற்றியபோது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பில் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இதேபோன்று யாழ்ப்பாணத்திலும் சகல இனமக்களும் வாழ வேண்டும். இதனால் சிங்கள மக்கள் அங்கு குடியேறுவதற்கு ஏற்ப தேசவழமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறிய தற்குப் பதிலளிக்கும் முகமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவசேனசிங்க இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஓர் இனவாதியல்ல எனவும் அவர் இவ்விடயத்தை ஆராய்வார் எனவும் ஜீவசேன சிங்க எம்.பி. கூறினார். (ஒ-எ)

# வன்னியில் தொடரும் பெருமழையால் பாடசாலைகள் இயங்குவதில் சிரமம்

வன்னிப்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழையின் காரணமாக பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் ஆண்டிறுதிப் பரீட்சையை நடத்துவதிலும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதிலும் இடர்பாடுகள் உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் 60 வீதமானவை சீரற்ற கூரை மற்றும் கட்டட வசதிகள் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. மழை இல்லாத காலங் களில் மர நிழலின் கீழே நடத்தப்பட்டு வந்த வகுப்புகளைக் கூட மழைக்காலத்தில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆண்டிறுதிப் பரீட்சையை நடத்துவதற்கு தாம் கூடுதல் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக தாம் வலயக்கல்விப் பணிமனைகளின் கவனத் திற்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் இதன்படி பாடசாலைகளில் சுழற்சி முறையிலான வகுப்புகளை நடத்துவதற்கு தாம் அனுமதியைக் கோரவுள்ளதாவும் இந்த அதிபர்கள் கூறியுள்ளனர். (ஒ-எ)

# கொழும்பு மாநகரில் மட்டும் 83,237 சட்டவிரோத வீடுகள்

கொழும்பு, நவ.29

கொழும்பு மாநகரில் 2 ஆயிரத்து 165 ஏக்கர் நிலப்பரப்பில் 83 ஆயிரத்து 237 சட்டவிரோத வீடுகள் இருப்பதாக நிர்மாணத்துறை, பொறியியல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

கொழும்பு மாவட்டத்தில் 4 பேர்ச்சஸ் நிலத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 554 வீடுகள் காணப்படுகின்றன. குறைந்த வசதிகளைக் கொண்ட இத்தகைய வீடுகளில் வசிப்பவர்களுக்காகவே 70 ஆயிரம் வீடுகளை அமைக்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார். (எ)

# 'எயிட்ஸ்' தின கட்டுரைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், நவ.29

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தக் கட்டுரைப் போட்டியில் பாடசாலை மட்ட பிரிவு ஒன்றில் முதலாவது இடத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உயர்தர மாணவன் உதயகுமார் அகிலனும் இரண்டாவது இடத்தை இணுவில் மத்திய கல்லூரி மாணவன் விஜயபாஸ்கரசர்மா திவாகரனும், மூன்றாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி உயர்தர மாணவன் திருநாவுக்கரசு துவாரகனும் பெற்றுள்ளனர்.

இந்தப் பிரிவில் ஆறுதல் பரிசுகளைப் பெறும் முதல் 5 வெற்றியாளர்களாக யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை உயர்தர மாணவி மோகனரூபினி அமிர்தலிங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி சோபிகா நவரத்தினம், திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய தரம் 10 மாணவி சரண்ஜா தர்மரத்தினம், உசன் இராமநாதன் மகாவித்தியால உயர்தர மாணவி ஜான்சா செல்வக்குமார், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி கௌதமி யோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் .

பிரிவு இரண்டு திறந்த போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் பரராஜசிங்கம் இராஜேஸ்வரன், மாகியப் பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த தேவமதி ஜோசேப், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஆசிரியர் கே.எஸ். சிவஞானராஜா ஆகியோர் முதன் மூன்று இடங்களை முறையே பெற்றுள்ளனர்.

இந்தப் பிரிவில் ஆறுதல் பரிசுகளைப் பெறும் முதல் 5 வெற்றியாளர்களாக அளவெட்டி வடக்கு தேகிட்டியைச் சேர்ந்த பசுபதி உதயகுமார், புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த அ.எட்வின் பீரிஸ், மங்குளியன் வளவு, அளவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி மாலாதேவி மதிவதனன் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி ஆரபி சிவகுகன், காங்கேசன்துறை வீதி; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் கந்தசாமி கோவிந்தராசா ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான பரிசல்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வும் நாளைமறுதினம் புதன் கிழமை தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

# 100 வருட பழைமை வாய்ந்த ரகசிய பெட்டகம் கண்டுபிடிப்பு

கொழும்பு,நவ.29

கொழும்பு தேசிய வைத்தியசாலையிலுள்ள கட்டடமொன்றில் 106 வருடங்கள் பழைமை வாய்ந்த ரகசியப் பெட்டகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெட்டகத்தை திறக்க முடியாமல் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பெட்டகம் இரண்டு மீற்றர் உயரமும் 2.5 மீற்றர் அகலமும் கொண்டது.

கொங்கிறீற்றாலான சுவருக்குள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இரும்பு கலந்த உலோகம் ஒன்றால் தயாரிக்கப்பட்ட நான்கு கதவுகளையும் கொண்டுள்ளது.

பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த பூட்டொன்றின் எடை ஐந்து கிலோகிராமாகும். அத்தகைய மூன்று பூட்டுக்களால் இப் பெட்டகம் பூட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலை தொழுநோய் சிகிச்சைக் கட்டடமொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த விலைமதிப்பற்ற பெட்டகத்தை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பார்வையிட்டதின் பெட்டகத்தை திறப்பதற்கான வழிமுறைகள் பற்றி வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஹெக்டர் வீரசிங்கவிடம் ஆலோசனை நடத்தினார்.

எனினும் எந்த திறப்புக்கும் பூட்டுகள் அசைந்து கொடுக்கவில்லை.

இந்தப் பெட்டகம் அமைந்துள்ள கட்டடம் சுமார் 150 ஆண்டுகள் பழைமைவாய்ந்தது. (ம-5)

# நகரில் தேங்கி நின்ற வெள்ளக்காடு மாநகர சபையினரால் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். நகரில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக தேங்கி நின்ற மழை நீர் நேற்று மாநகர சபையால் யாழ். நகர மேயரின் நெறிப்படுத்தலில் வாய்க்கால் வெட்டி அகற்றப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் நீர் தேங்கி நின்ற பகுதியை பார்வையிட்ட யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்தி அலன்ரின் ஆகியோர் தேங்கி நின்ற நீரை வெட்டி அகற்ற ஏற்பாடு செய்தனர்.

இதன்படி யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன் உள்ள வீதி, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபி ப் பகுதி ஆகிய இடங்களில் தேங்கி நின்ற மழை நீர் 'பைக்கோ' வின் உதவியுடன் யாழ். கோட்டைப் பகுதியிலுள்ள அகழிக்கு வெட்டி அகற்றப்பட்டது. அத்துடன் பண்ணை பஸ் தரிப்பு நிலையப் பகுதியில் வீதியை மூடி வெள்ளக்காடாக தேங்கி நின்ற நீரும் நேற்றிரவு அகற்றப்பட்டது. (ஒ- 10- 7)

# கோண்டாவில் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் நேற்று மாலை 5.50 இற்கு மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான செருக்கம்புலம் லேன், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கணேஷ் குணசீலன் (வயது 46) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10)

# காணாமற்போனவரை இறந்தவராக பதிவு செய்ய நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்துள்ளது

## மேலதிக பதிவாளர் நாயகம் தகவல்

யாழ்ப்பாணம்.நவ, 29

காணாமற்போனவர்களை இறந்தவர்களாக பதிவு செய்யும் திட்டத்திற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எனவே விரைவில் பிரதேச செயலகங்கள் ஊடாகப் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார் மேலதிகப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவம் ஐயர்.

இது தொடர்பாக 'உதயனுக்கு' மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் போது காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவுசெய்வதற்கான திட்டத்திற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளது.

அது சட்ட நடைமுறைப் படுத்தப்படும். பின்னர் அது தொடர்பான சுற்றுநிருபத்தை அரசு வெளியிடும்.

அதனைத் தொடர்ந்து பிரதேச் செயலகங்கள் ஊடாகக் காணாமற்போனவர்கள் இறந்தவர்களாக கருதிப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்

இவ்வாறு பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பொலிஸில் முறைப்பாடு செய்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும் என்றார். (ம-14)

# அடைமழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதும் 22 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்டத்திலேயே அதிகளவான நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அடைமழை, மண்சரிவு, வெள்ள நீர்தேங்கி நிற்றல் போன்ற அனர்த்தங்களினாலேயே மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட காரியாலயம் அறிவித்துள்ளது.

இது தவிர நுவரெலிய மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த மழையால் பல்வேறு அழிவுகள் ஏற்பட்டுள்ளன. மலைப்பிரதேசங்களில் பனி மூட்டம் நிலவுவதனால் சாரதிகள் வாகனம் செலுத்துவதில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் மலைப்பாங்கான பிரதேசங்களில் வாகனங்களை தரித்து நிறுத்தவேண்டாம் என்றும் நுவரெலிய மாவட்ட செயலாளர் உ.பி.ஜீ.குமாரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையின் விளைவாக தாழ்நில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான ஏதுநிலை உருவாகி உள்ளது. மீனவர்களும் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதைத் தவிர்த்துள்ளனர்.

மூதூர் கிழக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிவெட்டி, மணற்சேனை மற்றும் கட்டைபறிச்சான் போன்ற பகுதிகளில் நீண்ட காலமாகவே இடம்பெயர்ந்து வாழும் 1530இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், அடைமழையின் விளைவாகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றன.

காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊழியர்கள் அந்தந்த மாட்டத்துக்குரிய காரியாலத்தினூடாக உதவிகளை வழங்கிவருகின்றனர் என்று நிலையம் அறிவித்துள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழை டிசெம்பர் மாத இறுதிவரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் இரவில் நடந்த திருட்டு முயற்சி முறியடிப்பு

## காட்டிக் கொடுத்தது இரகசியக் 'கமரா'

தென்மராட்சி, நவ.29

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் இடம்பெற்ற திருட்டு முயற்சி அங்கு பொருத்தப்பட்ட இரகசியக் 'கமரா' மூலம் முறியடிக்கப்பட்டது. திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஊழியர்கள் வங்கியை மூடிவிட்டுச் சென்ற பின்னர் வங்கியின் பின்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்குள்ள கதவுகளை உடைத்து இறுதியாக இரும்புப் பெட்டகக் கதவை உடைக்க முயன்றனர்.

அது முடியாமல் போகவே ஏ.ரி.எம். அட்டை பொருத்தும் இயந்திரத்தைச் செயற்படுத்த முயன்றபோது அது பயனளிக்காதவிடத்து அவ்விடத்தை விட்டு அகன்றுள்ளனர்.

பின்னர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு அதே திருடர்கள் வங்கியின் உள் நுழைந்த போது அங்கு பொருத்தப்பட்டிருக்கும் 'கமரா' அவர்களைப் படம் பிடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தை கொழும்பிலுள்ள வங்கித் தலைமையலுவலகத்தினர் அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து உடனடியாக வங்கியை முற்றுகையிட்ட பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் இருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் எனவும் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - கைரேகை நிபுணர்களின் உதவியுடன் தடயங்கள் சேகரிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையேகைதானசந்தேகநபர்கொடுத்த தகவலை அடுத்து மற்றொரு நபர் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் - என்று தெரியவந்துள்ளது. (ஒ-ம-207-131)

# கண்டியிலும் தெனியாயவிலும் இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்

## உயர் கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ.29

தெனியாயவிலும் கண்டியிலும் இரண்டு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ அரசு தீர்மானித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

தெனியாயவில் நிறுவப்படவுள்ள பல்கலைக் கழகம் சர்வதேச பல்கலைக்கழமாக அமையவுள்ளதாகவும் கண்டியில் நிறுவப்படவுள்ள பல்கலைக்கழகம் விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் விஞ்ஞானக் கற்கை நெறிகளை வழங்கும் உயர் கல்வி நிறுவனமாக அமையவுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாட்டுப் பல்கலைக் கழகமொன்று 350 லட்சம் ரூபாவுக்கு வழங்கும் பட்டத்தை இலங்கையில் 100 லட்சம் ரூபாவுக்கு வழங்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ஒ-ம-5)

# நாடெங்கும் சட்ட விரோதமாக இயங்கும் நூறு 'கேபிள்' தொலைக்காட்சி சேவைகள்

## மடக்கிப் பிடிக்க நடவடிக்கை

கொழும்பு, நவ.29

அனுமதிப் பத்திரங்கள் பெறாமல் சட்ட விரோதமாக நாடெங்கும் சுமார் நூறு கேபிள் தொலைக்காட்சிச் சேவைகள் நடத்தப்பட்டு வருவதாக தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆணைக்குழுவின் அதிகாரிகள் புலனாய்வு பொலிஸாருடன் இணைந்து கூட்டாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் மூலம் இந்த சேவையை வழங்கி வருபவர்கள் மடக்கப்படவுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தொலைத் தொடர்புகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 14 பேரும் கொட்டாஞ்சேனை ஜெம்பட்டா வீதியில் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேபிள் தொலைக்காட்சிச் சேவையை வழங்க ஆணைக்குழு இதுவரை இரண்டு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளது.

இந்த அனுமதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் அங்கீகாரத்துக்குப் பின்பே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-ம-5)

# வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் நான்கு 190 கோடி ரூபாவுடன் தலைமறைவு

கொழும்பு, நவ.29

கொழும்புக் கோட்டையில் வெளிநாட்டவர்களால் நடத்தப்பட்டுவந்த நான்கு நிதி நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து திரட்டிய 190 கோடி ரூபாவுடன் திடீரென மூடப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நான்கு நிதி நிறுவனங்களும் கொழும்பு கோட்டையிலுள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தில் தமது அலுவலகங்களை நடத்தி வந்தன.

ஏராளமான வாடிக்கையாளர்களிடம் இருந்து நான்கு நிறுவனங்களும் சுமார் 190 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை வைப்புக்களாகத் திரட்டியுள்ளன.

இந்த நாட்டுப் பெரும் வர்த்தகர்கள், அரசியல் வாதிகள் கோடீஸ்வரர்கள் இந்த நிறுவனங்களில் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்திருந்தனர்.

இவற்றுள் இரண்டு நிறுவனங்கள் சிங்கப்பூர் மற்றும் குவைத் நாட்டுப் பிரஜைகளால் நடத்தப்பட்டு வந்தன.

ஏனைய இரண்டு நிறுவனங்களின் உரிமையாளர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை என்றும் வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-5)

# ஒபாமாவுக்கு வெடித்தது உதடு 12 தையல் போட்டு சிகிச்சை

வாஷிங்டன், நவ. 29

அமெரிக்காவில் நன்றி தெரிவிக்கும் விடுமுறை தினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜனாதி பதி ஒபாமாவை அவரது குடும்பத்தினரும், நண்பர்களும் வெள்ளிக்கிழமை காலை சந்தித்தனர்.

இதையடுத்து, அங்கு ஜனாதிபதி ஒபாமாவுக்கு மிகவும் பிடித்த கூடைப்பந்து விளையாடப்பட்டது. டியூக் பல்கலைக்கழகத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில் இரு அணிகளாகப் பிரிந்து கூடைப்பந்து விளையாடினர்.

4 செட்கள் எந்தவிதப் பிரச்சினையும் இன்றி சுமுகமாக விளையாட்டு தொடர்ந்தது. 5ஆவது செட் விளையாடியபோது ஒபாமா அணியினர் அடித்த பந்தை எதிர் அணியில் இடம்பெற்றிருந்த ரேடெக் ரேகா தடுத்தார்.

அப்போது, அவரது முழங்கையின் முட்டி அருகில் நின்றிருந்த ஒபாமாவின் முகத்தில் இடித்தது. இதனால் அவரது மேல் உதடு கிழிந்து காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இரத்தம் கொட்டியது.

இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து விளையாட்டு நிறுத்தப்பட்டது. உடனடியாக டாக்டர் வரவழைக்கப்[illegible] ஒபாமாவின் உ[illegible]12 தையல் போட்டு சிகிச்சை அளித்தார்.



# சந்தியடிச் சோமு

## மகாபாரத யுத்தத்தின் சூத்திரதாரி வந்தார்

"ஐயா! இண்டைக்கு வெளியில எங்கையும் போகாதேங்கோ". இது மகளின்ர அன்புக் கட்டளை. "என்ர வயதுக்கு எனக்கொரு பயமும் இல்லை" எண்டு போட்டு, சைக்கிளையும் எடுத்துக்கொண்டு விடுப்புப் பாக்க ரவுன் பக்கமா போனன்.

பலாலி வீதியில திருநெல்வேலியைத் தாண்டினாப் பிறகுதான் கொஞ்சம் கெடுபிடி அதிகமா இருந்துது. வேகமா வந்த மோட்டார் சைக்கிள் பொலிஸ்காரன் என்னைத் தாண்டிக் கொண்டு போகேக்க "ஓரமாப் போ" எண்டு சைகை காட்டினான். ஏன் இந்தக் கிழட்டை ஓரங்கட்டிறான் எண்டு மனசுக்க நினைச்சுக் கொண்டு சைக்கிளை பிறேக் பிடிச்சு ஓரங்கட்டினன். அப்பத்தான், வெளிக்கிடேக்க மகள் சொன்னது "இண்டைக்கு பெடியளின்ர தினம் வெளிக்கிடாதேங்கோ" எண்டு சொன்னது நினைவுக்கு வந்துது.

என்னத்துக்கு "ஓரமாப் போ" எண்டு சொன்னவங்கள் எண்டு எனக்குப் பக்கத்தில நிண்ட ஒருத்தரைக் கேட்டன். அவர் நக்கலாச் சொன்னார், "மகாபாரத யுத்தத்தை நடத்தின ஆள் வந்திருக் கிறாரெல்லோ! அவர் வீதியில வீச்சா, இறுமாப்பா, இடைஞ்சல் தடங்கல் இல்லாமப் போறதுக்காகத்தான் எங்கள ஓரம் போகச் சொன்னவங்கள்" எண்டுது மனிசன். பாரதப் போர் யார் நடத்தினது எண்டு தெரியும்தானே! கிருஷ்ணர்தான் நடத்தினவர்.

உதில உங்களுக்கு ஒரு விசயத்தைச் சொல்ல வேணும். நான் தமிழ் நாட்டில இருந்த காலத்தில காஞ்சிபுரத்துக்கு அங்கால ஒரு 45 கிலோ மீற்றர் தூரத்தில இருக்கிற 'சுருட்டல்' எண்டிற குக்கிராமத்துக்கு ஒருக்காப் போயிருக்கிறன். அங்க வன்னியர், யாதவர் எண்ட ரெண்டு பெருஞ் சாதியள் இருக்கு.

இந்தப் பத்தி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவருவது வழமை. தவிர்க்க முடியாத காரணங்களால் நேற்று வெளிவராத சோமு இன்று உங்களுடன் பேசுகிறார். (ஆ-ர்)

பாரதக் கதையை வன்னியர் அங்க சொல்லுற விதமே தனிதான். அது என்னெண்டா, கிருஷ்ணர் ஒரு யாதவர். பாண்டவரையும் கௌரவரையும் மோதவிட்டு மோதவிட்டு லாபம் பாத்தது முழுக்க கிருஷ்ணர் தானாம். தன்ர சுயநலத்துக்காக மற்ற ரெண்டு தரப்புக்கும் இடையில சண்டையை மூட்டிவிட்டு, அதுல வந்த லாபத்தில யாதவரையும் தன்ர அரசையும் செல்வச் செழிப்போட வைச்சிருந்தாராம். அதுக் காகவேதான் பங்காளியளான கௌரவரையும் பாண்டவரையும் ஒண்டுசேர விடாமலுக்கு, ஆனால் சேக்கிறத்துக்கு முயற்சி செய்யிற மாதிரியும் அந்தாள் நடந்து கொண்டதாம் - வன்னிய மக்கள் பாரதத் துக்குக் குடுக்கிற விளக்க உரை இதுதான். நான் சத்தியமா என்ர காதால கேட்டதத்தான் உங்களுக்குச் சொல்லுறன். அந்தக் கிராமத் தில இருக்கிற யாதவ சாதியினர் கிஷ்ணரின்ர வாரிசுகள் எண்டுதான் வன்னிய மக்கள் நினைக்கினம்.

சரி! அத விட்டுட்டு நாங்கள் அண்டைய விசயத்துக்கு வருவம்! பொலிஸ்காரர் கொஞ்சத்தால கையைக்காட்டினாங்கள் வெளிக்கிட்டு ரவுன் பக்கமாக சைக்கில உழக்கினன்.

எதிரில சிவப்பு நிறத்தில மகேந்திரா ரக்டர்கள் வரிசையா வந்து கொண்டிருந்துது. அதுகளில இலங்கைக் கொடியும் இந்தியக் கொடியும் ஒண்டவிட்டு ஒரு ரக்டரில போட்டிருந்தது. எல்லா ரக்ரரிலயும் இந்திய மக்களின் அன்பளிப்பு எண்டும் எழுதியிருந்திச்சுது. நொந்தவனுக்கு உதவிறதுகளக் கூட தாள தம்பட்டமடிச்சு செய்யிறதுக்கு இவையளக் கேட்டுத்தான் பாருங்கோ! காந்தியை வைச்சே யாபாரம் நடத்திறவங்கள் சாவை வச்சு யாபாரம் நடத்திறது ஒண்டும் பெரிய விசயமில்லைத் தானே!

முன்னால ரோட்டோரம் நிண்டவர் சொன்னது போல கிருஷ்ணர் நயவஞ்சகத்தனமாக போரத் தொடக்கி அதை தனக்கு சாதகமாக முடிச்சு வைக்கிறதுக்கு தர்மத்துக்கு மாறா எத்தின திருகுதாளங்கள் செய்தவர். இப்ப இங்க வந்திருக்கிற கிருஷ்ணாவும் அப்பாவிச்சனத்தின்ர சாவையெல்லாம் "நல்லிணக்கத்துக்கான" சாவெண்டு வியாக்கியானம் வேற குடுத்திருக்கிறார். மறத் தமிழன் ஊரில நிண்டு மடத்தனமாக் கதைக்கிறத்துக்கு அந்தாளுக்கு என்ன துணிச்சல்? எல்லாம் எங்கட நிலையால வந்தது; வேற என்னத்தைச் சொல்லுறது நான்!

"வயித்துக் குத்துக்கும் ..............யான நம்பாதை" எண்டு என்ர அப்பு அடிக்கடி சொல்லுறதின்ர அர்த்தம் இப்பதான் விளங்குது பாருங்கோ. ஆனா இந்த தமிழ் கூட்டமைப்புக்காரர் இன்னும் ஏனோ அவையளையே நம்பித்திரியினம் பாருங்கோ! இவையள அழைச்சுப் போனவையோ அழையாமல் போனவையோ எண்டு பேப்பர்காரப் பெடியனக் கேட்டன். அவன் சொன்னான் இப்ப இருக்கிற அரசியல் சூழ்நிலையளில அழைச்சாலென்ன அழையாட்டா என்ன அவை குழைஞ்சு கொண்டு போகத்தான் செய்யினம் எண்டு.

"கிருஷ்ணருக்கும் அவற்ற அவதாரங்களுக்கும் காலம் காலமா மீசை வைச்ச ஆம்பிளையளக் கண்டால் பிடிக்காது. மீசைவச்சவன் எல்லாரையும் இராவணனாப் பாக்கிறாங்கள். இராவணன் கிருஷ்ணாக்களின்ர கனவிலும் நினைவிலும் தோன்றி வெருட்டுறதாலதான் காசை இறைச்சு கனவேலை செய்யிறாங்கள்" எண்டு என்ர 'கொட்டில் சிநேகம்' ஒண்டு சொல்ல, நான் வியந்து கேட்டுக்கொண்டிருந்தன். நாங்கள் அப்பாவிப் பொதுமக்கள்தானே! என்ன செய்யிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## செல்லத்துரை அன்னலிங்கம்



(இளைப்பாறிய காணிப்பதிவாளரும், யாழ். மேலதிக மாவட்ட பதிவாளரும், முன்னாள் உடுவில் பிரிவு விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும்)

எனது தொழிலுக்கு முன்னோடியாய் இருந்து, இனிதே பல உதவிகளைப் புரிந்த அன்னாரது பிரிவு எனக்கு பேரிழப்பாகும். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

திருமதி சியாமளா இரத்தினசேகர், விவாகப்பதிவாளர், வலிகாமம் மேற்கு, பிறப்பு, இறப்பு பதிவாளர்(பதில்), பண்டத்தரிப்பு.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (சி-5/2630)

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா சந்திரசேகரன் (ரிங்கர் ரகு)



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் தற்போது 31, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சந்திரசேகரன் நேற்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29.11.2010) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள், உறவினர்.

31, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (106618)

## செல்வி நாகலிங்கம் பவதீஸ்வரி



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நாகலிங்கம் பவதீஸ்வரி நேற்று (28.11.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் நல்லம்மா தம்பதியினரின் புதல்வியும், பாக்கியலீலா, பாக்கியரத்தினம், நாகராஜா, சிவராஜா, புஸ்பராஜேஸ்வரி, செல்வராஜா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை, கணபதிப்பிள்ளை, ரதிதேவி, விக்னேஸ்வரி, உதயகுமார், சியாமளா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2010) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (சி-5/2637)

## தனகோபாலசிங்கம் இராகுலராஜா



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்,கனடா, ஸ்காபரோவில் வசித்து வந்தவரும் Chester Ltd. இல் கடமையாற்றியவருமான தனகோபாலசிங்கம் இராகுலராஜா 24.11.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனகோபாலசிங்கம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்புமகனும், வை. மகாலிங்கம்-சுகிர்தமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும், ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், பிரீத், கபீனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுலோசனாதேவி மற்றும் சிறீஸ்கந்தராஜா(சிறி), ஜெயராஜா(ஜெயா), றஞ்சனா தேவி (றஞ்சனா), சற்குணராஜா (சற்குணா), தவராஜா (தவம்), பிரேமலாதேவி (பிரேமலா), சுரேந்திரன்(சுரேஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனடாவில் வசிப்பவர்களான நாகலிங்கம், பவளராணி (நந்தினி), வடிவாம்பிகை (குமுதா), சபாரட்ணம்(சபா - EZ Driving School), ஈசா, கவிதா, தேவராஜா (தேவன்- En Route), வினோதா(வினோ), ஞானசேகரம்- சுகிர்தா, துஷ்யந்தினி (நந்தினி) ரவிநாதன், சுகந்தினி- சாந்தகுமார், ஜெயந்தினி (ஜெயந்தி) கிருபாகரன் (கிருபன்), சுபேஷினி-சிறீதரன், டக்சாயினி மற்றும் காண்டீபன்- ரம்யா, நிசான், நிவேதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நகுஷன், சஞ்சியா, ஆகாஷ், மோகன், ரூபன், ரம்யா, அன்றிக், டிலான், சாயினி, தனுஸ், மிதுசன், தனோஜன், சுலோயன், சானா, நிதுஷா, வினூஸ், டினோஜா ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் நவநீதன், நிவேதா, துஷான், கீர்த்திகன், அனுருத்திகா, சண்முகி ஆகியோரின் அன்பு மாமனாரும் நடராஜா (நடா)-கலைவாணி ஆகியோரின் அன்பு மருமகனும், அரியநாயகம் (குட்டி), பத்மினி தேவி, சஞ்சிகா ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு:
சிறி : 4168914004
தவம் : 4168236477
தேவன் : 6472936154
சபா : 4169313444
கிருபன் : 4164566022
கனடா.

தகவல்:
குடும்பத்தினர்.
(106613)

---

வடக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாப் பகுதியில் அதிகூடிய மழை பெய்யும். அவ்வாறே வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் கடும் மழை பெய்ய வாய்ப்புண்டு என்று அவர் மேலும் கூறினார்.

அதிகரிக்கும் மழையால் மேலும் மண் சரிவுகளும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட இடமுண்டு. மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படும் மின்னல்கள் அபாயகரமானவை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# மரண அறிவித்தல்

## கதிரவேலு கதிர்காமநாதன் (பிள்ளையார்)



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு கதிர்காமநாதன் நேற்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாஸ்கரி தேவியின் அன்புச் சகோதரரும், விக்கினேஸ்வரமூர்த்தியின் மைத்துனரும், சாளினி, சாரங்கன், சாருமதி, சாருஜன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2.30 மணியளவில் மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
[விக்கினேஸ்வரமூர்த்தி - சிவா, சாளினி, சாரங்கன், சாருமதி, சாருஜன்]

தொடர்புக்கு :
0776607577
(சி-5726/42)

## வாடகைக்கு வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்று குறுகிய காலத்துக்குக் குடியிருப்பதற்கு வீடொன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு : 0714220002

## தவறிவிட்டது

இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியுடைய தாவீது செபமாலை என்பவருடைய காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் வங்கிப் புத்தகம், அதே பெயருடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (பப்பாச்சி பாண்ட் வாத்திய உரிமையாளர்) என்று பதியப்பட்ட Visiting Card உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் நீல நிற பாக்குடன் மானிப்பாய்க்கும் கட்டுடைக்கும் இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவவும் (சன்மானம் வழங்கப்படும்)

அரசடி வீதி, கட்டுடை., மானிப்பாய்.
0777176998, 0212228756
(106623)

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பொருளியல் மற்றும் இரசாயனவியல் பாடங்களும், க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்கள் குழுவாகவும் பிரத்தியேகமாகவும் கற்றுக்கொடுக்க ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 0750392379 (106616)

## புறொயிலர் விற்பனைக்கு

நிறை கூடிய புறொயிலர் கிலோ 300/=, சுத்தம் செய்யப்பட்டது கிலோ 450/= திங்கள், புதன், சனி, ஞாயிறு தினங்களில் பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குமரன் பாம், 227, (நரியன் குண்டுக்கு அருகில்), பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (106640)

## German, Swiss மொழிகள்

German, Swiss மொழிவகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Embassy இல் கேட்கப்படும் Certificate இற்கு ஏற்றவாறு Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகின்றது.

No. 10, Palaly Road, Jaffna. 0771604823. (106640)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சிவன்கோயிலடி தெற்கு வீதிப் பக்கமாக உள்ள காணிகள் விற்பனைக்கு உண்டு.

காணிகளின் விவரம்

1.சிவன்கோயில் குளத்துக்குத் தெற்குப் பக்கமாக உள்ள பழுதடைந்த வீட்டுடன் உள்ள காணி 5 பரப்பு.

2. வெறுங்காணி 8 பரப்பு.

3. வயலுடன் சேர்ந்த காணி 6 பரப்பு.

தொடர்புகளுக்கு: 021 321 6682

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நாகலிங்கம் (சரவணமுத்து)

(சாஜ்சான், சீமெந்துக் கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்)



நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் றொட்டியாலடி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகலிங்கம் (சரவணமுத்து) நேற்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா பறுவதம் தம்பதியினரின் அன்பு மருமகனும், முருகையா, அன்னபாக்கியம், காலஞ்சென்ற தேவராசா மற்றும் கலாதேவி நாகராசா(கனடா), ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனவதி, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் வர்ணகுலசிங்கம், கௌசலா, சிவகவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசாத்தி, செல்லம்மா, சுப்பிரமணியம், சின்னத்தங்கம் மற்றும் நல்லம்மா, அமுதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நளாயினி, புலேந்திரன், புருஷோத்தமன், தவபாரதி, ஜெயகாந்தன், வாசுகி, தர்மவாணி, பிரியதர்ஷினி, கிருஷ்ணரூபன், சுகந்தினி, கஜேந்திரன், சாந்தகுமார், தேவகன், அபிஷேகன், ஆதனா, பதுஜன், யரணிஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக வதிவிடத்தில் இன்று (29.11.2010) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம், பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

றொட்டியாலடி,
சுன்னாகம். (சி-5/2635)

## தலைவர்களுக்கான மாநாடு
## LEADERSHIP SUMMIT

அனைத்துப் போதகர்கள், தலைவர்கள் ஆகியோருக்கான அருமையான சந்தர்ப்பம்

விடயங்கள்:

திருச்சபையின் தரிசனத்தை உண்மைத்துவத்தோடு நிறைவேற்றுதல்

- Serving the Vision of the House
- தலைமைத்துவத்தை கனப்படுத்தல்
- Giving Honor to Leadership
- இறைவனுக்காகச் சிறந்த முறையில் செயல்படுதல்
- Doing your Best for God

Resoure Persons

Pastor : David Fernandes (Senior Pastor: Calvary Worship Center, Melbourn, Australia)

Pastor : A.C.Christopher (Senior Lecturer : Lanka Bible College & Seminary, Peradeniya)

இடம் : அசெம்பிளி ஒப் தேவாலயம், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

காலம் : கார்த்திகை 30, மார்கழி

நேரம் : காலை 9.00 - பி.ப. 2.00 மணி வரைக்கும் (மதிய உணவு வழங்கப்படும்)

பதிவுக் கட்டணம் : ரூபா 50.00 மட்டுமே


தவறாது கலந்துகொள்ளுங்கள், திருச்சபையின் தரிசனத்தை நிறைவேற்றுங்கள்.

(சி-5/2638)

# 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05★06★1928

இறப்பு 29★11★1980



## அமரர் கந்தையா செல்லத்துரை

(முன்னாள் அரசாங்க பொதுச்சேவை தொழிற்சங்கத் தலைவர்)

அன்று தொழிற்சங்கத் தலைவனாய்
எல்லோர் மனத்திலும் இடம்பிடித்தவனே
என்றும் எம் குலத்தை நிலையாய் நின்று காத்தவனே
எம்மைப் பிரிந்து முப்பது ஆண்டுகள் சென்று மறைந்தும்
எம் மனம் ஆறவில்லை உம்மை நினைக்கையிலே....

என்றும் தங்கள்
நினைவால் வாடும்:
குடும்பத்தினர்.

இல. 45, றக்கா லேன்,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (சி-5/2636)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தென்னிலங்கையருக்குக் கண்ணைக் குத்தும் யாழ்ப்பாணத்தின் தேசவழமைச் சட்டம்

சிங்கள மக்கள், யாழ்ப்பாணத்தில் குடியமர்வதற்கு ஏதுவாக யாழ்.தேச வழமைச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவசேன நாயக்கா, வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பேசுகையில் வலியுறுத்தி இருக்கிறார்.

கொழும்பில் சகல இனமக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் சகல இனங்களும் வாழவேண்டும். யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் குடியமர்வதற்கு வசதியாக அங்கு நடைமுறையில் உள்ள தேச வழமைச் சட்டத்தை மாற்ற வேண்டும் - நீக்க வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ தெரிவித்திருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற அரசாங்கத்தின் புதிய கோட்பாட்டை ஆதரிக்கும் வகையில், அதற்குப் பக்கபலம் சேர்க்க எதிர்க்கட்சி உறுப்பினர் வழிசொல்லிக் கொடுக்கிறார்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை நடத்தி தமிழர்கள் அவற்றை தமது பூர்வீக பிரதேசங்கள் என்று உரிமை கொண்டாடுவதை முற்றாகத் தடுத்துவிட வேண்டும் என்பது இன்றைய அரசாங்கத்தின் உத்தி யோக பூர்வ கொள்கையாக மாறியுள்ளது தெரிந்ததே.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொட்டு, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் , அரச சார் உயர் அதிகாரிகள், அரசுக்கு திட்டங்களை வகுத்துக்கொடுக்கும் புத்தி ஜீவிகள், கல்விமான்கள் வரை இதற்கான கருப்பொருள் ஆழமாக வேரூன்றி உள்ளது ஏற்கனவே தெரிந்த ஒன்று தான்.

தமிழ் மக்களின் பூர்வீக உரிமைகளை மறுத்தும், மறைத்தும், பறித்தும் அவர்களை ஒடுக்கியும் அடக்கியும் ஆளும் மேலாண்மை போக்கிலும் நோக்கிலும் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இடையில் எந்த வேறுபாடும் வேற்றுமையும் இல்லை. அவை ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது தெரிந்ததே.

இலங்கை அரசியலில் அது அடிக்கடி காலத்துக்கு காலம் நடந்தேறுவது சர்வ சாதாரணமாகி விட்டது. அந்த வகை சார்ந்ததே ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனநாயக்கா கிளறிவிட்டிருக்கும் -தேச வழமைச் சட்டத்தை மாற்ற வேண்டும் - நீக்க வேண்டும் - என்ற கோரிக்கை.

யாழ்ப்பாணத்தின் முதற்குடிகள் இந்தியாவின் மலபார் பிரதேசத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் அவர்கள் தமது பாரம்பரிய வழமைகளை கடைப்பித்து வாழ்ந்தனர் என்பதும் சரித்திரம். இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி நடத்திய போர்த்துக்கேயர் தமது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய வழக்கங்களை தேசவழமைச் சட்டமாக்கினர். அதுவே இன்னமும் நடைமுறையில் உள்ளது.

இதேபோன்று கண்டிச் சிங்கள மக்களுக்கு என கண்டியர் சட்டம், முஸ்லிம் மக்களுக்கென முஸ்லிம் சட்டமும் தனித் தனியே அவர்களின் இன, மத தனித்துவங்களைப் பேண உதவி வருகின்றன.

கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்கள் காணி வாங்கி, வீடு கட்டி வசிப்பதையும் தொழில் புரிவதையும் உதாரணம் காட்டி, சிங்கள இனவாதப் போக்குடையவர்கள், யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் காணி வாங்கி , வீடுகட்டி வாழும் நிலையை உருவாக்கத் திட்டமிட்ட முறையில் செயற்படுகிறார்கள்.

அதன் பிரதான பொறிமுறையாக யாழ்ப்பாணத்தில் காணிகளை வாங்குவதற்கு தரகர்களை அமர்த்தி இரகசியத் திட்டம் ஒன்றை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர் என்ற அரசல் புரசலாக தகவல்கள் கசிந்துவருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்து மக்களின் காணிக்களை பணம் கொடுத்து வாங்குவதற்கும் இப்பிரதேசத்தின் விசேட சட்ட முறையாக கடந்த பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் உள்ள தேசவழமைச் சட்டம் தடுத்து நிற்கிறது.

அந்தச் சட்டத்தின் கீழ் முதுசொத்துக் காணியாக இருந்தாலும் சரி, தேடிய தேட்டமாக இருந்தாலும் சரி, அதற்கு உரித்தானவர்கள் தமது சொந்த விருப்பத்துக்கு ஏற்பவோ உடனடியாகவோ அதனை விற்க முடியாது.

ஒரு பிரதேசத்தில் உள்ள காணியை, மற்றொருவருக்கு விற்க விரும்பும் உரிமையாளர் அது பங்குச்சொத்தாக இருந்தால் என்ன, சீதனத்தின் வழி வந்ததாக இருந்தால் என்ன அதில் சம்பந்தமுடையவர்கள் அறியும் பொருட்டு அந்ததந்தப் பகுதி உள்ளூராட்சி சபைகள் (பிரதேச சபைகள், நகர சபைகள்) மூலம் பிரசித்த அறிவித்தல் கொடுத்து எவரும் ஆட்சேபம் தெரிவிக்காதிருக்கும் பட்சத்திலேயே விற்பனை செய்யமுடியும்.

யாழ்ப்பாணத்தில் அநேகமான காணிகள் பங்குச்சொத்துகளாகவும் சீதனக் காணிகளாகவும் இருப்பதாக வழக்குரைஞர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள காணிகளை வெளியார் பணம் கொடுத்து வாங்குவதற்குப் பல நடைமுறைகள் உள்ளன என்பதும் தகவல்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்துக் காணிகளை வாங்க முயன்று இயலாமல் போனவர்களின் அனுபவத்தின் வெளிபாடுகளை உள்வாங்கிக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவசேன நாயக்க இது விடயத்தை சபையில் வெளிப்படுத்தி இருக்கிறார் - கிளறியுள்ளார் - போலும்!

தேசவழமைச் சட்டத்தின் கீழ் வாங்கமுடியாத யாழ்ப்பாணத்துக் காணிகளை கொழும்பு நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்தும் பெறுவது மிகக் கஷ்டம். தேசவழமைச் சட்டம் அதற்குக் குறுக்கே உள்ளது. அதனை சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கி, வடக்கில் அரச ஆதரவுடன் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் இராணுவக் குடும்பங்களை குடி யேற்றும் திட்டங்களுக்குப் புறம்பாக, காணிகளை பணத்துக்கு வாங்குவதற்கு வழி செய்வதற்கான மார்க்கங்களை செயற்படுத்துவதற்கு வற்புறுத்துகின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் தமக்கு அக்கறை இருப்பதாக இந்தியா உட்பட வெளிநாடுகளுக்குக் காட்டிக் கொண்டு- போர் முடிவுற்று பத்தொன்பது மாதங்கள் கடந்தும், தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படும். அதற்குத் தமிழ்க் கட்சிகளோடு பேச வேண்டும் என்று காலம் கடத்தி வரும் அரசாங்கத்துக்கு,-

உள்ளார்ந்த எதிர்மறை ஏற்பாடுகளைச் செய்து வரும் அரசாங்கத்துக்கு, வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்புக் கொள்ளி எடுத்துக்கொடுக்கும் மந்திரி போன்று-

பிரதான ஐக்கிய தேசியக்கட்சி தனது உறுப்பினர் ஊடாகச் செயற்பட்டு வருகிறது. இதற்கு முன்னரும் ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா உட்பட பலர் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது தெரிந்ததே.

இந்தப் பின்னணில் அல்லது இலட்சணத்தில் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமைகளை வழங்கும் தீர்வு எதுவும் கிடைக்குமா என்பது மிக நீண்ட தொலைத் தூரம் வரை இருளாகவே தெரிகிறது.

---

யாழ். மாவட்டத்துக்குத்தேவையான

# மின்சாரம் வழங்க ஒப்பந்தம் செய்தவர்கள் தாமதம் செய்வதே மின் தடைக்குக் காரணம்

### சுன்னாகம் மின் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்.மாவட்டத்தின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவுக்கு மின்சாரத்தை வழங்க ஒப்பந்தம் செய்தவர்கள் அதனை உரிய வகையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் யாழ். குடாநாட்டில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுகின்றது.

சுன்னாகம் மின்சார சபையின் மின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் கருத்துத் தெரிவித்த போதேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அக்கிரிக்கோ நிறுவனத்துடன் 15 மெகா வாட்ஸ் மின்சாரத்திற்கும் 'நொதேன் பவர் நிறுவனத்துடன் 30 மெகா வாட்ஸ் மின்சாரத்துக்கும் ஒப்பந்தம் எழுதப்பட்ட போதிலும் நொதேர்ன் பவர் நிறுவனம் இது வரை 15 மெகா வாட்ஸ் இற்கு குறைவான மின்சாரத்தையே வழங்குகின்றது. யாழ்.குடாநாட்டு மக்களின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய 37 முதல் 40 மெகாவாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றது - என்றார்.

உரிய நிறுவனங்கள் மின்சாரத்தை வழங்க உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் வேறு நிறுவனங்களைத் தெரிவு செய்தேனும் யாழ்.குடாநாட்டு மக்களின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இதற்கு பதிலளித்து உரையாற்றும் போது குறிப்பிட்டார். (ம-68)

# இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு போட்டியின்றிச் சுமுகமாக இடம்பெற்றது

வலி.வடக்கு, நவ.29

இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் ஆறு பிரதேசங்களுக்கான வேட்பாளர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அகில இலங்கை ரீதியில் இந்தத் தேர்தல் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் எதிர்பார்க்கப்பட்டளவு இந்தத் தேர்தல் சூடுபிடிக்காத நிலையிலும் குறிப்பிட்ட இடங்களில் சூடுபிடித்துக் காணப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து ஏகமனதாக போட்டி இன்றி தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

உடுவில் பிரதேச செயலகம் - ரவிச்சந்திரன் குகராஜ், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் கனியூட் மேரியன் மக்கிலின்

இப்பிரதேச செயலகத்திற்கு மேலும் ஒருவர் வேட்பாளராக விண்ணப்பித்த போதிலும் இறுதி நேரத்தில் அவர் தனது வேட்புமனுவை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

வேலணை பிரதேச செயலகம் - அம்பிகை பாகன் ஸ்ரீராகவன், பருத்தித்துறை பிரதேச செயலகம் - கேசவநாதன் கோகுலானந்தன், நல்லூர் பிரதேச செயலகம் - இராசலிங்கம் ரவீந்திரன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு - கந்தையா நவதர்சன், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு - நஜீதரன்.

இவர்கள் அடுத்த மாதம் கூடவுள்ள தேசிய மட்டத்திலான இளையோர் நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-86-72)

## சிரேஷ்ட அமைச்சர்களுக்கு 7 மில்லியன் வரை நிதி ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 29

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அமைச்சர்களுக்கு தலா 5 மில்லியன் தொடக்கம் 7 மில்லியன் ரூபாவரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சாதாரணமாக மிகச் சிறிய அமைச்சுக்கு கூட ஏறத்தாழ 20 மில்லியனுக்கும் 25 மில்லியனுக்கும் இடைப்பட்ட தொகை தேவைப்படும் எனவும் அதற்கென தனியானதொரு அமைச்சு இல்லாத படியாலும் அவர்களது அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் அமையவுள்ளதாலும் சிரேஷ்ட அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீடு இவ்வாறு குறைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

## நடமாடும் பற்சிகிச்சைசேவைக்கு நவீன வசதிகளுடைய வாகனம்



யாழ்ப்பாணம், நவ.29

சுகாதாரத் திணைக் களத்தின் யாழ். அலுவலகத்தில் நடமாடும் பற்சிகிச்சைச் சேவைக்கென நவீனவசதிகள் கொண்ட வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த நவீன வசதி கொண்ட வாகனத்தின் உதவியுடன் யாழ். மாவட்டத்தின் பல்வேறு மக்களுக்கான நடமாடும் பற்சிகிச்சைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. இதன் முதலாவது நடமாடும் சேவை நேற்று சனிக்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# தொடர்ந்து பெய்யும் மழையால் மீள்குடியேறிய மக்கள் பாதிப்பு

கொழும்புத்துறை, நவ.29

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால் அண்மையில் மீளக்குடியேறிய கொழும்புத்துறை, வசந்தபுரம், மணியந்தோட்டப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தறப்பாள் மற்றும் சிறிய ஓலைக் குடிசைகள் அமைத்து குடியிருக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் குடிமனைக்குள் வெள்ளம் புகுந்தமையினால் நிர்க்கதியான நிலையை எதிர்கொள்கின்றனர்.

அப்பிரதேசங்கள் வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. சமையல் செய்யவும், உறங்கவும் உரிய இடங்கள் இன்றி இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில் தஞ்சமடைய கோவில்கள் மற்றும் கட்டட வசதிகள் ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-135)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 14 | 30.11.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | நவமி மு.ப.10.18 வரை |
| நட்சத்திரம் | உத்தரம் பி.இ. 12.28 வரை |
| [illegible] | 10.44 -12.44 வரை |
| ராகுகாலம் | 03.14 -04.44 வரை |

# இலங்கை முதலீடு செய்துள்ள வெளிநாட்டவருக்கு புதிய விசா

கொழும்பு, நவ. 29

இலங்கையில் முதலீடுகளை செய்துள்ள வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விரும்பியபோது வந்து செல்வதற்கான விசா முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த விசாக்கள் வழங்கப்படவுள்ளது. இலங்கையில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு வர்த்தகர்கள் இதுவரைகாலமாக சுற்றுலா விசாக்களிலேயே இலங்கைக்கு வருகின்றனர்.

எனவே விரும்பியபோது தடைகள் இன்றி இலங்கைக்கு வந்து செல்வதற்காக 'மல்டிபல்' விசா முறையொன்றை அரசு அறிமுகப் படுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2011

நகரசபை கட்டளைச் சட்டத்தில் 1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தில் திருத்தப்பட்ட 255 அத்தியாயமான 178(3)ஆம் பிரிவின் பிரகாரம் 2011ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் 30.11.2010ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி வீ.சிவகொழுந்து,
செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
(சி/572628)


# மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

## பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர்

யாழ்ப்பாணம், நவ.29

மாணவர்களின் அறிவையும், பயிற்சியையும் வளர்ப்பதற்காகவே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன்.

மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற மதிப்பளித்தல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இந்தப் பாடசாலையில் நான் படிக்காத போதும் சிறுவயது முதல் இந்த வித்தியாலயத்தை அவதானித்து வந்துள்ளேன்.

எனது நண்பர்கள் பலர் இந்தப் பாடசாலையில் கற்று சிறந்த கல்வியியலாளர்களாக உருவாகியுள்ளனர்.

ஒருநாள் உழைப்பால் அல்ல நீண்டகால கடின உழைப்பால் பரிணாமத்தைப் பெற்றுள்ள இந்த வித்தியாலயம் பெரியோர்களின் கடின உழைப்பால் எப்போதும் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கரவெட்டி மக்களை, சமூகத்தை, மண்ணை பெருமைகொள்ள வைக்கும் நிலைக்கு சிறந்த பாடசாலையாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற முதுமொழிக்கு இணங்க 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது.

சிறந்த கட்டுக்கோப்பை ஏற்படுத்த இப்பரீட்சை நடத்தப்படுகின்றது.

கல்வி அறிவை, பயிற்சிகளை அளவிடும் பரீட்சையாக மாணவர்களுக்கு இப்பரீட்சை நடத்தப்படுகின்ற போதிலும் ஒருவருக்கு இயற்கையாகக் கிடைக்கக் கூடிய அறிவு, பயிற்சிகள் மூலம் அவரது ஆற்றல்களை மேம்படுத்த இந்தப் பரீட்சை பெரிதும் உதவுகின்றது. பரிசில்கள், ஊக்குவிப்புக்கள் வழங்குவது வரவேற்கத்தக்கது. இவற்றின் மூலம் ஏனைய மாணவர்களுக்கு உற்சாகம் ஏற்படும்.

இந்த வித்தியாலய வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருமைக்குரியவர்கள்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் பேசுகையில்:

வளங்கள் குறைந்த இவ்வித்தியாலயத்தில் 20 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வடமராட்சி வலயத்தில் முதலாவது இடத்தையும், யாழ்.மாவட்டத்தில் மூன்றாவது இடத்தையும் இந்த வித்தியாலயத்துக்குப் பெற்றுக்கொடுத்துள்ளனர். இது போன்ற முன்னேற்றத்திற்கு அதிபரின் தலைமைத்துவமே காரணமாகும்.

இந்தப் பாடசாலைக்கு ஒரு மாடிக்கட்டடம், ஒரு கலையரங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குக் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் புலம்பெயர் உறவுகளின் உதவிகளைப் பெற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

(204-236)

# விநாயகர் விரதம்

கொடிகாமம், நவ.29

வரணி, இடைக்குறிச்சி, சேவலப்பிட்டி கந்தசாமி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் விநாயகர் விரத பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்து இருபத்தியொரு நாள்கள் இப்பூசைகள் இடம்பெறும்.

விரத நாள்களில் விநாயகர் கதை படிக்கப்பட்டு பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

(204-122)

# சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல்

கொடிகாமம், நவ.29

சனசமூக நிலையங்களுக்கிடையேயான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குச் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக வரணி உப அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறும் 2009ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை, கணக்காளர் [illegible] எடுத்துவருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (204-122)


# Children's World

Child Development Centre

Pre School

சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கைக்கு அமைவானது.

**Open The Door To Your Child's Future**



- Language Development
- Knowledge Development
- Skill Development
- Values Development
- Speach & Drama Class.
- Creative Arts and Crafts
- Gama Abacus in Rainbow Programme.

(மனக்கணிதம், ஞாபகக் கலை என்பவற்றை விருத்தி செய்யும் விசேட பயிற்சி நெறி)

கடந்த வருடம் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் அனைவரும் பிரபல பாடசாலைகளில் தரம் 01 அனுமதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு தவணையும் இலவச கல்விச் சுற்றுலா

2011ம் ஆண்டுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகிறது.

2 1/2 வயது முதல்



Play- based "Learning Through Play" British curriculum

No 14, 2nd Lane,Palaly Road,Jaffna. T.P ;- 0777729525


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2177 திகதி 27 – 11 – 2010

ஆங்கில எழுத்திற்கும் D

வெற்றி எண்கள் 09 16 56 70

போனஸ் இல: 62

ஜக்பொட் பரிசு ரூ. 24,138,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 170378 | 20/- | 3,407,560/- |
| 2 இல | 12153 | 100/- | 1,215,300/- |
| 3 இல | 249 | 1,000/- | 249,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6962 | 40/- | 278,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 522 | 1,000/- | 522,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 24,138,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 8069 | 100/- | 806,900/- |
| 2 இல + போனஸ் இல | 390 | 500/- | 195,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 308 | 200/- | 61,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,269,340/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 199067 | | 8,869,340/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 302576415-8-32 |
| கம்பஹா | 302575313-4-23 |
| மொணராகலை | 302570332-4-45 |
| கம்பஹா | 302575338-7-47 |
| கேகாலை | 302577051-9-09 |
| கம்பஹா | 302575370-4-39 |
| யாழ்ப்பாணம் | 302584634-2-07 |
| மாத்தளை | 302574044-2-03 |
| திருகோணமலை | 302577696-0-41 |
| பதுளை | 302577445-7-46 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 24,603,525/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


# போகுட் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகும் கணினிகள் கற்கைப் பிரிவும்

தம்பசிட்டி, பருத்தித்துறை

மேற்படி கல்வி நிலையத்தால் புதிய கல்வி ஆண்டிற்குரிய (2011) கலைமுதற் பிரிவு (GAQ) விரிவுரைகள் 04.12.2010 சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

குறிப்பு: மேலதிக விவரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகத்தினர்.

பருத்தித்துறை.

(சி/572624)


# ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் - 77
திகதி - 27.11.2010

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: K — அதிர்ஷ்ட இலக்கம்: 04 — வெற்றி இலக்கம்: 4 0 3 5 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K 04 4 0 3 5 4 | ரூ. 23,635,108.00 | - |
| 1 பரிசு | 04 4 0 3 5 4 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 4 0 3 5 4 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 0 3 5 4 | ரூ. 10,000.00 | 22 |
| 4 பரிசு | 3 5 4 | ரூ. 1,000.00 | 248 |
| 5 பரிசு | 5 4 | ரூ. 50.00 | 2438 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | 23654 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 0 3 5 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 4 0 3 | ரூ. 100.00 | 243 |
| 9 பரிசு | 4 0 | ரூ. 50.00 | 2476 |
| 10 பரிசு | K | ரூ. 20.00 | 9767 |
| 11 பரிசு | K 04 | ரூ. 100.00 | 1046 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,735,020.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.23,635,108.00


# வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், மற்றும் பொதிகள் சேவை



**Arrul Global Express**

International Courier & Cargo Service

24 மணி, மற்றும் 72 மணிநேரத்தில் குறித்த முகவரியில் பொருட்கள் ஒப்படைக்கப்படும்

**மிகக்குறைந்த கட்டணங்கள்**

அதிவிரைவு சேவை
Speed Courier Service

- லண்டன் 800/=
- கனடா, அமெரிக்கா, நோர்வே, சுவிஸ், டென்மார்க் அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஜேர்மனி இத்தாலி 950/=

சாதாரண சேவை (Normal Service)

- லண்டன், சுவிஸ் 350/=
- கனடா 450/=

Arrul Global Express
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
0212226113

Arrul Global Express — Arrul Global Express மன்னார் வீதி வவுனியா

E-mail : arrulexpress@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பு; விழிப்புணர்வு வாரம் டிசெம்பரில்

யாழ்ப்பாணம்,நவ.29

டெங்கு நோயின் தாக்கம் இலங்கையில் பரவலாகக் காணப்படுவதைத் தொடர்ந்து மீண்டும் டெங்கு ஒழிப்பு விழிப்பு வாரத்தை நடைமுறைப்படுத்த இலங்கை சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அறிக்கை அனைத்து மாகாண, மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகங்களுக்கும் அமைச்சினால்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருவதனால்நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த மாதங்களில் டெங்குத் தாக்கம் அதிகரித்துப் பலர் இறந்துள்ளதையடுத்து அனைத்துப் பிராந்திய சுகாதார நிலையங்களையும் சேர்ந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதர பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொலிஸார், படைத்தரப்பினர் ஆகியோர் இணைந்து மேற் கொண்ட நடவடிக்கைகள் காரண மாக டெங்கு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

தற்போது பெய்துவரும் மழையினால் மீண்டும் டெங்கு நோய் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதைத் தொடர்ந்து டிசெம்பர் முதலாம் திகதி ஆம்திகதியில்இருந்து ஒருவார காலத்துக்கு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வாரமாக சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-86)

# பதிவாளர்சேவை தரம் iii நியமனம்; தமிழ் மொழிமூலமானோர் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

பதிவாளர் சேவையின் தரம் மூன்று பதவிகளுக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றிய தமிழ்மொழி மூலமான பரீட்சார்த்திகள் எவருக்கும் நியமனம் வழங்கப்படாமை குறித்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டுக்கான இந்தப்பரீட்சை கொழும்பில்இடம் பெற்றது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றிவர்களுக்கான புள்ளி, புள்ளியடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நிலை என்பன தொடர்பான விடயங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் தமிழ் மொழி மூலமான பரீட்சாத்திகள் எவரும் அந்தப் பரீட்சையில் சித்தியடையவில்லை எனக் காரணம் கூறப்பட்டு சிங்கள மொழி மூலமான பரீட்சார்த்திகள் 32 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிக கவனம் எடுத்து, நிலைமையை தெளிவுபடுத்துமாறு தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகள் கேட்டுள் கேட்டுள்ளனர்.

(ம-14)

# தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு சமையல் அடுப்புகள் வழங்கல்

தென்மராட்சி,நவ.29

உலக உணவுத் திட்ட உதவியுடன் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு சமையல் அடுப்பு தயாரித்து வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 'யூ நொப்ஸ்' நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

களிமண்,சாணி,உமி ஆகிய மூலப் பொருள்களைக் விகிதாசாரப்படி கலந்து சாந்து தயாரிக்கப்பட்டு செங்கல் மற்றும் இரும்புக் கம்பி வளையம் ஆகியவற்றின் உதவியுடன் இந்த அடுப்புக்கள் அமைக்கப்படுகின்றன.

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 19 பாடசாலைகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக யூநொப்ஸ் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் வேலைத்திட்டத்தில் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் உலக உணவு ஸ்தாபனம் இதற்காக நிதி உதவியை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(204-122)

## எதிர்பார்ப்பு...



ஆரம்பம்:-வலி.வடக்கு மீள்குடியேற்ற நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. முன்னதாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரும் உள்ளனர். (9-86)

# அச்சுவேலிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் சமூக மேம்பாட்டுக் கருத்துக்கள் ஒலிபரப்பு

அச்சுவேலி,நவ.29

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் ஒலிபரப்பு இணைப்புச் செய்யப்பட்ட வாகனத்தில் சமூக மேம்பாட்டுக்கான கருத்துக்கள் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேச பொலிஸ் நிலைய எல்லைப் பரப்பை உள்ளடக்கிய சகல கிராமங்களிலும் வீதி வீதியாகச் சென்று சமூக மேம்பட்டுக்கான கருத்துக்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுகின்றன.

போதைப்பொருள் பாவனையைத் தடைசெய்தல், பொதுச் சுகாதார மேம்பாடு, டெங்கு ஒழிப்பு, சமூக விரோதச் செயல்களை கண்காணித்தல் பொலிஸார் பொதுமக்கள் நல்லுறவு உள்ளிட்ட பல் வேறு கருத்துக்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறுகையில்:-

பொதுமக்கள் மற்றும் இளைஞர்களின் நல்வாழ்வையும் சமூக மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு அச்சுவேலி பொலிஸ் நிலைய பிரதேசம் முழுவதும் மேற்படி அறிவுறுத்தல் வழங்கும் செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

(201-11)




# சட்டஉதவி வழங்கல்

யாழ்.குடாநாட்டில் இடப்பெயர்வுகளின்போது தொலைந்து அல்லது காணாமல்போன காணி உறுதி, காணிப்பதிவக சுருக்கப் பிரதி ஆகியவற்றை இலவசமாகப் பெற்றுத் தரும் சட்ட உதவித் திட்டம் வழங்கல் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ள இந்த இலவசசட்ட உதவிச் சேவையில் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஜே/89 தொடக்கம் ஜே/128 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை பராமரிப்பு, விவாகரத்து போன்ற வழக்களுக்கான சட்ட உதவிகளும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகச் சட்ட உதவித் திட்ட இயக்குநர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார். (204-135)

# இந்தியாவின் வீட்டுத்திட்டத்துக்கு மேலும் பயனாளிகள் தெரிவு

தென்மராட்சி,நவ.29

இந்திய அரசினால் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் ஒரு தொகுதியினர் இணைக்கப்படவுள்ளனர்.இதற்கான விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்த 2009 மே 18 ஆம் திகதிக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து மீளக்குடியமர்ந்தோர் அதியுயர் பாதுகாப்பு வலயம், மற்றும் படைமுகாம், காவலரண் போன்றவற்றால் வீடுகளை இழந்தோர் ஆகியோரே இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் ஏற்கனவே பிரதேசத்தில் 135 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-207)

# நெடுந்தீவில் வீடமைப்பு

நெடுந்தீவு,நவ.29

ஜனாதிபதியின் பிறந்த நாளையொட்டி நெடுந்தீவில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள அல்பிரட் மரிய வகிண்டன் குடும்பத்துக்கு ஒரு வீட்டை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மத்தி கிராம உத்தியோகத்தர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் நெடுந்தீவு ஈ.பி.டி.பி பொறுப்பாளர் ராஜீவ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வீட்டுக்கான அடிக்கல்லை நட்டு வைத்துள்ளார். (204-111)

# வீதியோரத்தில் கழிவுப் பொருள்கள்; மக்கள் பயணிப்பதில் பெரும் சிரமம்



யாழ்ப்பாணம்,நவ.29

கச்சேரி கிழக்கு வீதியோரத்தில் பொதுமக்கள் கழிவுப் பொருள்களைப் போடுவதால் அந்த வீதியால் பயணிப்பவர்கள்சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியில் பொதுமக்களால் போடப்படும் கழிவுப் பொருள்களை மாநகரசபை ஊழியர்கள் கவனிக்காமல் விடுவதன் காரணமாகக் குப்பைகள் தேங்கித் துர்நாற்றம் வீசுகின்றனவென தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பலரும் தமது மூக்கைப் பொத்தியபடி செல்வதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவே கழிவுப்பொருள்களை அகற்றுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(204-15)

# வீதி அகலிப்பு நடவடிக்கைகளின் போது யாழ்.இந்துக் கல்லூரியைக் கவனத்தில் கொள்க

## பாடசாலை அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாண மக்களின் கௌரவம் அவர்களின் பாரம்பரியங்களைப் பேணும் ஒன்றாக விளங்குவது யாழ்.இந்துக் கல்லூரி.

வீதி அகலிப்பின்போது இந்துக் கல்லூரியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு மாற்றுவழிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் கே.கணேசராஜா தெரிவித்தார்.

கே.கே.எஸ்.வீதி அகலமாக்குவது தொடர்பாக நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் இந்தப் பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களுடனான கலந்துரையாடல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் கணேசராஜா மேலும் கூறியதாவது:-

நாச்சிமார் கோவிலில் இருந்து நாவலர் வீதிவரை எமது பாரம்பரியத்தின் சின்னங்கள் ஆலயங்களாக இருக்கின்றன. இவை பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்துக் கல்லூரியின் முன் பக்கம் கே.கே.எஸ்.வீதியில் உள்ளது. அது பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அமைய வீதிகளை அகலிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் இது தொடர்பாகக் கருத்துத்தெரிவிக்கையில்:-

வீதியை அகலப்படுத்துவது தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்கள் பாரம்பரியங்கள், கலாசாரங்களையிட்டுக் கவலைப்படமாட்டாது.

எனவே நாங்கள்தான் உரிய வழிமுறைகளை வழங்கி இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும்.

எமது பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் வகையிலேயே எமது நடவடிக்கைகள் அமையும். பொதுமக்களின் உதவியுடன் தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனால்தான் உங்கள் கருத்துக்களையும் ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

மக்களையும் எதிர் காலத்தையும் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு நீங்கள் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

பொதுமக்களின் சம்மதக் கடிதங்களை கிராம அலுவலர்களின் ஒப்பத்துடன் வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் திருமுறிகண்டி ஆலயச் சூழலில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடம், கட்டணம் செலுத்தி கழிப்பறை ஆகியன 2011 ஆம் ஆண்டுக்கு 01.01.2011 இலிருந்து 31.12.2011 வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 01.12.2010
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 14.12.2010 பி.ப. ஒரு மணிவரை
கேள்வி பரிசீலிக்கப்படும் திகதி: 14.12.2010 பி.ப. 2 மணி

*(கேள்வி திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளித்திருக்கலாம்)*

குறிப்பு: கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தலைவர்/செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தலைமை அலுவலகம், திருமுறிகண்டி என்னும் முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு எனும் முகவரிக்கும் எதிர்வரும் 14.12.2010 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| தோ.இ. விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| 1. வாகனத் தரிப்பிடம் | 500.00 | 5,000.00 | 360,000.00 |
| 2. கட்டண அறவீட்டுக் கழிப்பறை | 500.00 | 5,000.00 | 450,000.00 |

கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச, கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் திருமுறிகண்டி அலுவலகத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.

கேள்விப் பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித் தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போது உள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
திருமுறிகண்டி,
26.11.2010

சொ மாலை திசைவீரசிங்கம்,
தலைவர்.

# கட்டுரைப் போட்டியில் மாணவி முதலிடம்

யாழ்ப்பாணம், நவ.29

ஹற்றன் நஷனல் வங்கி, அகில இலங்கை ரீதியாக நடத்திய கட்டுரைப் போட்டியில், யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி செல்வி. கீர்த்தனா விஜயகுமார் மத்திய பிரிவில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (204-313)

## அதிபர்பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.29

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ். சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்திற்கு வகை-2 பாடசாலை அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு-I, வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களே மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். வலயக் கல்வி அலுவலகத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பார்வையிட்டு அதற்கமைய உரியமுறைப்படி தங்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம்வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (201-311)


## உத்தியோக பூர்வ முடிவுகள்
## சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 577
திகதி 2010/11/27

சுப்பர் இலக்கம்: 10
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 30 35 45 68

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 34,020,542.40 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 310 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 560 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 14,656 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 8,453 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 211,347 |
| [illegible] பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 33,835 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 9,587,360.00
சுப்பர் பரிசு சொந்த ஜீப் வண்டியுடன் மீதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 34,373,148.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


# புதுக்குடியிருப்பு பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளினை 2011ஆம் ஆண்டுக்கு (01.01.2011 - 31.12.2011) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 01.12.2010 - 08.12.2010 நண்பகல் 12மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 14.12.2010 பிற்பகல் 1 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 14.12.2010 பிற்பகல் 2 மணிவரை

*(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)*

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *தலைவர்/ செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தலைமை அலுவலகம், திருமுறிகண்டி* என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு* எனும் முகவரிக்கும் எதிர்வரும் 14.12.2010ஆம் திகதி பிற்பகல் 1மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| தோ.இ. விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| (அ) ஒலுமடு உப அலுவலகம் | | | |
| 01 மாங்குளம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 75,000.00 |
| 02 ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 25,000.00 |
| 03 கோழி இறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 10,000.00 |
| (ஆ) ஒட்டுசுட்டான் உப அலுவலகம் | | | |
| 01 முத்துஐயன்கட்டு இடதுகரை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 75,000.00 |
| 02 ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 25,000.00 |
| 03 கோழி இறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 10,000.00 |
| 04 ஒட்டுசுட்டான் கோழி இறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 10,000.00 |
| 05 கற்சிலைமடு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 75,000.00 |
| (இ) புதுக்குடியிருப்பு உப அலுவலகம் | | | |
| 01 விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 75,000.00 |
| 02 ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 25,000.00 |
| 03 கோழி இறைச்சிக்கடை | 250.00 | 1,500.00 | 10,000.00 |

1) கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச, கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப் படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் திருமுறிகண்டி அலு வலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2) கேள்விப்பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும் போது உள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

3) இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவங்களைப் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப் படுத்திய கடிதமும் சமர்ப்பிக்க வேண்டும்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
திருமுறிகண்டி,
26.11.2010

சொ மாலை திசைவீரசிங்கம்,
தலைவர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

(சி/5/2610)

# அந்தியேட்டி
# வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 02.12.1934 உதிர்வு 30.10.2010

## அமரர் கோவிந்தன் ஆறுமுகம் கந்தசாமி
**K.A.Kanthasamy- J.P All Island- Sworn Translator**

கடந்த 30.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.11.2010) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

22 1/2, விநாயகமுதலியார் றோட்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
021 226 4758.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தால் 186 குடும்பங்கள் கண்டாவளையில் இடம் பெயர்ந்துள்ளன

கிளிநொச்சி,நவ.29

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக கண்டாவளைப் பிரதேசத்தில் 186 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.

மழை வெள்ளம் காரணமாக இவர்களின் வாழ்விடங்கள் நீரினால் சூழப்பட்டுள்ளதால் இவர்கள் பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சில குடும்பங்கள் தமது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். வெள்ளம் வடிந்து நிலைமை சீரடைந்தாலே இவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியும். ஆனால் தொடர்ந்து மழை பெய்து வருவதனால் இது சாத்தியமானதாகத் தெரியவில்லை.

இந்தக் குடும்பங்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அரச அதிபர் மழை வெள்ளம் தொடர்பான மேலதிக அறிக்கைகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையெனத் தெரிவித்தார். (க)

## மாவட்ட மட்டப் போட்டியில் செம்மலை ம.வி சாதனை

முள்ளியவளை,நவ.29

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

''சுபீட்சத்தை நோக்கி'' என்னும் தலைப்பில் இடம்பெற்ற இச்சித்திரப் போட்டியில் தரம் 10 இல் கல்வி கற்கும் எஸ்.கஜேந்திரன் முதலாவது இடத்தையும், வி.நிரூபன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். பி.கஜதீபன், எஸ்.சுயந்தன் ஆகியோர் ஆறுதல் பரிசில்களையும் பெற்றனர். அத்துடன் பங்குபற்றியமைக்கான தெரிவில் எஸ்.கலாநந்தன் சான்றிதழைப் பெற்றார்.

சித்திரபாட ஆசிரியர் இ.கிருபாகரனின் வழிகாட்டலில் பங்குபற்றிய இம்மாணவர்கள் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலையும் மொத்தமாகப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-555)

காத்திருந்து, காத்திருந்து.....



வீண் பொழுது:-முல்லைத்தீவு - செம்மலை - கொக்குளாய் பேருந்தை எதிர்பார்த்து வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலாவத்தைச் சந்தியில் மணிக்கணக்கில் காத்து நிற்கின்றனர். (555)

## புகையிரதப் பாதை சீரமைப்பு

முல்லைத்தீவு,நவ.29

கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரத மார்க்கத்தில் புகையிரதப் பாதைகளைச் செப்பனிடும் பணிகள் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது மாங்குளம் பகுதியில் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் தடைப்பட்டிருந்த கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரத சேவை மீண்டும் ஆரம்பமாகுமென்பதற்கு அறிகுறியாக புகையிரதப்பாதையின் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் புகையிரத சேவை மூலம் வடபகுதி மக்களின் விவசாய உற்பத்திப் பொருள்களை உடனுக்குடன் தென் பகுதிக்கு எடுத்துச் சென்று விற்க முடியும். அத்துடன் தென் பகுதியிலிருந்தும் பொருள்களை இலகுவாகக் கொண்டு வர முடியுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (க-500)

## கரித்தாஸ் - கியூடெக்கின் வாழ்வாதார உதவிகள்

பூநகரி,நவ.29

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச பிரிவிற்குட்பட்ட கொல்ல குறிச்சி கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு நீர் இறைக்கும் இயந்திரங்கள், ஆடுகள் போன்றவையே இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயம், கால் நடை வளர்ப்பு என்பனவற்றை அபிவிருத்தி செய்து மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.

பயனாளிகளின் பட்டியல்கள் கிராம அலுவலரூடாகப் பெறப்பட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. நீர் இறைக்கும் இயந்திரத்துடன் 100 அடி நீளம் கொண்ட நீர்க் குழாய்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-406)

## தொழில்நுட்ப உதவிகள்

நாவற்குழி,நவ.29

வன்னியில் வறிய மாற்றுவலுவுள்ளோருக்கென அமைக்கப்படும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மலசலகூட நிர்மாணப் பணிகளில் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளின் தொழில்நுட்ப அதிகாரிகளின் உதவி பெறப்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளில் போதிய தொழில் நுட்ப அதிகாரிகள் பணியில் இல்லாதமையால் இம்மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்குரிய நிதியை வழங்கியுள்ளது. (க-121)

## கிளிநொச்சிச் செயலக சிற்றுண்டிச்சாலையில் அதிகரித்த விலையில் முத்திரை விற்பனை

கிளிநொச்சி,நவ.29

கிளிநொச்சி மாவட்டச் செயலக சிற்றுண்டிச் சாலையில் முத்திரைகள் அதிக விலைக்கு விற்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முத்திரைகள் யாவும் ஐந்து ரூபாவுக்கு ஒரு ரூபா என்னும் விகிதத்தில் மேலதிகமாக வைத்து விற்பனை செய்யப்படுகிறது. இடப்பெயர்வினால் சகல ஆவணங்களையும் இழந்த மாவட்ட மக்கள் அவற்றினைப் பெறுவதற்குத் தினமும் மாவட்டச் செயலகத்திற்கு வருகின்றனர். உரிய படிவங்களைப் பூர்த்தி செய்யும் மக்கள் முத்திரை விற்பனைக்குண்டு என்ற விளம்பர அட்டை வைத்துள்ள செயலக வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் முத்திரை வாங்குவதற்குச் செல்கின்றனர். எனினும் அங்கு 5 ரூபா முத்திரை 6 ரூபாவுக்கும் 25 ரூபா முத்திரை 30 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

மாவட்டச் செயலகத்திலிருந்து கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் தூரத்தில் இருப்பதால் அங்கு நடந்து செல்வதற்குத் தயங்கும் மக்கள் அதிக விலை கொடுத்து முத்திரை வாங்கித் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

''ஏன் அதிக விலைக்கு விற்கிறீர்கள்'' எனக் கேள்வி எழுப்புவோரை சிற்றுண்டிச்சாலையில் பணிபுரிவோர் கீழ்த்தரமான வார்த்தைகளால் ஏசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தினர் மாவட்டச் செயலகத்தில் தற்காலிகமாகவேனும் ஒரு கருமபீடத்தினை அமைத்து மக்களுக்குச் சேவை செய்யமாட்டார்களா எனவும் மக்கள் ஏக்கம் தெரிவித்தனர். (க-207)




## இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வாகன உரிமையாளர்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி,நவ.29

கடந்த 22, 23, 24 ஆம் திகதிகளில் மோட்டார் திணைக்களப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட வாகனங்களில் 324 மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள், உரியவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வாகனங்களின் விவரம்:-

(தொடர்ச்சி)

163. 119-7633
164. UB-0288
165. HZ-0190
166. GL-4566
167. HT.9306
168. 112-4579
169. 500-6558
170. 151-5194
171. HM-9033
172. ML-4015
173. MA-9594
174. JS-3264
179. UB-0282
180. 133-3437
181. MB-7793
182. HY-4714
183. MV-8213
184. 122-1331
185. JQ-8313
186. HW-2234
187. 129-4386
188. MD-1536
189. JD-0142
190. GV-3943
191. HA-5297
192. GP-4401
193. JN-8261
194. JC-7151
195. JP-0066
196. 502-0278
197. HS-6257
198. HW-9381
199. HL-1673
200. HI-6626
201. MG-9579
202. HM-1097
203. JW-1209
204. 149-1529
205. 148-6926
206. 143-5367
207. NPGS-4185
208. ME-8217
209. JK-5659
210. 111-4667
211. GZ-6081
112. 151-1520
213. T13-6064
214. 500-9637
215. 147-8647
216. T14-9072
217. 133-7856
218. MO-1191
219. JL-2385
224. NPHY-5596
225. MO-5279
226. 500-4312
227. NPG[illegible]
228. NPH[illegible]
229. NPGC-6497
230. NPHC-3500
231. GQ-1041
232. GL-3536
233. HT-5327
234. 114-4502
235. GL-0423
236. JT-9831
237. 86-0768
238. NPGW-3399
239. 146-2115
240. TU-1638
241. 142-1197
242. HQ-7563
243. HC-3291
244. HL-3117
245. 138-3932
246. JL-0943
247. HZ-2816
248. [illegible]
249. [illegible]
250. 113-0373

(வளரும்)

## பாடசாலைப் பேருந்து சேவையை நடத்துமாறு பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு,நவ.29

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கென பாடசாலைப் பேருந்து சேவைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பகுதிப் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூர் கிராமங்களிலிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததன் காரணமாகப் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கச் முடியாத நிலையிலுள்ளனர். அதேவேளை பி.ப. 2 மணிக்குப் பாடசாலைகள் மூடுகின்ற போதிலும் மாணவர்கள் வீடு வந்து சேருவதற்குக் கிட்டத்தட்ட நான்கு மணியாகிறது. குறிப்பாக முத்தையன் கட்டு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், சமனங்குளம், கூழாமுறிப்பு, கெருடமடு, வசந்தபுரம், மன்னாக்கண்டல் ஆகிய கிராமங்களை சேர்ந்த மாணவர்களே அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில மாணவர்கள் போக்குவரத்தைக் காரணம் காண்பித்துப் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீடுகளில் நிற்கின்றனர். தற்போது இந்தப் பகுதி மக்கள் மீள்குடியேறிய நிலையில் வீதிகள் சீராக இல்லாமையாலும், மிதிவண்டிகள் இல்லாததாலும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆகவே இவர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கெனத் தனியான பாடசாலைப் பேருந்து சேவையை நடத்துமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய போட்டிக் கேள்வி அறிவித்தல்-14

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## வடக்கின் துரித மீட்சித் திட்டம் (ENReP)

### கடன் இல: 4676 LK

01. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து வடக்கின் துரித மீட்சித் திட்டச் செலவினத்திற்காகக் கடன்பெற்றுள்ளது. இதில் ஒரு பகுதியை கீழ்க்காணும் ஒப்பந்த வேலைக்கான கொடுப்பனவைச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. துரித மீட்சித் திட்டத் திட்டப்பணிப்பாளரினால் கீழ்க்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வேலைக்குத் தகுதியுள்ள கேள்விதாரரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் வரவேற்கப்படுகின்றன.

| S.N | Contract No | Contract Name | Bid Security Amount | Required ICTAD Grade | Implementing Agency |
|---|---|---|---|---|---|
| 1 | ENReP/PMU/J/Build/497/2010 | Reconstruction of Public Market at Pointpedro, Jaffna(53.5Mn) | 590,000.00 | M3/C4 or above (Buildings) | RACLG, Jaffna |
| 2 | ENReP/PMU/J/Build/498/2010 | Reconstruction of Market at Moor Street, Jaffna(6.5Mn) | 70,000.00 | M6/C7 or above (Buildings) | RACLG, Jaffna |
| 3 | ENReP/PMU/J/Build/499/2010 | Reconstruction of Post Office at Thalaiyadi, Jaffna(5.2Mn) | 60,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Jaffna |
| 4 | ENReP/PMU/J/Build/500/2010 | Reconstruction of ASC at Pungudutheevu, Jaffna(9.6Mn) | 110,000.00 | M6/C7 or above. (Buildings) | ACAD Jaffna |
| 5 | ENReP/PMU/J/Build/501/2010 | Reconstruction of DS Office at Maruthankerny, Jaffna(40.3Mn) | 440,000.00 | M4/C5 or above (Buildings) | Dept.of Buildings, Jaffna |
| 6 | ENReP/PMU/J/Build/502/2010 | Reconstruction of Vetrinary Surgeon's Office at Maruthankerny, Jaffna(6.3Mn) | 70,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Jaffna |
| 7 | ENReP/PMU/J/Build/503/2010 | Rehabilitation of 2 MPCS Branches and 2 no of Food Stores at Thellipalai, Jaffna(7.8Mn) | 90,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Jaffna |
| 8 | ENReP/PMU/J/Build/504/2010 | Repairs to Osmanya College Buildings at Jaffna(4.9Mn) | 50,000.00 | M7/C8 or above (Buildings) | Dept.of Education Jaffna |
| 9 | ENReP/PMU/J/Build/505/2010 | Rehabilitation of Maravanpulo Branch at Thenmarachi, Jaffna(1.9Mn) | 20,000.00 | M8/C9 or above (Buildings) | Dept.of Buildings, Jaffna |
| 10 | ENReP/PMU/J/Road/506/2010 | Rehabilitation of Internal Roads in Chavakachcheri, Jaffna(58.1Mn) | 640,000.00 | M3/C4 or above (Road) | RACLG Jaffna |
| 11 | ENReP/PMU/J/Road/507/2010 | Rehabilitation of Internal Roads in Jaffna MC Area, Jaffna(26Mn) | 290,000.00 | M4/C5 or above (Road) | Municipal Council, Jaffna |
| 12 | ENReP/PMU/Mn/Build/508/2010 | Reconstruction of Primary Medical Care Unit and OPD Block at Marichchukaddi, Mannar(9.1Mn) | 100,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Mannar |
| 13 | ENReP/PMU/Mn/Build/509/2010 | Reconstruction of Primary Medical Care Unit and OPD Block at Iranailuppaikulam, Mannar(9.1Mn) | 100,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Mannar |
| 14 | ENReP/PMU/Mn/Build/510/2010 | Reconstruction of Primary Medical Care Unit at Periyamadu, Mannar(4.5Mn) | 50,000.00 | M7/C8 or above (Buildings) | Dept.of Buildings, Mannar |
| 15 | ENReP/PMU/Mn/Build/511/2010 | Repairs to 2 no of Co-op Branches at Kandal & Kovilkulam, Mannar(2.9Mn) | 30,000.00 | M7/C8 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 16 | ENReP/PMU/K/Build/512/2010 | Renovation & Improvements to Co-op Society's Rice Mill & Stores at Kilinochchi(9.8Mn) | 110,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 17 | ENReP/PMU/K/Build/513/2010 | Renovation & Improvements to Karachi East MPCS Rice Mill & Stores at Kilinochchi(4.9Mn) | 50,000.00 | M7/C8 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 18 | ENReP/PMU/K/Build/514/2010 | Renovation & Improvements to 3 no of Karachi East MPCS Branches at Vaddakachi, Kilinochchi(5.9Mn) | 60,000.00 | M6/C7 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 19 | ENReP/PMU/V/Irri/515/2010 | Rehabilitation of Mahakachchikodiya Tank, Vavuniya(28.1Mn) | 310,000.00 | M4/C5 or above (Irrigation) | Provincial Irrigation, Vavuniya |
| 20 | ENReP/PMU/Mu/Build/516/2010 | Reconstruction of District Agriculture Training Centre, Oddusuddan, Mullaitivu(17Mn) | 190,000.00 | M5/C6 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 21 | ENReP/PMU/Mu/Build/517/2010 | Repairs to Food & Paddy Store No 2 at Mulliyavalai, Oddusuddan, Mullaitivu(4.8Mn) | 50,000.00 | M7/C8 or above (Buildings) | Dept.of Buildings, Kilinochchi |
| 22 | ENReP/PMU/Mu/Irri/518/2010 | Rehabilitation of Thanukankulam and Periyathikilankulam in Manthai East, Mullaitivu(4.4Mn) | 50,000.00 | M7/C8 or above (Irrigation) | ACAD, Mullaitivu |
| 23 | ENReP/PMU/Mu/Irri/519/2010 | Rehabilitation of Paddankaddiakulam and Asaipillikulam in Thunukkai, Oddusuddan Mullaitivu(7.1Mn) | 80,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Mullaitivu |
| 24 | ENReP/PMU/Mu/Irri/520/2010 | Rehabilitation of Kakkaipanikankulam & Kuruvichchiyaaru anicut in Oddusuddan, Mullaitivu(9.8Mn) | 110,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Mullaitivu |
| 25 | ENReP/PMU/Mu/Irri/521/2010 | Rehabilitaion of Ampakamamkulam, Oddusuddan, Mullaitivu(8.3Mn) | 90,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Mullaitivu |
| 26 | ENReP/PMU/Mu/Irri/522/2010 | Rehabilitation of Olumadukulam & Periyapuliyankulam in Oddusuddan, Maritimepattu, Mullaitivu(4.2Mn) | 50,000.00 | M7/C8 or above (Irrigation) | ACAD, Mullaitivu |

03. உலக வங்கியின் கேள்வி வழிகாட்டி நூலின் தேசிய போட்டிக்கேள்வி விதிமுறைகளுக்கமைய தகுதி வாய்ந்த சகல கேள்விதாரர்களுக்கும் இக் கேள்வியானது திறந்திருக்கிறது.

04. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும், கேள்விக் கோவைகளையும் கீழ்வரும் காரியாலயத்தில் வேலை நாள்களில் காலை 9மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை 10.12.2010 முதல் 03.01.2011 வரையான காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்விதாரர்கள் ICTAD நிறுவனத்தில் மேலே வேலைகள் அட்டவணையில் சொல்லப்பட்ட அல்லது அதற்கு கூடுதலான பதிவினைக் கொண்டிருப்பதுடன், இவ்வேலையின் நிர்மாணத்திற்குத் தேவையான கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயந்திர உபகரணங்களை உடையவராகவோ அல்லது வாடகைக்குப் பெறக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும். மேலும் கேள்விதாரர் சார்பில் வேலைத்தளத்திற்கான பொறுப்பாளரது குறைந்தபட்ச தகைமையாக தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமையும் மூன்று வருட அனுபவமுடையவரை வேலைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

06. முழுமையாக ஆங்கில மொழிமூலம் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பின்வரும் விலாசத்தில் 10.12.2010 தொடக்கம் 03.01.2011 வரை வேலை நாள்களில் (முற்பகல் 9 தொடக்கம் பிற்பகல் 3 வரை) மீளளிக்கப்படாத ரூபா 3000 கட்டணத்தைப் பணமாகவோ அல்லது ''திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், வவுனியா'' என்பவருக்கு எழுதப்பட்ட வங்கி வரைவாகவோ செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பத்தை கீழ் உள்ள முகவரியில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப்பத்திரங்களைப் பதிவுத்தபால் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ கீழ் உள்ள முகவரியில் சமர்ப்பிக்கமுடியும்.

07. கேள்வி முன் ஆலோசனைக் கூட்டம் 21.12.2010ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், புகையிரத நிலைய வீதி, வவுனியாவில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இக்கூட்டத்திற்குச் சமுகமளிப்பதற்கு முன்பு வேலை இடங்களை உரிய திணைக்கள பிரதி நிதிகளின் உதவியோடு பார்வையிட்டு கூட்டத்தில் பங்குபற்றவும்.

08. கேள்விப்பத்திரமானது 04.01.2011 அன்று பிற்பகல் 2 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், திட்ட முகாமைத்துவப் பிரிவு, புகையிரத நிலைய வீதி, வவுனியா என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒப்படைக்கப்பட்ட கேள்விப் பத்திரமானது அதே தினம் பிற்பகல் 2 மணிக்குப் பிரசன்னமாகும் கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. அனைத்துக் கேள்விகளும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியான பிணைப்பணச் சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் 03.05.2011வரை செல்லுபடியாகத்தக்கதாய் இருத்தல் வேண்டும்.

10. ஓர் ஒப்பந்தகாரருக்கு மூன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள், அவரால் ஏற்கனவே வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைகளின் முன்னேற்றத்தையும், திறனையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படலாம்.

கலாநிதி (எந்திரி) ச.சு.சிவகுமார்,
திட்டப்பணிப்பாளர்,
வடக்கின் துரித மீட்சித் திட்டம் (ENReP), புகையிரத நிலைய வீதி, வவுனியா.

தொலைபேசி: 0243248330 / 0242225827, மின்னஞ்சல்: pd@enrep.lk

குறிப்பு: வடக்கின் துரித மீட்சித்திட்டம் (ENReP) தொடர்பான எதுவிதமான முறைப்பாடுகளும் ஆலோசனைகளும் complaints@enrep.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

(அ/572598)




டயிட்டஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை 011-2439422 லிபர்டி பிளாஸா

**சேவை**

பாடசாலை மாணவர்களுக்கு உரிய ரை மொனிற்றர் பச், பிறிபெக்ட் பச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப் பலகை என்பனவற்றை உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள.
எஸ்.எஸ்.பாசோதரன் ஆர்ட்ஸ்
இல. 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777110610, 0217903020

**விற்பனைக்கு**

பலசரக்குக் கடை நடத்துவதற்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
செ.சி.பாலா
487, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தி.
தொ.பே.: 0212228578 (கடை),
0212228033 (வீடு).
இங்கு திருமண சேவையும் நடைபெறுகிறது.
(105909)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலை 90-150 ரூபா வரை.
தொடர்பு: விஜயகுமார்
குளப்பிட்டி வீதி. 0773823260
(106609)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 01.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
★ ராஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. No.021-222-2867, 0776090926

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாடவேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்
(Mafa Farm House)
தொடர்புகளுக்கு
0773657008, 0773760445.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. ஆகக் கூடிய சில்லறை விலை - 110/- உடன் தொடர்புகொள்ளவும்.
(106512)

**Danika A - Z Market**

கைத்தொலைபேசிகள், தையல் மெசின்கள், படப்பிடிப்புக் கருவிகள் (Camera) போன்ற உபகரணங்களை மலிவு விலையில் உடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Danika A - Z Market
*175A, Sivan Pannai Road, Jaffna, Sri Lanka.*
*T.P.:0213206896.*
(106559)

**களஞ்சியசாலை அல்லது வெற்றுக்காணி தேவை**

-யாழ் நகரில்-

யாழ் நகருக்கருகாமையில் 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட சதுர அடி நிலப்பரப்புக் கொண்ட வெற்றுக்காணி அல்லது களஞ்சிய சாலை உடனடித் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு:
சஜித் - 0773 295 715


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட அமைச்சுப் பதவிகள் அரசமைப்புக்கு முரணானதல்ல

## நாடாளுமன்றில் அமைச்சர் சுசில்

கொழும்பு, நவ.29

சிரேஷ்ட அமைச்சுப் பதவிகள் அரசியலமைப்புக்கு முரணானதல்ல என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

எதிரணி உறுப்பினர்களின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானதென்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் நிதியமைச்சராக இருக்க வேண்டுமென்ற நியதி கிடையாதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு அமைச்சர் உரையாற்றுகையிலேயே இந்த விளக்கங்களைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

ஜனாதிபதி விரும்பிய பொறுப்புகளைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் வேண்டியவர்களை நியமிக்கவும் அதிகாரம் உண்டு.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை முன் வைத்திருக்கிறார். அதனால் அவர் நாடாளுமன்றத்தில் இருக்க மாட்டார் என்று கூற முடியாது. அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தின்படி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வருவார். அவருக்கென ஓர் ஆசனமும் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிரணியினரின் கூற்றை முற்றாக நிராகரிக்கிறேன் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து அது பற்றிய விவாதம் முடிவடையும் வரை நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். இங்கே ஜனாதிபதி நிதியமைச்சராக இருப்பதால் அது சாத்தியமில்லை.

''பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதிதான் இருக்க வேண்டும் என்றோ நிதியமைச்சராக ஜனா திபதி இருக்கக்கூடாது என்றோ அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை'' என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் ''எவ்வாறெனினும் நிதியமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பு வகிப்பதுதான் சிறப்பு என்றார்''. இதற்குப்பின் உரையாற்றிய அமைச்சர் பிரேம்ஜயந்த இக் கூற்றை நிராகரித்தார். (த)

# வலி. வடக்கில் மீள் குடியேறுவோருக்கு இந்திய அரசின் வீடுகள் கிடைக்கும்

## நேற்றைய நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கீரிமலை, நவ.29

வலி. வடக்கில் மீள்குடிய மர்த்தப்படும் மக்களுக்கு எதிர் வரும் ஜனவரி மாதம் இந்திய அரசாங்கத்தின் வீட்டுத்திட்டம்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.எஸ். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வலி.வடக்குப் பகுதியில் இளவாலை வடக்கு, வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் நேற்று இடம்பெற்ற மீள்குடியேற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் நவம்பர் 26, 27 ஆகிய திகதிகள் அழிவுக்கான நாள்களாகக் கொண்டாடப்பட்டது. இனிவரும் காலங்களில்அதனை ஆக்கத்திற்கான நாள்களாக மாற்றியமைப்போம். கடலில் விழுந்தவன் கடலுக்குள் இருந்துகொண்டு கடலைத் திட்டிக் கொண்டிப்பதைக் காட்டிலும் கிடைக்கும் துரும்பைப் பயன்படுத்தி கரை சேர்வதற்கான வழிவேண்டும்.

அது போலவே நாமும் எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியான நேரத்தில் சரியாகப் பயன்படுத்தி எமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவேதான் இன்று கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றது -என்றார். (ஒ-9-86)

# நீதியமைச்சின் நடமாடும் சேவையில் பெரும் எண்ணிக்கையான மக்கள்

தென்மராட்சி, நவ.29

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச மக்களுக்காக நடமாடும் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு காலை 8 மணிக்கு பதிவுகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆண்கள், பெண் கள் எனத் தனித் தனி வரிசையில் நின்று பதிவுகளை மேற்கொண்ட பின்னர் தமது தேவைகளைத் தெரிவித்துள்ளனர்.

நீதி அமைச்சின், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவா கப்பதிவு போன்றவையும், தேசிய அடையாள அட்டை தொடர்பான பிரச்சினைகள், முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியம், காணி உறுதி, கடற்றொழில் ஆகியவை தொடர்பான பிரச்சினைகளும் நடமாடும் சேவையில் முன்வைக்கப்பட்டன.

52ஆவது படையணியின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாமும் இடம்பெற்றது. நீரிழிவு, பல், இரத்த அழுத்தம், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சட்ட ஆலோசகர் எம். திருநாவுக்கரசு, ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபேவிக்கிரம, மேலதிக பதிவாளர் நாயகம் அ.சதாசிவஐயர், ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் ஜகத் பெத்தகொட, காணித் துணையாளர் மகேஸ்வரன், தென்மராட்சிப் பிரதேச செயலர், 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் அநுர சுதசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நேற்றைய நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றுக்கு இலவசமாக புகைப்படமும் எடுத்து வழங்கப்பட்டது. அத்துடன்பிறப்பு, இறப்பு, விவா கப்பதிவு போன்றவற்றுக்கான முத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச மக்களுக்கு உடனுக்குடன் சேவைகளை வழங்குவதற்கென பிரதேச கிராம அலுவலர்கள், சமாதான நீதிவான்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-204-207-131)

# வன்னி மக்களின் வைப்புத் தொகையை பட்டியலிட்டுக் காட்டினார் ஜனாதிபதி

கொழும்பு, நவ.29

யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வந்த தமிழ் மக்கள் முகாம்களில் அமைக்கப்பட்ட வங்கிகளில் வைப்புச் செய்த பணம் மற்றும் நகைகளின் விபரங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடனான சந்திப்பின்போது எடுத்துக் கூறியுள்ளார்.

இராமநாதன் முகாமில் அமைக்கப்பட்டிருந்த வங்கியில் 400 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதாகவும் மெனிக் பாம் முகாமில் 973 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதாகவும் கிளிநொச்சியில் 1.43 பில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதாகவும் முகாம்களில் அமைக்கப்பட்டிருந்த இலங்கை வங்கியில் 500 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். இதேபோல் மாங்குளத்தில் 650 பேரின் கணக்குகளில் 278 மில்லியன் ரூபாவைப் பிலிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைவிட இராணுவம் வன்னியில் கைப்பற்றிய தங்கம், வங்கிகளில் 16 பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பெறுமதி 400 மில்லியன் ரூபா எனவும் இராணுவத்தினர் 800 மில்லியன் ரூபா பணத்தினைக் கைப்பற்றி வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறிய நிலையில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினர் கோரிக்கை விடுத்தபோதே ஜனாதிபதி புள்ளி விபரங்களுடன் இவற்றைத் தெரிவித்ததாகச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்க் கட்சியொன்றின் தலைவர் தெரிவித்தார். (த)

## மக்கள் சேவை.....





தீர்வு: நீதியமைச்சின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்ட உயர் அதிகாரிகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர்.
நடமாடும் சேவையில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக காத்திருக்கும் மக்களின் ஒரு தொகுதியினர்.
(201-207-131)

# ஆசிரிய உதவியாளருக்கு கொடுப்பனவை அதிகரிக்குக

கொழும்பு, நவ.29

ஆசிரிய உதவியாளர்களுக்கான கொடுப்பனவை இருமடங்காக்கி 6,000 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஆசிரிய உதவியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவானது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. குறிப்பாகப் பயணச் செலவுகளுக்குக் கூடப் போதாது.

எனவே, ஈடுபாடுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கான இக் கொடுப்பனவை அதிகரிப்பது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் - என அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# எழுத்து விருத்தி முகாம் இன்று

கோப்பாய், நவ.29

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையில் எழுத்து விருத்தி முகாம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்து கொள்வார். (201-72)

# பூனைகளால் பரவிய நோயால் பாதித்த 2,403 பேருக்குச் சிகிச்சை

கொழும்பு, நவ.29

பூனைகளின் மலக் கழிவிலிருந்து பரவும் ''டொக்சோ பிளாஸ் மியோ'' எனும் அபாய கரமான நோயால் பீடிக்கப்பட்ட 2,403 பேருக்கு இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வைத்திய பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.

பூனைகளின் மலக்கழிவில் உள்ள 'பரசைட்டுகள்' மூலமே இந்தநோய் பரவுகிறது. இந்நோயால் பீடிக்கப்படும் நபர்களுக்கு மூளையில் கட்டிகள் ஏற்படுதல், கண் பார்வை அற்றுப்போதல், அவயவங்கள் செயலற்றுப் போதல், ஆகியன உருவாகின்றன.

கர்ப்பிணிப் பெண்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டால் கருச் சிதைவு ஏற்படவும், பிறக்கும் குழந்தை மந்த புத்தியுள்ளதாக இருக்கவும்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இந்நோய்க்கான பரிசோதனையை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் மட்டுமே நடத்தமுடியும்.

அபாயகரமான இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரேவழி பூனையினங்களைச் சேர்ந்த பிராணிகளின் மலக் கழிவைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதுதான் - என ஆராய்ச்சி நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர் திருமதி சாகரிகா சமர சிங்க தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
திறமையாகச் செயற்பட்டாலும், சிலர் உங்களைக் குறை சொல்லலாம். திட்டமிட்ட காரியங்களில் திடீர் தாமதம் ஏற்பட்டு, பின்னர் சரியாகும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வாகனப் பயணங்கள் உற்சாகம் தருவதாக அமையலாம். உறவினர் ஒருவர் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம்.

**இடபம்:**
இரண்டு நாள்களாக தடைபட்ட காரியம் ஒன்று, இன்று இனிதே முடிவுக்கு வரும். வியாபாரிகளுக்கு கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் கூடும். தொட்ட காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். உதவி செய்த ஒருவர் உங்களுக்கு பதில் உதவி செய்யலாம்.

**மிதுனம்:**
வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். பொதுவாழ்வில் உள்ளோருக்கு புகழ், செல்வாக்குக் கூடும். எதிர்பாராதவிதமாகச் சிலரைச் சந்திக்கலாம். எங்காவது புறப்படும் நேரத்தில், யாராவது வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கலாம். கனவுகளால் குழப்பம் நேரும்.

**கடகம்:**
கடும் சிரமப்பட்டாவது நினைத்த காரியம் ஒன்றைச் சாதிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு எதிராகச் செயற்பட முற்பட்டவர்களை, தந்திரமாக முறியடிப்பீர்கள். பயணங்களால் செலவுகளைச் சந்திக்கலாம். எந்த வேலையையும் நாளை எனத் தள்ளிப் போடாமல், இன்றே செய்து முடிப்பீர்கள். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று, நடக்காமல் போகலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்க பணத்தை தண்ணீராகச் செலவழிப்பீர்கள். வீட்டை அழகாக வைத்திருப்பதில் நாட்டம் செல்லும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகளால், வீண் பிரச்னைகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**கன்னி:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். தாய்வழி உறவுகளால் ஆதாயம் பெறலாம். மாற்று மதத்தினர் ஒத்துழைப்பால், சில வேலைகள் முடியலாம். விருப்பமான உணவு வகைகளை சாப்பிடுவீர்கள்.

**துலாம்:**
எதிர்பார்த்த பணவரவுகள் வராமல் போனாலும், எதிர்பாராத பணவரவு கைக்குக் கிடைக்கலாம். சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். அதிகமான வேலைகள் குவிந்தாலும், சோர்வடையாமல் செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். நெடுநாளைய பிரச்சினை ஒன்று தீர்விற்கு வரும்.

**விருச்சிகம்:**
சக ஊழியர்கள் சிலர், உங்களிடம் யோசனை கேட்டு செயல்படலாம். நாலு பேருக்குப் பயன் தரும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதையை மேம்படுத்தும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிறிய செலவு ஒன்றைச் செய்ய யோசித்த நீங்கள், மற்றொரு காரியத்திற்குப் பெரிதாகச் செலவிடலாம்.

**தனுசு:**
விழிப்புடனும், கவனமுடனும் செயற்பட வேண்டிய நாள். திடீரென தேடி வரும் சிலரால் தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். திட்டமிட்ட பயணங்களை மாற்றி அமைக்கலாம். மற்றவர்கள் சொல்வதை கேட்டு, எதையும் செய்ய வேண்டாம். உங்களிடம் உதவி பெற்ற ஒருவரே, உங்களை உதாசீனம் செய்யலாம். கோபம், வேகம் கூடும்

**மகரம்:**
நீங்கள் கேட்ட உதவிகளை உறவினர்கள் செய்யலாம். தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். மற்றவர்கள் சாதிக்காத ஒன்றை நீங்கள் சாதித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் பகையாகாமல் இருக்க யோசித்து பேசவும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். குடும்பச் செலவு கூடும்.

**கும்பம்:**
கடனாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். உதவி கேட்ட ஒருவருக்கு மறுக்காமல் செய்வீர்கள். வியாபாரிகள் கூடுதல் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். புதிய வாகனங்கள் வாங்க திட்டம் போடுவீர்கள். குரு வழிபாடு குதூகலம் தரும்.

**மீனம்:**
குடும்ப உறுப்பினர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். செய்ய மறந்த காரியம் ஒன்றால், தண்டச் செலவுகளை சந்திக்கலாம். சண்டை போட்ட நண்பர் ஒருவருடன் சமாதானமாக செல்வீர்கள். முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். குழப்பங்கள் நேரும்.

# அச்சுவேலிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்

அச்சுவேலி,நவ.29

அச்சுவேலி பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டனர். அச்சுவேலி பஸ்நிலையம் மற்றும் பொதுச்சந்தையை உள்ளடக்கிய சுற்றாடல் பிரதேசங்களிலும் மற்றும் அயல்புறங்களிலும் மேற்கொள்ளப்பட்டன.

அச்சுவேலியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள் அச்சுவேலி "பொலிஸ் நிலைய பொலிஸ் இளைஞர் வலுவூட்டல் பிரிவும் பொலிஸ் சுற்றாடல் பிரிவும்" இணைந்து மேற்கொண்ட சிரமதானப் பணியில் அச்சுவேலி பொலிஸார் மற்றும் அச்சுவேலி வர்த்தக சங்கம், பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம், அச்சுவேலி சிற்றூர்திச் சங்கம் ஆகியவற்றின் பணியாளர்களும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு பெருமளவில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

கொட்டும் மழையிலும் திட்டமிட்ட வகையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கணிசமான அளவு சுத்திகரிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதுபோன்ற சிரமதானப் பணிகள் எதிர்காலத்தில் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு பொது அமைப்புகள் முன்வரவேண்டும் என அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(201-11)

## நிகழ்வு......



அறிவுவிருத்தி: சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் பே. சிவராஜலிங்கம் ஒரு தொகுதி புத்தங்களை நாவற்குழி பொது நூலகர் திருமதி இராளி சிவசுப்பிரமணியத்திடம் கையளிக்கின்றார். அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் யாழ். வதிவிடப் பிரதிநிதி மார்ட்டீன் - ஸ்குடர் அமர்ந்திருக்கிறார். (201-131)

## மேலாளர்



ஒரு நிறுவனத்தினுடைய முகாமையாளர் தனது பதவியிலிருந்து விலகியபோது அவருக்கு அடுத்தபடியாக இருந்த ஒருவர் அப்பதவிக்கு உயர்வு பெற்றுப் பொறுப்புக்கு வந்தார்.

ஏற்கனவே முகாமையாளர் பதவியில் இருந்தவர். நல்ல திறமையானவர், அனைவரிடமும் நல்ல பெயர் வாங்கியவர். அதனால் புதிதாக வந்தவர். அவரிடம் யோசனை கேட்டார். "ஊழியரிடம் எப்படி நல்ல பெயர் வாங்குவது" என்று.

இதற்குப் பழைய முகாமையாளர் "நேர்மை, சமார்த்தியம் இந்த இரண்டும் மேலதிகாரிக்கு இருக்க வேண்டும்" என்றார்.

"நேர்மை என்றால் எப்படி" என்று கேட்டார் புதிதாக வந்த முகாமையாளர்.

அதற்கு அவர், "கொடுத்த வாக்குறுதியை எவ்வளவு கஷ்டம் வந்தாலும் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினார்.

"சாமார்த்தியம் என்பது என்ன?" என்று கேட்டார் புதிதாக வந்த முகாமையாளர்.

"அப்படிப்பட்ட வாக்குறுதிகள் எதையும் கெடுக்காமல் இருப்பதுதான் சாமார்த் தியம்" என்றார் அவர்.

ஒரு முகாமையாளர் எப்படி இருக்கவேண்டும். ஊழியர்களிடம் எப்படி நடக்க வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

இது தொடர்பாக அமெரிக்காவில் 500 இற்கும் மேற்பட்ட மேலதிகாரிகளிடம் ஆய்வு நடத்தி ஐந்து விடயங்களை முக்கியமானதாகக் கண்டுபிடித்தார்கள்.

* செய்யும் வேலைகளின் வெற்றிக்குப் பணியாளர்களும் காரணம் என்பதை மனதார ஒப்புக் கொள்ளல் வேண்டும்.
* அனைவருடனும் பரிவோடு உண்மையான அக்கறைகாட்டி நடந்துகொள்ளல் வேண்டும்.
* இதுதான் உண்மை என்று தீர்மானம் எடுத்தல் கூடாது. அவற்றின் உண்மையை அறிந்து சரியான தீர்வை எடுக்கவேண்டும்.
* இதைச் செய் என்று உத்தரவு போடும் போது நாம் தெளிவாக இருத்தல் வேண்டும்.
* அதிகாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளைத் தாராளமாகச் செய்து கொடுத்தல் வேண்டும்.

இப்படியான செயற்பாடுகளை முன்னுதாரமாக வைத்து நடந்து கொண்டால் நீங்களும் ஒரு நல்ல முகாமையாளர்தான்.

கோ.சுவாமிநாதன்.

## வாஸ்து பெரிசா? தர்மம் பெரிசா?

ஒரு நண்பர் வீட்டில் கிருஹப் பிரவேசம் அதாவது புதுமனை புகுவிழா. அவர் அரைகுறை அறிவாளிகள் அத்தனை பேருக்கும் அழைப்பு விடுத்திருந்தார். வந்தவர்கள் அனைவரும் ஒவ்வொன்றும் கூறி மனிதரின் அமைதி யைக் கெடுத்துவிட்டார்கள்.

"வீடு வாஸ்துப்படி இல்லை, சமையல் அறை இங்கு இருக்கக்கூடாது, படுக்கையறை அங்கே கட்டக்கூடாது, பூஜை அறை இப்படிப்பட்ட அம்சங்களுடன் அங்கேதான் இருக்க வேண்டும்" என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக் கூறினார்கள். மொத்தத்தில் அந்த மனிதர் இந்த வீட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அவர்களது கூட்டுப் பிரகடனம்.

வாஸ்து சாஸ்திரம் என்பது ஒரு கடல். அதில் எந்த அலையும் தெரியாத அரைகுறைகள் எல்லாம் ஊரையே பைத்தியம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

காற்றோட்டம், வெப்ப ஓட்டம், சூரிய உதயம், நீரோட்டம் இவற்றைக் கணக்கிட்டு வீடு கட்டுவது அவசியம்.



பூமியைத் துண்டாடும்போது சக்தி அலை சரியாகத் தூண்டப் படுவது அவசியம். எல்லாவற்றையும் விட எண்ணத் தூய்மையுடன் தருமம் சிதறாமல் வாழ்ந்தால் எந்த வீடும் நல்ல வீடுதான்.

பஞ்ச பாண்டவருக்கு வாஸ்து சாஸ்திரம் தோற்றுவித்த மயன் கட்டிக்கொடுத்த மாளிகையில் பாண்டவர்கள் வாழ முடிந்ததா? பதின்மூன்று வருடம் காட்டிலும் மேட்டிலும் பிச்சையல்லவா எடுத்தார்கள்? வாஸ்து அவர்களை வாழவிட்டதா? வாஸ்து சாஸ்திர பகவான் மயனே கட்டினாலும் தருமத்திற்கு விரோதமாகச் சூதாடத்துணிந்ததால் பாண்டவர் தெருவில் நிற்க வேண்டியதாயிற்று. வாஸ்து சாஸ்திரத்தைவிட தர்மசாஸ்திரம் வலிமையானது. வாசலையும், ஜன்னலையும் மாற்றினால் துயரங்கள் தீராது. வாழ்க்கையையும் எண்ணங்களையும் மாற்றுங்கள் வாஸ்தவமான வாஸ்து அதுதான்.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கு முறை நிலைக்காது எப்போதும்

**கனடாவில் இருந்து வெளியாகும் நஷனல் போஸ்ட் (National Post) என்ற ஆங்கில இதழில் போப் ரீ (Bob Rae) என்பவர் எழுதிய ஆய்வுக்கட்டுரையை தமிழில் தருகிறார் தி.வண்ணமதி.**

இலங்கையில் தொடர்ந்த இன மோதல்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தான் என்ன? அமைதி முயற்சிகள் உண்மையான இனநல்லிணக்கத்தினை நோக்கிப் பயணிப்பதற்கு இலங்கைத்தீவு முழுதும் பரவிப்போயிருந்த குரோதமும் பகைமையும் நிறைந்த கலாசாரம் இடமளிக்கவில்லை. இலங்கையில் பலமானதாகக் காணப்பட்ட மத வெறி மற்றும் அரசியல் தீவிரவாதம் என்பன இன்றும் தொடர்கின்றன. பெரும்பான்மையினச் சிங்கள மேலாதிக்க அரசு சிறுபான்மைத் தமிழர்களை நடத்திய விதம்தான் 1970களில் தமிழ் ஆயுதக் குழுக்கள் முளைவிட்டதற்குக் காரணம்.

இவ்வாறு உருவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விட்டுக்கொடுக்காத கொள்கைப்பற்றுடன் தமிழ்த் தேசியவாதத்தினை வலியுறுத்தி வந்தமையினால்-செயற்பட்டமையினால்-இலங்கையில் தவிர்க்கமுடியாத இனமோதல்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தன.


தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலிருந்த மிதவாதக் குரல்கள் இல்லாதொழிக்கப்பட்டமை, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலைசெய்யப்பட்டமை, 2008ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தினை முறித்துக்கொண்டு இராணுவ வழிமூலத் தீர்வினை எட்டுவது என்ற முடிவினை எடுத்தமை போன்றவையே விடுதலைப் புலிகள் அமைப்பும் அவர்கள் சார்ந்த தமிழ் மக்களும் அழிவுப்பாதையில் செல்வதற்கு வழி வகுத்தது எனலாம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியினைப் படுகொலை செய்யுமாறு புலிகளமைப்பின் தலைவர் பிரபாகரன் கட்டளையிட்டமையானது அவரது தயவு, தாட்சண்யம் இல்லாத எண்ணத்தினையே வெளிப்படுத்துகிறது.

> **அரசியல்மயப்படுத்தப் பட்ட நீதி முறைமை, கட்டுக்கடங்காது தொடரும் ஊழல்கள் மற்றும் சுய தணிக் கைக்கு உள்ளாகும் ஊடகங்கள் என உண் மையான ஜனநாயகப் பண்புகளுக்கு எதிரான அம்சங்கள் மஹிந்த வினது அரசாட்சியில் மலிந்து கிடக்கின்றன.**

ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்டமையானது இந்திய அரசின் - குறிப்பாக காங்கிரஸ் கட்சியின்- பிரதான எதிரியாகப் பிரபாகரன் மாறும் நிலைமையினைத் தோற்றுவித்தது. பிரபாகரனுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கும் அவர் அனைத்துலகக் குற்றவாளியாகப் பட்டியலிடப்படுவதற்கும் வழிசெய்த நிகழ்விது. ஆயுதப் போராட்டத்தினை ஒரு வினைத்திறன் கொண்ட அரசியல் பேச்சாக மாற்றும் வலிமையினை பிரபாகரன் இழப்பதற்கு வித்திட்ட சம்பவம் இது.

''பிரபாகரன் இறந்த பின்னர்தான் தமிழர்களின் அரசியல் முனைப்புக்களுக்கு இந்தியா தனது ஆதரவினை வழங்கும்'' என அப்போது இந்திய உயர் இராஜதந்திரியாக இருந்த ஒருவர் குறிப்பிட்டிருந்தார். இந்தியா இத்தகைய எண்ணத்தினைக் கொண்டிருந்ததை பிரபாகரனும் நன்கறிவார். பிரபாகரனுக்குப் பதிலாக வேறு யாராவது ஒருவராக



இருந்திருந்தால் அவர் அமைப்பிலிருந்து தன்னை அந்நியப்படுத்துவதன் ஊடாகப் புலிகள் இயக்கத்தினை ஆபத்திலிருந்து காத்திருக்கலாம். போரில் ஈடுபடுத்துவதற்காக ஆயிரக்கணக்கான ஆண், பெண் போராளிகளை ஒன்றிணைத்து வைத்திருப்பதற்கே பிரபாகரன் தனது ஆளுமையினையும் பலத்தினையும் பயன்படுத்தியிருந்தார்.

தற்போதைய நிலைமையில் இலங்கைத் தீவு ராஜபக்ஷ சகோதரர்களின் ஆபத்து நிறைந்த அதிகாரப் பிடியில் சிக்கித் தவிக்கிறது. ராஜபக்ஷக்கள் ஆட்சியினைத் தங்களின் காத்திரமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். தாங்கள் சட்ட ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே எனக் கூறும் வகையில் நடைபெற்று முடிந்த தேர்தல்களை ராஜபக்ஷ சகோதரர்கள் சுட்டிக்காட்டலாம்.

ஆனால், அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதி முறைமை, கட்டுக்கடங்காது தொடரும் ஊழல்கள் மற்றும் சுய தணிக்கைக்கு உள்ளாகும் ஊடகங்கள் என உண்மையான ஜனநாயகப் பண்புகளுக்கு எதிரான அம்சங்கள் மஹிந்த வினது அரசாட்சியில் மலிந்து கிடக்கின்றன.

தங்களுக்குச் சாதகமான ஏதோவொரு அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலேயே மஹிந்த சகோதரர்களின் ஆட்சி அமைந்திருக்கிறது. இதுதான் இலங்கையில் மக்களாட்சியின் மோசமான தன்மை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் இலங்கை அரசுக்கு வெற்றியினைப் பெற்றுக் கொடுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ராஜபக்ஷவினை எதிர்த்துக் களமிறங்கியிருந்தார்.

ஆனால், பொன்சேகாவினைத் தோற்கடித்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றிருந்தார். இந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுத் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சரத் பொன்சேகா தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கையில் [illegible] கடமைக்குச் [illegible] பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. வானொலி மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட செய்தி ஊடகங்கள் பலவும் இலங்கைத் தீவில் உள்ளன. ஆனால், இவற்றில் எவரும் ராஜபக்ஷவை எதிர்த்துக்



கருத்துக்களை வெளியிடுவதற்குத் துணிவதில்லை. மீறி யாராவது எதிர்க் கருத்துக்களை வெளியிட்டால் அவர் துன்புறுத்தப்படுவார்; அச்சுறுத்தப்படுவார்.

இலங்கையில் பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் பலர் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டார்கள். தேர்தலில் யார் வெல்லக்கூடும் என்பது மட்டுமே உண்மையான ஜனநாயகம் ஆகிவிடாது. தேர்தல்களுக்குப் பின்னர் அந்த நாடு எவ்வாறு ஆளப்பட வேண்டுமோ அந்தப் பண்புகளையே ஜனநாயகப் பண்புகள் என்கிறோம்.

உண்மையான அரசாட்சி என்பது கட்டளைகளும் தனிமனிதத் தீர்மானங்களும் அல்ல, மாறாகக் கலந்துரையாடல்கள் மூலம் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கையில் போர் தொடர்ந்து இடம்பெற்றிருக்கிறது. ஆனால் போர் முடிவுக்குவந்துவிட்டாலும் ஆயுதங்கள் மற்றும் போர்த்தளபாடங்களுக்கான தேவைகள் மற்றும் பாதுகாப்புச் செலவீனம் என்பன இன்னமும் குறைவடையவில்லை. படைத்துறைசார் செலவுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்றன

நாட்டினது மொத்தச் செலவீனத்தில் ஐந்தில் ஒரு பகுதி பாதுகாப்புச் செலவீனத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை குறைவடைவதற்கான வாய்ப்புகள் எதுவும் இப்போதைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஜனநாயக ஆட்சியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் ஒன்றாக இராணுவ மயப்படுத்துதல் மாறிவிட்டது. இந்த மாற்றங்கள் தொடர்பில் மேற்கு நாடுகள் கடுமையான கரிசனைகளைக் கொண்டிருக்கின்றபோதும் இலங்கை அரசில் அங்கம் வகிப்பவர்கள் மோசமான இந்த நிலைமைகள் தொடர்பாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையின் ஆட்சிமுறையில் ஜனநாயகப் பண்புகள் அருகிச்செல்வது மற்றும் அதிகாரத்துவ ஆட்சி ஆகியன தொடர்பாக இலங்கைத்தீவுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்கும் சீனா, பாகிஸ்தான், பர்மா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் ஒருபோதும் மஹிந்த அரசைக் குறைகூறப் போவதில்லை.

இடைநிறுத்தப்பட்டிருந்த 2.6 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்தொகையினை வழங்குவது என 2009ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அனைத்துலக நாணய நிதியம் முடிவெடுத்தமையானது இலங்கை தொடர்பான நம்பிக்கைக்குக் கிடைத்ததொரு சான்றே. இந்த முடிவுக்கு மேற்கு நாடுகள் தங்களது கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தபோதும் கனடா தனது முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தது. தவிர, இறுதிப்போரினை முன்னெடுத்த முறையில் இலங்கை தவறெதனையும் இழைக்கவில்லை என ஐ.நாவின் மனித உரிமைச் சபையினை நம்பவைப்பதிலும் கொழும்பு வெற்றி கண்டது.

2009ஆம் ஆண்டினது அனைத்துலக ஊடக சுதந்திரத்திற்கான நாடுகளின் தரப்படுத்தலில் இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் பக்ரேனுக்கும் இடையில் இருந்தது. ஆனால் இன்று இந்தத் தரப்படுத்தலில் இலங்கை மேலும் கடை நிலைக்குச் சென்றுவிட்டது.

இது தவிர இலங்கை அரசின் நிறைவேற்று அதிகாரப் பொறுப்பிலுள்ளவர்களிடம் மாத்திரமல்லாது சட்டத்துடன் தொடர்புடையவர்கள் மத்தியிலும் ஊழல் மலிந்துகாணப்படுவதாக 'ட் ரான்ஸ் பரன்சி இன்ர நஷனல்' அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

ஒருவர் மற்றைய சமூகத்தவரைப் பரஸ்பரம் மதித்துச் செயற்படும் தன்மை, தமிழர்களுக்கு ஏதோவொரு வகையான சுயாட்சி, பகிரப்பட்ட அரசாட்சி மற்றும் ஆட்சியாளர்கள் கடும்போக்குவாதக் கொள்கைகளைக் கைவிட்ட நிலை என்பனவெல்லாம் இலங்கையில் இப்போதைக்கு வெறும் கனவாகவே இருக்கின்றன. தற்போதைய சூழமைவில் இனங்களின் மத்தியில் அமைதியும் இனநல்லிணக்கமும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு உறுதியான அனைத்துலக அழுத்தம், இருதரப்பிலும் குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கான விருப்பு, முரண்பாட்டினால் இணக்கப்பாட்டை விட மேலதிக விலையைக் கொடுத்து நிற்கும் தரப்புக்களுக்கு இடையிலான விழிப்புணர்வு ஆகியன தேவையாகவுள்ளன.

2001இல் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டவேளையில், இருதரப்புக்கும் இடையில் சந்தேகம் மிகவும் ஆழமாக இருந்தது. அந்த இடைவெளியை நிரப்பி, தலைவர்கள் அசாதாரண முடிவுகளை எடுக்கும் நிலையைத் தோற்றுவிப்பதற்கான வெளியுலகின் ஈடுபாடும் இருந்தது. ஆனால் புதிய நடைமுறைச் சாத்தியமான அரசியலமைப்பை உருவாக்குவதற்கான பேச்சுக்களை நடத்தக் கூடிய அனைவரும் இப்போது மௌனமாக்கப்பட்டுவிட்டனர். இலங்கையில் உள்ள சூழ்நிலையைவட அமெரிக்கா அல்லது தென்னாபிரிக்கா அல்லது கனடாவுடன் ஒப்பிட்டால், தவறவிடப்படும் ஒரு விடயத்தை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அரசியலமைப்பு என்பது சில வாரங்கள் நடத்தப்படும் கடுமையான விவாதங்களின் பின்னர் எழுதப்பட்ட காகிதத் துண்டு அல்ல. ஜனநாயகம் மற்றும் புரிந்துணர்வுபற்றிய வலியுறுத்தல்களால் எழுந்ததும் அல்ல. எந்தவொரு நாட்டினதும் அரசியலமைப்பு என்பது, அதன் அரசியல் கலாசாரம், நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் தங்கியிருக்கிறது.

குறிப்பிட்ட நாட்டினது அரசியல் தலைவர்கள் தங்களது நாளாந்த அரசியல் முனைப்புக்களுக்கு அப்பால் சென்று தமக்கிடையேயான வேறுபாடுகள் அனைத்தையும் களைந்துவிட்டு பொதுவான புரிந்துணர்வின் அடிப்படையில் கொண்டுவரப்படுவதுதான் வெற்றிகரமான அரசியலமைப்புச் சீர்திருத்தமாக அமையும். அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்று வரும்போது, வட அயர்லாந்தினைப் பொறுத்தவரையில் ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சியின் இயான் பெய்ஸ்லியும் சின்பெயினின் ஜெரி அடம்சும் கை குலுக்கினர்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னுச்சாமி இராசம்மா

மண்ணில்: 05.01.1925 திதி: அட்டமி விண்ணில்: 09.12.2009

தனமாய் தவமிருந்து தங்கமாய் எமைவளர்த்து
தரணியில் உயர வைத்தாய் எம்தாயே
மறக்குமோ நெஞ்சம் உம் இனிய நினைவுகளை

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இன்று (29.11.2010) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குடும்பத்தினர்.
இல.37, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்

# மாற்று வலுவுடையோர் தின விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்று வலுவுடையோர் தினவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி கலந்து கொள்வார். வைத்திய நிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி பரிசில்களை வழங்குவார். (ஒ-10)

# மின் இணைப்பு திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்திற்கு புதிதாகமின் இணைப்பு தொடக்க விழாவும் கண்காட்சியும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி லயன் வி.இராசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-10)

# மரம்நடும் நிகழ்வு

கொடிகாமம், நவ.29

விவசாயக் கழகத்தின் ஏற்பாட்டில் வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மரம் நடும் நிகழ்வு கடந்த வாரம் அதிபர் சி.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய செயல்திட்ட அலுவலர் எஸ்.சிவரூபன்கலந்துகொண்டார்.

இந்தச் செயற்றிட்டம் வடமாகாண கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைய இடம்பெற்றது. (204-122)


# SALES REP

- Around 25 years of age
- 2-3 Years experience in selling
- Should be minimum O-Level Qualified
- Ability to converse in Tamil/ English
- Should possess a valid riding licence
- Salary & Sales commission exceed Rs. 50,000 pm
- Company maintained Motorbike
- Medical provided

APPLY TO
E-mail : hrd@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

FOR FURTHER DETAILS
Contact: 077 756 7147

TRADESMANN

Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956

THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1246 சிகப்பு

துலாம் 24 49 52 54 26-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,070,375/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 222,084 | 20/- | 4,441,680/- |
| 2 இலக்கங்கள் | 20,346 | 40/- | 813,840/- |
| 1 இல. + லக்கினம் | 20,214 | 60/- | 1,212,840/- |
| 2 இல. + லக்கினம் | 1,879 | 200/- | 375,800/- |
| 3 இலக்கங்கள் | 550 | 1000/- | 550,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,070,375/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,454,160/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 593 | | 495,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 265,715 | | 8,949,660/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 6,566,825/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 13 31 46 47 ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 591 | 500/- | 295,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 700,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 593 | | 495,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 800,000/-

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## பாலச்சந்திரன் ஜெயபாலன்

தோற்றம் 28.01.1978
மறைவு 16.10.2010

திராட்சைச் செடியாய் உன்மனைவி சார்ந்திருக்க
ஒலிவ மரக்கன்றுகளாய் உன் பிள்ளைகள் சூழ்ந்திருக்க
நீடித்து வாழ்வாயென நினைப்பினில் நாங்கள் நிற்க
பாதியில் கதைமுடித்து பறந்து நீ சென்றுவிட்டாய்.

கடந்த 16.10.2010 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பத்தலைவன் பாலச்சந்திரன் ஜெயபாலனின் 45ஆம் நாள் ஆத்ம சாந்தித் திருப்பலி இன்று (29.11.2010) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு புனித அஞ்சனந் தாழ்வு புனித கொலை விலக்கி மாதா தேவாலயத்தில் நடைபெறும். இத்திருப்பலியிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"செல்வமாளிகை"
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

சி.தம்பிப்பிள்ளை (மாமா)
(C.T.B.
ஜெ.
ஜெ.ஜெயதுவாரகன் (மகன்), ஜெ.ஜெயதுவாரகா (மகள்).




# வாக்காளர் பதிவு 2010

## வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.
- மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA
minority rights group international

# මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

26.11.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2323

வெற்றி எழுத்து K  வெற்றி எண்கள் 3 5 3 1 8 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K 3 5 3 1 8 3 | ரூபா.11,049,462/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 3 5 3 1 8 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 5 3 1 8 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 3 1 8 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 115 |
| 4 பரிசுகள் | 1 8 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1246 |
| 5 பரிசுகள் | 8 3 | ரூபா. 100/= | பரிசுகள் 12402 |
| 6 பரிசுகள் | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 123326 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 5 3 1 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 3 5 3 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 120 |
| 9 பரிசுகள் | 3 5 3 | ரூபா. 100/= | பரிசுகள் 1264 |
| 10 பரிசுகள் | 3 5 | ரூபா. 50/= | பரிசுகள் 12374 |
| 11 பரிசுகள் | K | ரூபா. 20/= | பரிசுகள் 49183 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,381,480.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசின் வரவு - செலவுத் திட்டம்; முன்பள்ளிகளுக்கு ஒதுக்கீடு இல்லை

**மட்டு. மாவட்ட எம்.பி. யோகேஸ்வரன் விசனம்**

மட்டக்களப்பு, நவ.29

முன்பள்ளிகளுக்காக மத்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் சில ஒதுக்கீடுகள் உள்ளன. எனினும், கிழக்கு மாகாண சபையின் வரவு - செலவுத்திட்டத்தில் எந்த விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இது கவலைக்குரியதாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தேத்தாத்தீவு முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேத்தாத்தீவு விநாயகர் ஆலய முன்றிலில் நடைபெற்ற இப்பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் அறிவொளி பாலர் பாடசாலை, தரிசனம் பாலர் பாடசாலை, மஞ்சரி பாலர் பாடசாலை, அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவ மாணவிகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதன்போது சீ.யோகேஸ்வரன் எம்.பி. தொடர்ந்து பேசுகையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள், சிறார்களின் கல்வி அபிவிருத்திக்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றுபவர்கள். அவர்களுக்காக மாகாண சபை நிரந்தரமான சம்பளம் கிடைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும். பல தடவைகள் இது தொடர்பில் பேசப்பட்டது. எனினும், இது குறித்து மாகாண சபை அக்கறை கொள்ளாதிருப்பது கவலையளிக்கிறது என்றார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் சிறப்பு அதிதிகளாக மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் அருள்ராசா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.புவனசுந்தரம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ளி)

# கழுத்தில் வயர் இறுக்கியதில் ஆறு வயதுச் சிறுமி பலி

அம்பாறை, நவ.29

விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்தில் வயர் இறுகியதால் அதே இடத்தில் குறித்த சிறுமி மரணமானார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை அம்பாறை மாவட்டத்தின் பாலமுனைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

பாலமுனை 3ஆம் பிரிவிலுள்ள நூஹா எனும் ஆறு வயது சிறுமி, நேற்றுக் காலை தனது வீட்டில் வயர் துண்டொன்றை மரத்தில் கட்டி விளையாடிக் கொண்டிருந்த போது, வயரினுள் கழுத்து இறுகியதால் மரணமானார்.




சிறுமியின் தாய் மத்திய கிழக்கு நாடொன்றில் பணிப் பெண்ணாக வேலை செய்து வருகிறார். பாட்டியின் பராமரிப்பில் இச்சிறுமி இருந்துவந்தவர்.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக் காகத் தற்போது பாலமுனை, மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# அம்பாறை மாவட்டத்தில் மழை போக்குவரத்துப் பெரும் பாதிப்பு

அம்பாறை, நவ. 29

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இம் மழையால் மாவட்டத்தின் கரையோரப் பகுதியிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் வீதிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. குறிப்பாக பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கான அக்கரைப்பற்று ஸ்ரீ இராமக்கிருஷ்ண வித்தியாலய வீதி பெருமளவு சேதமடைந்துள்ளது.

இந்த வீதிகளில் குழாய்நீர் அமைப்பு, வடிகால் அமைப்பு ஆகியவற்றுக்காக வெட்டப்பட்ட குழிகள் மூடப்படவில்லை. அதனால் போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

பாணமையிலிருந்து உகந்தை கூமுனை செல்லும் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது; பாலமும் உடைந்துள்ளது. கடந்த இருதினங்களாக இப்பகுதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

பொத்துவில் பகுதியிலுள்ள உல்லாசபுரியான உல்லைப் பகுதியும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கு வந்துள்ள வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் பாதிப்புக்குள்ளானார்கள்.

அதேவேளை, பொத்துவில் பகுதிக்கான குழாய் நீர் விநியோகமும் தடைப்பட்டது. இது தொடர்பாக பொத்துவில் புதிய உதயத்தின் செயலாளர் ஏ.எம். ஜௌபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து குழாய் நீர் விநியோகம் வழமைக்குத்திரும்பியது.(ளி)

# திருகோணமலை மண்ணில் மீண்டும் இலக்கிய முயற்சி

**சட்டத்தரணி ஆ.ஜெகஜோதி பெருமிதம்**

திருகோணமலை, நவ.29

மூன்று தசாப்தங்களுக்கு மேலான அனர்த்தங்களால் கல்வி, செல்வம், நிம்மதி ஆகியவை அனைத்துமே பறிபோயிற்று. கலை, இலக்கிய முயற்சிகளும் திருமலையில் ஸ்தம்பித நிலைக்குள்ளாகின. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் திருகோணமலை மண்ணில் முன்னெடுக்கப்பட்டு வந்த கலை, இலக்கிய முயற்சி மீண்டும் உருக்கொள்வதற்கான அறிகுறிகள் தென்படு கின் றன.

இவ்வாறு திருகோணமலையின் மூத்த சட்டத்தரணி ஆ.ஜெகஜோதி, திருகோணமலை மாவட்டக்கலை, இலக்கிய ஒன்றியத்தின் ஆதரவில் இடம்பெற்ற பட்டி மன்றத் திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருகோணமலை நகரசபையின் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் 'சமூகத்தின் காவலன் சட்டமே' என்ற தலைப்பில் அண்மையில் பட்டிமன்றம் ஒன்று நடைபெற்றது.

ஆ.ஜெகஜோதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், சமூகம், தனிமனிதன் என்ற போர்வை ஊடாக மொழி, பண்பாடு, இனம், நாடு எனப் பிரிகின்றது. கற்கால மனித இனம் மறைந்து நவீன சமுதாயம் தோன்ற முக்கிய காரணியாக அமைந்தது சட்டம், ஒழுங்கு விதிகளே.

சமுதாயத்தை நெறிப்படுத்த சட்டம், விதிகள் என்ற கட்டுக்கோப்பு தேவை. அதனை அனைவரும் காப்பாற்ற வேண்டும். ஜனநாயகம் நீடிப்பதற்கு சட்டம் மதிக்கப்பட வேண்டும். சட்டம் சமூகத்தின் வேலியாகும். வேலியே பயிரை மேயும் நிலைப்பாடு உருவாகிவிடக்கூடாது. எங்கும், எதிலும் நீதி நெறிமுறைகள் இழையோடவேண்டும்- என்றார்.

மாவட்டக் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் திருமலை நவம், ஒன்றியச் செயலாளர் கலாநிதி கே.எம்.எம். இக்பால், திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா ஆகியோர் உட்படப் பலர் இதன்போது உரையாற்றினர். (ளி)

# மலையகத்தில் தொடர்ந்து கடும் மழை; கம்பளையில் 150 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, நவ.29

மலையகத்தில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக இதுவரை 150 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கம்பளை, சங்கரங்கொட்டுவ, உனம் புவ, கண்டிவீதி, அட்டபாகை, அம்புலுவாவெல, மற்றும் அம்பகமுவ வீதி ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உனம்புவப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது

தலவாக்கலை, டயகம, அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நோர்த் பீல்ட்ஸ் அல்பியன் தோட்டத்தில் அதிகமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் 5 லயன் குடியிருப்புகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் ஒருவருக்குச் சிறு காயமும் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்புகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்புக் கருதி அல்பியன் தோட்டத்திலுள்ள சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப் பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெனியாய- பல்லேகம வீதி, விஹாரஹேனவீதி- இரத்தினபுரி ஆகிய வீதிகளில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டு கற்பாறைகள் புரண்டுள்ளன.

தெனியாய காலி வீதியில் போருபிட்டிய பிரதேசத்தில் மரமொன்று முறிந்து விழுந்ததனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் தொலைபேசிகளும் செயலிழந்துள்ளன.

மொறவக்க-நெலுவ வீதி நீரில் மூழ்கியுள்ளதால் இடைக்கிடையே போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

தெனியாய-காலி வீதியில் தியதாவ, பிடபெத்தர, கனங்கே ஆகிய பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் நிலவுகின்றது எனப் பொலிஸார் எச்சரித்து உள்ளனர். (ளி)




# சிவனொளிபாத யாத்திரை டிசெம்பர் 20 இல் ஆரம்பம்

கொழும்பு,நவ. 29

டிசெம்பர் மாதம் 20 ஆம்திகதி பூரணைத்தினத்துடன் ஆரம்பமாகவுள்ள சிவனொளிபாத மலைக்கான யாத்திரைப் பருவ காலத்தை முன்னிட்டு நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி. குமாரஸ்ரீ தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 23 ஆம் திகதி ஹற்றன் - டிக்கோயா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

சிவனொளிபாதமலை விகாராதிபதி கம்பஹால சீலாநந்த தேரர், ஹற்றன் -டிக்கோயா நகரசபைத் தலைவர் ஏ.நந்தகுமார், அம்பகமுவ பிரதேசசபை தலைவர் ஜி.நகுலேஸ்வரன், ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுவர்ணசிங்ஹ மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து இதில் கொண்டனர். இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்தக் கலந்துரையாடலின்போது, இவ்வருடத்திற்கான சிவனொளி பாதமலை யாத்திரைப் பருவகாலத்தை ஆரம்பிக்கும் வகையில் இரத்தினபுரி பெல் மதுளை கல்பொத்தாவெல ஸ்ரீபாத இரஜமஹா விகாரையில் வைக்கப்பட்டுள்ள சமன்தேவ விக்கிரமும், பூஜைப் பொருள்களும் சிவனொளிபாதமலை அடிவாரத்திற்கு கொண்டு வரப்படும்.

விக்கிரமும், பூஜைப்பொருள்களும் இரத பவனியாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி காலை சுபவேளையில புறப்பட்டு பெல்மதுளை, இரத்தினபுரி,அவிசாவளை, கிதுல்கல, கினிகத்தேனை, வட்டவளை, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, நல்லத் தண்ணி வழியாக மலையின் அடிவாரத் தினை அன்றைய தினம் இரவு வந்தடையும்.

சமன் தேவ விக்கிரமும், பூஜைப் பொருள் களும் மலை உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்ததன் பின்பு 20 ஆம் திகதி அதிகாலையில் இடம் பெறவுள்ள விசேட பூஜைகளைத் தொடர்ந்து இவ்வருடத்திற்கான சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவக்காலம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

இந்த இரதபவனியை வரவேற்பதற்கு வழமைப்போல விசேட ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படவுள்ளன. சிவனொளிபாத மலைப் பிரதேசத்தில் பொலித்தின் பாவனை, மதுபாவனை என்பன இம்முறையும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், சிவனொளிபாதமலைக்கு வருகைதரவுள்ள யாத்திரிகர்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்குவதற்கு ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் பிரிவில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த யாத்திரிகர்களுக் காக ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து விசேட போக்குவரத்துச் சேவைகளை நல்லத்தண்ணி நகர்வரை நடத்துவதற்கு ஹற்றன் பஸ் டிப்போ நடவடிக்கை எடுக்கும். - என இந்தக் கலந்துரையாடலின் போது அறிவிக்கப்பட்டது.

# ஹைபொரஸ்ட் பாடசாலை மாணவர் மயக்கம்; உரிய விசாரணை தேவை

ராகலை ஹைபொரஸ்ட் தமிழ் வித்தியாலய மாணவர்கள் சிலர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத் தலை வருமான பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரும் பிரதேச மக்களும் தம்மிடம் செய்த முறைப்பாட்டை அடுத்தே தாம் பொலிஸாரிடம் இது குறித்து கலந்துரையாடியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

பாடசாலையை அண்மித்ததாக சட்டத்துக்கு புறம்பான வகையில் காணிகளை சுவீகரித்து மரக்கறி செய்கைகளில் ஈடுபட்டவர்கள் அரசியல்வாதிகளின் துணையுடன் குறித்த பிரச்சினையை திசை திருப்ப முயல்கின்றனர். பாதிக்கப்பட்ட தமக்கு நீதியைப் பெற்றுத் தருமாறும் பெற்றோர் முறை யிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு நீதியான விசாரணைகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட வேண்டும். இது குறித்து அரசின் உயர்மட்ட அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது - என்றும் திகாம்பரம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, டிக்கோயா மாவட்ட கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஹற்றன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட நோர்வூட் ஸ்டொக்கொம் பாடசாலையைச் சேர்ந்த 14 மாணவர்களே வைத்தியசாலையில் உள்ளனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் [illegible] தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைமட்டமான பின்னும் தழைத்தோங்கி நிற்கும் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

1963 இல் வீ.செல்லத்துரை, 1971இல் த.ஆறுமுகம், 1981இல் திருமதி அ.துரைசிங்கம் ஆகியோர் பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

அ.காசிநாதர் அதிபராக இருந்த காலத்தில் 1988, 1989ஆம் ஆண்டுகளில் விமானக்குண்டு வீச்சின்போது இப்பாடசாலை முற்றாகவே அழிக்கப்பட்டுள்ளது. தரைமட்டமாக்கப்பட்ட இப் பாடசாலை தற்காலிகமாக அயலிலுள்ள வீடுகளிலும் பாடசாலை முற்றத்திலும் இயங்கி வந்த போதும் நல்லிதயங் கொண்ட வெளிநாட்டு அமைப்புக்கள்மூலம் சிறந்த முறையில் புதிய கட்டடங்கள் தளபாடங்கள் என்பவற்றைப் பெற்று மீண்டும் உயிர்த்தெழுந்தது.







இக் காலப்பகுதியிலும் இப் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் முதன்மை இடங்களைப் பெற்றனர். நிறுவனங்கள் மற்றும் பாடசாலையில் அக்கறை கொண்டோர் சிலராலும் பாடசாலைக் கட்டட வசதிகளால் மிளிர்ந்து 2 மாடிக் கட்டடம், 3 மாடிக்கட்டடம் எனப் பௌதீக வளங்கள் உயர்ந்தன. அக்காலப்பகுதியில்தான் பாடசாலைக்குச் சுற்றுமதிலும் கட்டப்பட்டது.

ஆரம்ப காலங்களில் தரம் - 8 வரை மட்டுமே இங்கு வகுப்புக்கள் நடைபெற்றன. இதனால் ஏனைய கல்வித்தரங்களுக்கு மாணவர்கள் உயர் தரப்பாடசாலைளைத் தேடிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

1991ஆம் ஆண்டு இப் பாடசாலையின் அதிபராக கு.சண்முகநாதன் பொறுப்பேற்றார். அவரது காலத்தில்தான் பாடசாலை

**நிசா, வாணி**

இலட்ச்சினை வடிவமைக்கப்பட்டு ''சாந்துணையும் கல்'' என்ற மகுட வாசகமும் பொறிக்கப்பட்டது.

(வளரும்)

# சீரிய சமூகப் பணியில் அரியாலை சன சமூக நிலையம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

புகழ் பெற்ற கலைஞர்களான வீ.ரீ.ஏ.விஸ்வா, ந.கிருஸ்ணசிங்கம், ப.ஸ்ரீகாந்தன், பொ.விஜயரத்தினம், த.பஞ்சலிங்கம், ச.த.கணநாதன், என்.ரி.குணம், ச.உருத்திரேஸ்வரன், சு.குரு, த.புஸ்பலிங்கம், க.மகேந்திரன், க.கணேசலிங்கம், பெண்பாத்திரமேற்கும் அ.பொன்னுத்துரை (பொன்சேகா) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வெகுஜன தொடர்புச் சாதனப் பாவனை குறைந்த அக்காலகட்டடத்தில் விடியும் வரை ரசிகர்கள் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பர். இலங்கை வானொலியில் புகழ் பெற்ற நாடகங்கள், பொப்பிசைக் கலைஞர்களை முதன் முதலில் தமது அரங்குகளில் காண்பித்த பெருமையும் இந்தச் சனசமுக நிலையத்தையே சாரும். ஆண்டு விழாக்கள், சுதேசிய திருநாள் கொண்டாட்டம் என்றால் அரியாலைக் கிராமம் இந்திரலோகமாக மாறிவிடும்.

மாதர் பகுதியினரின் பங்களிப்புடன் முற்று முழுதாக பெண்கள் நடித்த நாடகங்களை இ.கே.குமரையா நெறிப்படுத்தி மேடையேற்றி வந்தார்.

சங்கீத, நடனத்துறைகளிலும் அபிவிருத்தி பெற்று தமிழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களை பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றது. 1975 ஆம் ஆண்டு இவ்விரு துறைகளுக்கும் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்து பொதுப் பரீட்சைகளில் இப்பகுதி மாணவர்கள் சித்திபெற வழிவகுத்துள்ளது. இலவச இரவுக் கல்விச் சேவை, பிரத்தியேக வகுப்புக்களை நாடத்தி மாணவர்களின் பெறுபேறு அடைவு மட்டத்தை அதிகரிக்க உதவிபுரிந்தது.

பண்பும், அறிவும், ஆற்றலுமுள்ள சமூகத்தை உருவாக்கும் நோக்கில் 1975 இல் பாலர்பாடசாலையை ஆரம்பித்து சிறந்தமுறையில் நிர்வகித்து வருகின்றது. 1985 இல் மேலுமொரு மேல்மாடிக்கட்டடத்தை அமைத்துப் பல்துறை சார்ந்த நூல்களை இரவல் கொடுக்கும் பகுதியைச் செயற்படுத்தி வருகின்றது. 1990 இல் சிறுவர்களின் பொழுது போக்கிற்கான சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மாநகர சபைப் பகுதியில் உள்ள தரமான பூங்கா இது என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறையிலும் பல மாகாண, மாவட்ட தேசிய சாதனைகளைப் படைத்துள்ளது. நிலையமும் பரந்த மைதானமும் ஒருங்கே அமைந்தமை ஒரு வரப்பிரசாதமாகும். தேசிய மட்டத்தில் குறுந்தூர ஓட்டத்தில் 1960 இல் பொ. பஞ்சலிங்கம் சாதனைபடைத்தது, எஸ்.கே.மகாலிங்கம் யாழ்.உதைபந்தாட்டக் குழுவுக்குத் தலைமை தாங்கியது, அமரர் ச.த.கணநாதன் யாழ் உதைபந்தாட்டச் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை, யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக வி.கே.சண்முகலிங்கம் கடமையாற்றி வருவது போன்றவை நிலைய விளையாட்டுத்துறை உயர்வுக்குச் சான்றாகும். வடமாகாண ரீதியான சைக்கிளோட்டம், வீதியோட்டம் என்பவற்றை அவ்வப்போது நடத்தவும் தவறுவதில்லை.

இந்நிலையத்தின் அபார வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் வரிசையில் நா.நடராசா, அ.பாலசுந்தரம், திருமதி பத்மலோசனி மாசிலாமணி, சி.சதாசிவம், க.கணேசலிங்கம், அ.விஸ்வநாதன், த.மயில்வாகனம், எஸ்.பி.பத்மநாதன், ச.த.கணநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு வடபகுதியிலேயே முதன்மையான சனசமூகநிலையங்களுள் ஒன்றாகத் தன்னை அடையாளப் படுத்தி வந்த அரியாலை சனசமூக நிலையத்தையும் போரின் கோரத் தாண்டவம் விட்டுவைக்கவில்லை. 1995ஆம் ஆண்டு வரலாற்று இடப்பெயர்வையடுத்து பல ஆண்டுகள் பிரதான இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்டது. குண்டுத் தாக்குதல்களால் பல சேதங்களையும் தளபாட இழப்புக்களையும் சந்தித்தது. சகல துறைச் செயற்பாடுகளும் முடங்கிப்போனது.

பல ஆண்டுகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தமையால் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாக்



கொண்டாட்டங்களை 1999 ஆம் ஆண்டு மாம்பழம் சந்தி நெசவு நிலைய வளவில் எளிமையாகக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டது. 2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ச.ச.நிலையம் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பும் புலம்பெயர்ந்து வாழும் அரியாலை வாசிகளின் தாராள பண உதவிகளும் நிறுவனத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் பக்கபலமாக அமைந்துள்ளது. பொன்விழாக் கொண்டாட்டம் நடைபெற்ற அதே தினத்தில் நோர்வே மற்றும் லண்டனில் வசிக்கும் அரியாலை மக்கள் ஒன்றிணைந்து சிறுவர் விளையாட்டுப் போட்டியை நடத்தியமை அவர்களின் தாய் மண் பற்றை வெளிப்படுத்துகின்றது. தொண்டு நிறுவனங்கள், புலம் பெயர்ந்த நிலைய அங்கத்தவர் களின் உதவியுடன் நிலைய கட்டட மும் இன்னோரன்ன வசதிகளும் சீரமைக்கப் பட்டு மீண்டும் பழைய நிலைக்கு உயர முயன்று கொண்டிருக்கிறது.

சமூகத்திற்கும், இனத்திற்கும், தமிழ்மொழிக்கும் சிறந்த தொண்டாற்றி வரும் இந்நிலையம் கடந்த வருடம் 60ஆவது வைர விழாவைக் கொண்டாடி வீறு நடை போடுகிறது. தற்போது தலைவராக ம.விஜயகுமாரும், செயலாளராக க.சண்முகலிங்கமும் வழிநடத்தி வருகிறார்கள்.

பரந்துபட்ட அரியாலை பிரதேசத்திலுள்ள 13 இற்கும் மேற்பட்ட

**யோகதாஸ்**

சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து வருடாந்தம் சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களைச் சித்திரைப்புத்தாண்டில் நடத்தி வருவது சிறப்பம்சமாகும்.

அரியாலை சனசமூக நிலையம் யாழ். நகர மக்களுக்கு, சிறப்பாக அரியாலை மக்களுக்கு ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன. 'என் கடன் பணி செய்துகிடப்பதே என்னும் வாக்கிற்கு அமைய விளையாட்டு, சுகாதாரம், கலை, நாடக, நடன, சமூக சேவை, கல்வித் துறைகளில் முன்னோடியாகத் திகழ்கிறது. இதனை அடியொற்றி ஏனைய சனசமூக நிலையங்களும் கலங்கரை விளக்காகச் செயற்பட்டால் எமது பிரதேசம் எழுச்சியுடன் முன்னேறும் என்பது வெளிப்படை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலில் நிகழ்ந்ததைப் போன்று வடபகுதியில் இராணுவக் குடியிருப்புகளை அரசு அமைக்கின்றது

## நாடாளுமன்றில் மங்கள சமரவீர

**சபையில் கேட்டவை**

*உதயன் சபைச் செய்தியாளர்:* இரா.புத்திரசிகாமணி

அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் அரசாங்கத்துக்குள் இருக்கும் பாதாள உலகக் குழுவினரின் ஆதிக்கமே தலை தூக்கி உள்ளது. பிரபாகரனின் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதாகக் கூறினாலும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் பயங்கரவாதம் இப்போது உதயமாகிவிட்டது என்று கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் மங்கள சமரவீர.

இதனால் சபை பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலமுறை சபாநாயகரின் கண்டனத்திற்கும் உள்ளாகினர்.

ஆளும்கட்சி உறுப்பினர்களின் சத்தம் தாங்க முடியாத சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நானும் ராஜபக்ஷ குடும்பத்தவன்தான். நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம். நீங்கள் போய் தேநீர் குடித்துவிட்டு வாருங்கள் என ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு கடுமையாகக் கூறினார்.

வரவு செலவுத் திட்டம் மீதான ஐந்தாவது நாள் விவாதம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது.

வழமை போல் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் வழக்கமான சர்ச்சைகள் ஏற்பட்டன. ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினரான ரவி கருணாநாயக்க 2010 மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அவர்களது பணியாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள், சம்பளம் உட்பட மற்றும் அவர்கள் அனுபவிக்கும் சலுகைகள் என்பவற்றை விலாவாரியாக சபைக்கு தெரிவிக்க வேண்டும் என பிரதமரிடம் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

அதேவேளையில் பிரதமர் சபையில் இருக்காததினால் ஆளும்கட்சி கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன "இக்கேள்விக்கு பதிலளிக்க ஒருமாதகால அவகாசம் தேவை" எனக் குறிப்பிட்டார்.

"அமைச்சர் எல்லாக் கேள்விக்குமே கால அவகாசம் கேட்கிறார். ஏன் மேலும் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போகின்றீர்களா?" என ஒரு கேள்வியைத் தொடுத்தார் ரவி கருணநாயக்க. "இல்லைஇல்லை நீங்கள் நீண்டகாலங்களுக்கான கடந்தகால விவரங்களைக் கேட்டுள்ளீர்கள், அதனைத் திரட்டுவதற்காகத் தான் அவகாசம் வேண்டும்" என்றார் அமைச்சர்.

"அமைச்சர் அவர்களே இது சாதாரண விடயம், சாப்பிட்டு, உண்டுகழித்தவைதானே அதற்கான கணக்கு வழக்கே இல்லையா?" என்று கிண்டினார் ரவி கருணாநாயக்க.

"நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. உங்களுக்கான பதில் ஒரு மாதத்தில் கிடைக்கும்" என்று கூறி முற்றுப்புள்ளி வைத்து விட்டார் அமைச்சர் தினேஷ்.

இதன்பின்னர் ஐந்தாவது நாள் விவாதத்தை ஆரம்பித்தார் எதிரணி உறுப்பினரான மங்கள சமரவீர.

அவர் ஆரம்பித்த நேரம் முதல் கூச்சல், குழப்பம், இடையூறுகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

ஜனாதிபதியை ஹிட்லர், சதாம் ஹூசைன் போன்ற சர்வாதிகாரிகளுக்கு ஒப்பிட்டுப் பேசினார் மங்கள. "எதிரணியினரை லஞ்சம் கொடுத்து உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளை அழித்து விட்டார்" என்றும் கூறினார்.

மங்கள சமரவீரவின் இந்தக் கூற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசின் பக்கம் தாவிய ஏ.எச்.எம். அஸ்வர், அப்துல் காதர் ஆகியோரை உசுப்பி விட்டது.

இரண்டு பேருமே ஒரே வேளையில் "ஒழுங்குப் பிரச்சினை", "மைன்ற் ஒப் ஓடர்" என்றும் சத்தம் போட்டனர்.

ஆனால் மங்கள சமரவீர அவர்களுக்கு இடமளிக்காமல் தொடர்ந்து உரையாற்றினார். அப்போது அமைச்சர் டிலான் பெரேராவும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

பிரதி அமைச்சர் காதர் ஆவேசம் வந்தவர் போல் ஏதேதோ கூறினார். அவர் பதற்றத்துடன் பேசியது தெரிந்தது. ஆனால் என்ன பேசுகின்றார் என்பது புரியவில்லை. "எம்பக்கம் இருந்து அங்கே போய் அமர்ந்து கொண்டு ஒரு முட்டாள் ஊளையிடுகிறார்" என்றார் மங்கள சமரவீர.

இதனை ஆட்சேபித்தார் அன்வர் எம்.பி. "ஒரு கௌரவ உறுப்பினரை முட்டாள் என்று கூறுகின்றார். அவர் கூறியது பதிவேட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும்" என்றார்.

இதே நேரத்தில் அமைச்சர் டிலான் பெரேராவும், காதர் எம்.பியும் இன்னும் சிலரும் மங்கள சமரவீரவை நோக்கி 'பொன்னையா பொன்னையா' என்று கூச்சலிட்டனர்.

"ஐயா! இவர்களின் கூற்றின்படி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகளைப் பெற்று சபைக்கு வந்து கட்சியை காட்டிக்கொடுத்து விட்டு ஓடியவர்களைத் தான் 'பொன்னையா' என்பார்கள்" என்று பதிலடி கொடுத்தார் மங்கள சமரவீர.

தொடர்ந்து மங்கள சமரவீர உரையாற்றிய போது அவர் பெரும்பான்மை இனத்தவரா அல்லது தமிழ் மக்களின் பிரதிநிதியா என்று வியக்கும் வகையில் அமைந்திருந்தது.

அவரது பேச்சு, இனப் பிரச்சினை இல்லை, சிறுபான்மை இல்லை என்று கூறிக்கொண்டு வட பகுதியில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை- விகிதாசாரத்தைக் குறைக்கவெனத் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றனர்.

கிளிநொச்சியில் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் ஆயிரம் இராணுவக் குடும்பங்களைப் பலவந்தமாகக் குடியேற்றி உள்ளனர்.

இது இஸ்ரேலில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்தினைப் போன்றது. இஸ்ரேலில் இன்னும் கலவரம் ஓயவில்லை. அப்படியான ஒரு நிலைமையை இந்த அரசாங்கமே உருவாக்கப் போகிறது என்றும் குற்றஞ் சாட்டினார்.

"வடக்கு, கிழக்கில் புத்தர் சிலைகளை நட்டுவிட்டு சமாதானம் ஏற்பட்டு விட்டது என்கின்றனர். ஆனால் அங்கு வாழும் பல லட்சம் இந்துக்களின் விசேடமான வழிபாட்டுக்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது, - தண்டனை வழங்கப்படுகின்றது" என்று சில நிகழ்வுகளைக் கோடிட்டுக் காட்டினார்.

"இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாக நிரந்தரமான தீர்வு ஒன்றை ஏற்படுத்தாவிட்டால் எந்த ஒரு உலக நாடும் இங்கு வந்து முதலீடு செய்யாது" என்றும் குறிப்பிட்டார்.

மங்கள சமரவீரவின் இந்தப் பேச்சு ஆளும் தரப்பினருக்குப் பெரும் கொதிப்பை ஏற்படுத்தி விட்டது. இதனால் பலரும் பலவாறு கூச்சலிட ஆரம்பித்து விட்டனர். இதனைச் சகிக்க முடியாத நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து "இங்கேசத்தம்போடாமல்வெளியே போய் தேநீர் குடித்துவிட்டு வாருங்கள்" என்றார் சற்றுக் கடுப்பாக. பத்திரிகையாளர் சபையிலும் இந்தத் தாக்கம் காணப்பட்டது.

ஆரம்பத்தில் பேசிய அமைச்சர்களான டிலான் பெரேராவும், மேர்வின் சில்வாவும் மங்கள சமர வீரவின் பேச்சை விமர்சித்ததோடு, அவரது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாகவும் கொச்சையாகப் பேசினர். ஆனால் அந்த சமயத்தில் மங்கள சமர வீர சபையில் இருக்கவில்லை.

"கட்சி மாறியவர்களைப் பற்றி விமர்சனம் செய்யும் மங்கள சமரவீர ஆரம்பத்தில் அலரி மாளிகைக்கு வந்து வெளிநாட்டு அமைச்சுடன் கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சையும் தந்தால் அரசுடன் இணைந்து கொள்வதாகக் கூறினார். அவர் கேட்ட அமைச்சுக்கள் கிடைக்காத ஏமாற்றத்தால்தான் இப்போது ஜனாதிபதிக்கு விரோதமாகப் பேசுகின்றார்" என டிலான் பெரேரா கூறினார்.

"அதேவேளை வடக்கில் இராணுவக் குடியேற்றம் என்று புரளியைக் கிளப்பிவிட்டு சர்வதேச அரங்கில் இலங்கையின் நற்பெயருக்கு குந்தகம் ஏற்படுத்த முனையும் மங்கள சமர வீர ஒரு தேசத் துரோகி" என்றும் டிலான் சாடினார்.

நாடாளுமன்றத்தில் எல்லோரினது கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகும் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்றுமுன்தினம் பேச எழுந்த போது எதிர்த்தரப்பினர் ஏககாலத்தில் மேசைகளைத் தட்டி அவரை உற்சாகப்படுத்தினர்.

எதிரணியில் இருந்து தலந்தா அத்துகொரல அடிக்கடி குறுக்கீடு செய்தார். "தலந்தா நீங்கள் என்னை மிகவும் நேசிக்கின்றீர்கள். அதனால் தான் என்னைக் கிண்டல் செய்கிறீர்கள்" என்று மேர்வின் கூற "ஆம், ஆம் நாம் உறவினர்கள் தானே" என்றார் தலந்தா அத்துகொரல.

தொடர்ச்சியாக இரட்டை அர்த்தம் தொனிக்கும் பல கூற்றுக்களைக் கூறி சபையைக் கலகலப்பாக்கினார் மேர்வின் சில்வா.

# அடக்கு முறை நிலைக்காது...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னாபிரிக்காவினைப் பொறுத்தவரையில் நெல்சன் மண்டேலாவும் தேசியக் கட்சியின் தலைவர் பிடெரிக் கிளாக் உம் கருத்தொருமைப்பாட்டுக்கு வந்தனர். ஆனால் இலங்கையில் இது போன்றதொரு நிகழ்வு இடம்பெற வில்லை.

இலங்கைத்தீவில் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் தெற்கினது பிரதான கட்சிகள் இரண்டும் மறுதரப்பின் குரல்வளையினை நெரிப்பதிலேயே தங்களது காலத்தினைக் கழித்தன. இதன் காரணமாக அமைதிவழி முயற்சிகள் ஊடாக எட்டப்படும் உடன்பாடுகள் நீடித்து நிலைக்குமா என்ற சந்தேகம் புலிகளமைப்பினர் மத்தியில் தோன்றியது.

அதேபோன்று ஈழத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தாங்களே என்ற எண்ணத்தில் விடுதலைப் புலிகள் செயற்பட்டமை பேச்சு மேசைகளில் தமிழர்கள் சார்பாக ஏனைய பிரதிநிதிகள் பங்கெடுக்கும் வாய்ப்பினை இல்லாதுசெய்தது. அமைதிப் பேச்சுக்களின்போது நாட்டிலுள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளின் கருத்துக்கள் செவிமடுக்கப்படவில்லை. முஸ்லிம் அரசியல் கட்சிகள் கடும் பிரயத்தனத்தின் பின்னர் அரச பிரதிநிதிகளாகப் பேச்சுக்களில் பங்கெடுத்தமை வேறுகதை.

ஒரு நாட்டினது அடிப்படை விழுமியங்கள் கட்டாயம் பகிரப்படவேண்டும். அல்லது அந்த நாட்டின் அரசு மற்றும் அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றத் தினைக் கொண்டுவருவதற்குப் போதுமான வகையிலாவது இந்தப் பகிர்வு அமையவேண்டும்.

குறித்ததொரு வாதத்தினை அல்லது கருத்தினை முன்வைத்து அதனை வெல்லுவதற்குத் தேவையான அதிகாரம் அரசிடம் இருந்தால் போதுமானது. ஆனால், வெற்றிகரமான அரசியலமைப்பு மாற்றத்திற்குத் தொடர்புடைய தரப்பினர் மத்தியில் கருத்தொருமைப்பாடு ஏற்படுவது அவசியமானது. இலங்கைத் தீவின் பெரும்பான்மையினச் சிங்களவர்களைப் பொறுத்தவரையில் நாட்டினது அரசாட்சியில் எல்லாமே சிறப்பாக இருக்கிறது என்றும் வெளித்தரப்பினர் தேவை யற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தாது விலகியிருக்கவேண்டும் என்றும் கருதுகிறார்கள்.

ஆனால் உண்மையான இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் ஏனைய மதம், சமூகம் மற்றும் மொழிகளைப் பின்பற்றுபவர்களின் சட்ட ரீதியான உரிமையினையும் மதித்துச் செயற்படுவது அவசியமானது. இலங்கை ஒடுக்கு முறையும் அடக்குமுறையும் நிறைந்து கிடக்கும் தேசம். இந்த நிலை தொடருமிடத்து வருகின்ற ஆண்டுகளில் மேலும் பல சிக்கல்களை அது சந்திக்க நேரலாம்.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் தனக்கிருக்கும் நட்புறவினை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கை செயற்படுகிறது. சுதந்திர வர்த்தக வலயங்களை ஏற்படுத்துதல், அரசாட்சி தொடர்பான அனுபவங்களைப் பகிந்துகொள்ளல் போன்ற அம்சங்களை இந்த நாடுகளுக்கிடையிலான உறவின் போது அவதானிக்கமுடிகிறது. தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் இலங்கையின் விடயத்தில் இந்தியாவினால் அதிக சிரத்தையுடன் செயற்படமுடியும்.

சீனா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் பொருளாதார அபவிருத்தியில் பெரும் பங்காற்றவேண்டும் என இலங்கை வலியுறுத்தி வருகிறது. ஆனால் பொருத்தமான சந்தர்ப்பம் வழங்கப்படு மிடத்து இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் முக்கியமானதொரு பங்கினை வகிப்பதற்கு இந்தியாவினால் முடியும்.

அனைத்துலக சமூகம், சர்வதேசப் பொது அமைப்புக்கள் என்பன இலங்கை யில் நிலவிவரும் நிலைமைகள் தொடர்பாகக் கூர்ந்து அவதானித்துக்கொண்டிருக்கின்றன. மேற்கு நாடுகளைப் பொறுத்த வரையில் ஜனநாயகமும் மனித உரிமைகளும்தான் அவர்களது கனவன்று. மாறாக இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் அபிலாசைகளின் அடிப்படைகள் தொடர்பாக மேற்கு நாடுகள் அதிகம் பேசுகின்றன.

இதுபோன்ற உண்மையான நலன்களை மாத்திரம் மனதில் கொண்டு இலங்கை யின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நிறுவனங்கள் இல்லையென்றே கூற வேண்டும். மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகப் பண்புகள் பற்றித் தற்போது பேசும் அனைத்துலக அமைப்புக்கள் ஏதோவொரு உள்நோக்கத்தின் அடிப்படையிலேயே செயலாற்றுகின்றன. ஆனால் கால ஓட்டத்தில் சர்வதேச சமூகத்தின் இதுபோன்ற அழுத்தங்களை இலங்கை அரசினால் தட்டிக்கழிக்க முடியாது. அல்லது இன ரீதியாகப் பிளவுபட்டுப் போயிருக்கும் ஒரு நாட்டின் தலைவர் என்ற யதார்த்தத்தைப் புறந்தள்ளவும் முடியாது. இந்த அடக்குமுறையானது இப் போதைக்கு பலனைத் தரலாம். ஆனால் அதுவே எப்போதும் நிலைக்காது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின்ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்:
ரி.அகிலன்,
ACA கல்வி நிலையம்,
திருகோணமலை.
தொ.பே.இல: 077-2267801

G.C.E.(O/L) விசேட வலம் 3

## வரலாறு - I 1 மணித்தியாலம்

01. குளவம்சத்தை அறிமுகப்படுத்தியவர்,
 1) கைபர் பணிடிதர் 2) றொபட் நொக்ஸ்
 3) வித்யாசக்கரவர்த்தி 4) மகாநாமதேரர்

02. வரலாற்றுக்கு முற்பட்ட மக்களின் தானியப்பயன்பாடு பற்றி விளக்கும் மூலாதாரம் கிடைக்கப் பெற்ற இடம்,
 1) பதிய கம்பளை 2) இப்பன்கட்டுவ 3) பாகியன்கல 4) பெலிலேன

03. பின்வரும் குடியேற்றங்களை ஒழுங்குபடுத்துக.
 1. கதம்பநதி A. விஜிதபுர
 2. மகாவலி நதி B. தீகவாபி
 3. கிரிந்திஓயா C. மகாகம
 4. கல்லோயா D. அநுராதகம
 1) DABC 2) DBAC 3) DACB 4) DBCA

04. "டொமோகிரபியா" என்ற நூலின் ஆசிரியர்,
 1) கொஸ்மஸ் 2) பிளினி 3) அரிஸ்டோட்டில் 4) மெதஸ்தனிஸ்


05. பாளிமொழியின் பொற்காலம்,
 1) யாப்பகுவ 2) பொலநறுவை 3) அநுராதபுரம் 4) கோட்டை

06. சீன செங்வேஹா சேனாபதி படையெடுப்புக்கு காரணமானவன்,
 1) 3ஆம் விஜயபாகு 2) 6ஆம் விஜயபாகு
 3) வீர அழகேஸ்வரன் 4) 1ஆம் கஜபாகு

07. கலிங்க மன்னனின் படையெடுப்பின்போது பொலநறுவை மன்னன்,
 1) பராக்கிரம பாண்டியன் 2) 1ஆம் பராக்கிரமபாகு
 3) 5ஆம் மகிந்தன் 4) நிஸ்ஸங்கமல்லன்

08. மகாவலி கங்கையின் அயலிலுள்ள சிவனொலிபாத மலையின் பிரதான பாதையில் அமையப் பெற்ற இராசதானி,
 1) கம்பளை 2) யாப்பகுவ 3) கண்டி 4) தம்பதெனியா

09. 1. பனாகடுவ செப்புசாசனம் A. வசபன்
 2. வல்லிபுர சாசனம் B. 1ஆம் விஜயபாகு
 3. தெவனாகல சாசனம் C. மகிந்தன்
 4. மிகிந்தலை சாசனம் D. 1ஆம் பராக்கிரமபாகு
 1) DACB 2) ADCB
 3) ABCD 4) BADC




10. சங்கமித்தை, பத்தசங்சானா வருகையுடன் தொடர்புடைய துறைமுகங்களை குறிக்கும் எழுத்துக்கள்,
 1) AB 2) BC
 3) ED 4) FA

11. F என்ற எழுத்து மிக பண்டைய காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை,
 1) கனிய மணல் 2) பவளப்பாறைகள்
 3) முத்து 4) உப்பு

12. மும்மொழியிலான கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட துறை முகத்தை குறிக்கும் எழுத்து,
 1) A 2) B
 3) D 4) E

13. கி.பி 5ஆம் நூற்றாண்டில் "ஜானகி ஹரன" என்ற சமஸ்கிரத நூலை எழுதிய மன்னன்,
 1) அக்ரபோதி 2) குமாரதாச 3) 1ஆம் சேனன் 4) 2ஆம் அக்பர்

14. அத்துகல்புரவை இராசதானி ஆக்கிய மன்னன்,
 1) 1ஆம் புவனேகபாகு 2) 2ஆம் புவனேகபாகு
 3) 3ஆம் பாராக்கிரமபாகு 4) 5ஆம் பராக்கிரமபாகு

15. விஜய நகர பேரரசு தோற்றம் பெறும்போது டில்லியின் ஆட்சி வம்சம்,
 1) வஹல் 2) வோடி 3) கில்ஜி 4) துக்ளக்

16. சுதந்திர, சமத்துவம், சகோரத்துவம் என்ற தொனிப்பொருள் கொண்ட புரட்சி,
 1) ரஷ்ய புரட்சி 2) ஆங்கிலப் புரட்சி
 3) பிரான்ஸிய புரட்சி 4) கைத்தொழில் புரட்சி

17. A. இருசபை பாராளுமன்றம்.
 B. நிறைவேற்று அதிகாரம்.
 C. பிரதமர் தலைமையிலான மந்திரி சபை
 D. டொமினியன் அந்தஸ்து
 E. விகிதாசார தேர்தல்.
 சோல்பரி யாப்பு கொண்டிராத அம்சங்கள்,
 1) AB 2) BC 3) BE 4) AE

18. மாளிகாகந்தை வித்தியோதய பிரிவெனாவை அமைத்தவர்,
 1) வலானே சித்தார்த்த தேரர் 2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
 3) இரத்மலான தர்மலோக தேரர் 4) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

19. இன்றைய பௌத்த சமயக் கொடியை வடிவமைத்தவர்,
 1) அனகாரிக தர்மபால 2) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
 3) வெஹன்றி ஸ்ரீல் ஒல்கொட் 4) D. S. சேனாநாயக்க

20. இந்திய சுதந்திர போராட்டத்தில் "பஞ்சாப் சிங்கம்" என வர்ணிக்கப்பட்டவர்,
 1) கோபால கிருஷ்ண தோதலே 2) பிபின் சந்திரபோஸ்
 3) லாலா லஜ்பதி ராய் 4) சுரேந்திர நாத் பாணர்ஜி

21. ஜப்பானிய நெப்போலியன் வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படுபவன்,
 1) நொபுனகா 2) ஹிதேயோஷி தொயோ தொமி
 3) டொகுகாவா இயாஷி 4) யொசித் தொமோ

22. நவீன பொதுவுடமைச் சீனாவின் சிற்பி,
 1) ஷியாவ் - கே. ஷேக் 2) மா - ஓ - சேதுங்
 3) யுவான் ஷி காய் 4) சூ - யென் லாய்

23. இலங்கை வரலாற்றின் கடைசிச் சிங்கள மன்னன்,
 1) 8ஆம் வீரபராக்கிரமபாகு 2) வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
 3) கீர்த்தி இராஜசிங்கன் 4) ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன்

24. ஸ்ரீ சிங்களாதீஸ்வர என்ற பட்டத்தை கொண்டவர்,
 1) முதலாம் விமலதர்ம சூரியன் 2) மகாபராக்கிரமபாகு
 3) 2ஆம் இராஜசிங்கன் 4) 6ஆம் பராக்கிரமபாகு

25. 1. தந்துரே போர் A. அல்போன்ஸா டி சூஸா
 2. கண்ணொருவ போர் B. தியோத டி மெல்லோ கஸ்ரோ
 3. முல்லேரியா போர் C. பெரோலோ பேஸ் டீ சூஸா
 1) CBA 2) BCA 3) ABC 4) BAC

26. முதலாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை இந் நாட்டிலிருந்து விரட்ட முடியாமல் போனமைக்கான காரணம்,
 1) பொருளாதார சீர்குலைவு.
 2) அரசியல் வாரிசு பிரச்சினை.
 3) பலமான கடற்படை இன்மை.,
 4) மக்களின் ஆதரவு போர்த்துக்கேயருக்கு கிடைத்தமை.

27. சிலுவைப்போரின் விளைவு அல்லாதது,
 1) சுரங்கம் அமைத்தல். 2) புறாக்களைக் கொண்டு தூதுவிடல்.
 3) சீன வெடிமருந்து உபயோகம். 4) மானிய முறை தோற்றம்.

28. கிளாஸ் நொட்ஸ், பெடஸ்ரொய்பொய்கா என்ற இரு சீர்திருத்தங்களின் விளைவு,
 1) ரஷ்ய புரட்சிக்கு வழிவகுத்தது.
 2) ஐந்தாண்டு திட்டத்திற்கு ரஷ்யாவை புகுத்தியது.
 3) சோவியத் ரஷ்யா உடைவு.
 4) விண்வெளி ஆய்வில் ரஷ்யா ஈடுபட்டமை.

29. 2ஆம் உலக மகா யுத்தத்துடன் தொடர்பு அற்ற நிகழ்வு,
 1) பேர்ள் துறைமுகம் தகர்ப்பு. 2) ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்.
 3) லூசிட்டானியா கப்பல் மூழ்கடிப்பு. 4) ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சு.

30. 2ஆம் உலக மகாயுத்த நேச அணித் தலைவர்கள்,
 1) ஜோசப் ஸ்ராலின், ஆட்ரோ வில்சன், கிளமென்சோ
 2) வின்சன் சேர்ச்சில், ஹிட்லர், முசோலினி
 3) பிராஜ்வின் ரூஸ்செல்ட், ஜோசப் ஸ்ராலின், ஹரோஷித்தோ
 4) வின்சன் சேச்சில், பிராங்ளின் ரூஸ்வெல்ட், ஜோசப் ஸ்ராலின்

31. தற்போதைய ஐ. நா சபை செயலாளர்,
 1) பான் கீ மூன் 2) கோற்பி அனான் 3) ட்றிக்விலி 4) மன்மோகன் சிங்

32. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு காரணமாகாத விடயம்,
 1) அமெரிக்காவின் பங்கு இன்மை.
 2) ஜேர்மனி, ரஷ்யா அங்கத்துவம் இன்மை.
 3) தனி இராணுவப் படை இன்மை. 4) ஹிட்லர் சங்கத்தில் இணைந்தமை.

33. "தீப்பொறி" என்ற பத்திரிகையின் ஆசிரியர்,
 1) ஹிட்லர் 2) முசோலினி 3) லெனின் 4) ஸ்டொஸ்கி

34. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட நாடுகள் இணைந்து உருவாக்கிய அமைப்பு,
 1) சார்க் 2) ஒபெக் 3) பிம்ஸ்ரெக் 4) பொதுநலவாயம்

35. இலங்கைக்கு BMICH கட்டடத்தை அமைத்துக் கொடுத்த நாடு,
 1) ஐ. அமெரிக்கா 2) சீனா 3) ஜப்பான் 4) ரஷ்யா

36. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் அல்லாதது,
 1) பிரதமரை நியமிப்பது. 2) உயர் நீதிமன்ற நீதிபதி பதவி நீக்கம்.
 3) அமைச்சரவை நியமனம். 4) பல்கலைக்கழக ஆணைக்குழு நியமம்.

37. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமையப்பெற்ற நாடு,
 1) இந்தியா 2) சீனா 3) இலங்கை 4) பிலிப்பைன்ஸ்

38. துரித மகாவலி திட்டம் ஆரம்பமான இடம்,
 1) பொல்கொல்ல, நுவரெலியா 2) அம்பாறை, வெலிஓயா
 3) உடவளவை, வெலிஓயா 4) பொல்கொல்ல, போவதென்ன


39. இலங்கை ஐக்கிய நாடுகளின் சபையில் இணைந்து கொண்டபோது இலங்கையின் பிரதமர்,
 1) D. S. சேனாநாயக்க 2) டட்லி சேனாநாயக்க
 3) சிறிமாவோ பண்டாரநாயக்க 4) ஜோன் கொத்தலாவல

40. "PL 480" ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு கோதுமையைக் குறைந்த விலையில் வழங்கும் நாடு,
 1) சீனா 2) ஜப்பான் 3) ஐ. அமெரிக்கா 4) ரஷ்யா

## வரலாறு - II 3 மணித்தியாலங்கள்

01. 1) பின்வரும் (1) இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் எல்லாவற்றையும் இலங்கைப் படத்திலும், (2) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற இடங்களை உலகப் படத்திலும் குறிக்குக.
 1. கோகர்ண, தீகவாபி, அனுராதகம, பலாங்கொட, வல்லிபுரம், தந்துரே, மாகம, மினிப்பே, கல்யாணி, கொடவாய.
 2. தாமிரலிப்தி, கீல்கால்வாய், பிலிப்பைன்ஸ், மகலன்தொடுகடல், துங்கபத்ராநதி, புத்தகயா, ஆப்கானிஸ்தான், அல்ப்ஸ் மலை.
 2) 1. கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவர்களைக் குறிப்பிடுக.
 A. ஜூரி சபையை உருவாக்கிய ஆங்கிலேய ஆட்சியாளன்.
 B. மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தை.
 C. 1972ஆம் ஆண்டு 1ஆம் குடியரசு யாப்பை வரையும் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.
 D. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் பௌத்த சமய பணிக்கு நியமிக்கப்பட்ட பிக்கு
 2. A, B, C, D கலைப்படைப்புக்களை முறையே குறிப்பிடுக.


A


B


C


D

 3. A, B, C, D என குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்தெடுத்து விடை எழுதுக.
 A. காபனாரி இயக்கத்தினை ஆரம்பித்தவர்.
 B. இந்தியாவின் நெப்போலியன் என வர்ணிக்கப்படுபவன்.
 C. நீண்ட நடை பயணத்தினால் கொமியூனிஸ வாதத்தை வளர்த்தவர்.
 D. இரண்டாம் உலக மகா யுத்தத்தை நடத்திய ஜப்பானிய மன்னன்.
 (கரிபால்டி, ஜோசப்மசினி, அசோகன், சமுத்திரகுப்தன், சன்-யாத்-சென், மா-ஓ-சேதுங், ஹிரோஷித்தோ, நொபுனகா)

02. 1) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய கல்வெட்டுக்களைத் தருக.
 1. துறைமுகத்தில் அறவிடப்படும் தீர்வைகள்.
 2. தேங்காய் எண்ணெய்யினால் விளக்கிடும் முறைகள்.
 3. நீதிமன்ற அபராதங்களை விஹாரைக்கு வழங்கள்.
 2) பின்வரும் நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்கள் ஒன்று வீதம் தருக.
 A. கதம்பநதி. B. கிரிந்தி ஓயா.
 C. மகாவலி கங்கை. D. கல்க நதி.
 3) பண்டுகாபயன் இலங்கையில் சிறந்த மன்னன் என்பதை இரு ஆதாரங்கள் ஊடாக விளக்குக.
 4) இலங்கையில் பௌத்த சமயம் பரவியமையால் ஏற்பட்ட சமூக, கலாசார மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை

*வாசகர்களே !*
*நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப் பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலா பலன்களை வழங்க வுள்ளார்*




( புனர்பூசம்4, பூசம், ஆயில்யம் )

துணிவுடன் செயல்புரிந்து வாழ்வில் முன்னேறும் கடகராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு ஒன்பதாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். ஓடிப் போகிற வருக்கு ஒன்பதாம் இடத்தில் குரு என்பது ஜோதிட சாஸ்திரம். அதாவது, தப்பு செய்தவர்கள் கூட குருவருளால் தப்பி விடுவார்கள் என்பது பொருள். அதற்காக, ஏதாவது தப்பு செய்தால் அடுத்துவரும்பத்தாம் இடத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும். கவனம். இந்தக் கால கட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகமாக கிடைக்கும். ஓடியாடி வேலை செய்தால் சிறந்த சேமிப்பை உருவாக்கிக் கொள்ளலாம். இந்த கால கட்டத்தில் தாறுமாறாகக் கடன் வாங்கு வதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், இவ்வாறு கடன் வாங்குவோர் ஓடி ஒளி கிற நிலை ஏற்படும். மீனத்தில் உள்ள குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வை யால் முறையே ராசி, மூன்றாம் இடமான புகழ், தைரியம், ஐந்தாம் இடமான புத்திர, பூர்வ, புண்ணிய ஸ்தானங் களைப் பார்க்கிறார். இதனால் மனதில் நல்ல சிந்தனையும் செயல்திறனும் அதிகரிக்கும். இடம், பொருள் அறிந்து பேசி பிறரது அன்பைப் பெறுவீர்கள். சமூகப்பணியில் ஈடுபாடு வளரும். சகோதர, சகோதரிகள் உங்களுக்கு உரிய மரியாதையும், தேவை யான உதவிகளையும் மனமுவந்து வழங்கு வர். வீடு, வாகனத்தில் பெறுகிற வசதி இன்னும் சிறப்பான வகையில் கிடைத் திடும். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பர். இஷ்ட, குலதெய்வ வழிபாடு சிறப்பாகநிறைவேறி பூரண நல்லருளை பெற்றுத் தரும். சொத்து சேர்க்கை கிடைக்க நல் யோகம் உள்ளது. எதிரியின் கெடுசெயல் களை சாதுர்யமான நடவடிக்கையால் சரிசெய்து வெற்றி கொள்வீர்கள். உடல் நலம் சிறப்பாக அமைந்து உங்களை சுறுசுறுப்பாகச் செயற்பட வைக்கும். கடன் தொந்தரவு அணுகாத வகையில் வாழ்வியல்நடை முறையை சீராக்குவீர்கள். தம்பதியர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள் வர். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். விபத்து, கண்டம் அணுகாத பாதுகாப்பு நிறைந்த வாழ்க்கை முறையை குருவருளால் பெறுவீர்கள். தந்தை, சான்றோரின் அன்பு, ஆசி முழுமை யாக கிடைக்கும். திருமண வயதினருக்கு நல்லவரன் கிடைத்து சுபமங்கல நிகழ்வு நிறைவேறும். வெளிநாடு வேலை வாய்ப் பில் அனுகூலமும் கணிசமான பணவரவும் கிடைக்கும்.

**தொழிலதிபர்கள்:** தொழில்சார்ந்த வகையில் வளர்ச்சியும், சிறப்பான அந்தஸ் தும் வந்து சேரும். கண்ணாடி, மருந்து, மருத்துவ உபகரணங்கள், தோல் கட்டு மானப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் தொழில் சிறந்து உயர் அந்தஸ்து மற்றும் தாராள பணவரவு காண்பர். உல்லாசவிடுதி, அச்சக அதி பர்கள் புதிய வாய்ப்புகள் கிடைத்து தொழி லில் வளர்ச்சி பெறுவர். மற்றவர்களுக்கு

**தருபவர் வித்யா**

இவர்களை விட நல்ல லாபம் கிடைக்கும். புத்திரர்களின் உதவி உங்களின் திட்டங் களுக்கு உறுதுணயாக இருக்கும்.

**வியாபாரிகள்:** நகை, புடைவை, கட்டு மானப்பொருள்கள், பிளாஸ்டிக், குளிர் பானம், பால், அரிசி, மாவுவகைகள், உப்பு, கடல்சார் பொருட்கள், எண்ணெய், விவ சாய இடுபொருள்கள், பாத்திரங்கள் விற் பனை செய்பவர்கள் தாராள விற்பனையும் உபரி வருமானமும் பெறுவர். மற்றவர் களும் நல்ல லாபம் சம்பாதிப்பர். வெளி யூரில் புதிய கிளை தொடங்கும் திட்டம் நிறைவேறும். சந்தையில் புகழ்தரும் சிறப்பிடம் கிடைக்கும்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனி யார் துறையில் பணிபுரிபவர்கள் உற்சாக மாகச் செயல்புரிந்து பணியை சிறப்பாக நிறைவேற்றுவர். நிர்வாகத்திடம் நற் பெயரும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக் கும். கூடுதல் வேலை வாய்ப்பு பெற்று பண வரவில் எதிர்பார்த்த நிலையை அடைவீர் கள். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் பொறுப்பான உழைப்பை மதித்து பாராட் டுவர். அரசின் நிர்வாக பணியில் உள்ள வர்களுக்கு புதிய இடங்களுக்கு மாற்றம் ஏற்படும். நிதி நிறுவனங்களில் பணிபுரிப வர்கள் சட்ட திட்டங்களை கடுமையுடன் பின்பற்றி நிர்வாகத்திடம் சலுகைகளை யும், நற்பெயரையும் பெறுவர்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். கூடுதல் பொறுப்புகளை ஏற்கிற நிலையும், அதற் கேற்ற வருமானமும் கிடைக்கும். சலுகை கள் அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் எதிர்கால கணவரின் மனப் பாங்கிற்கு ஏற்ப செயல்பட்டு நிம்மதியுடன் இருப்பர். ஆபரண சேர்க்கை கிடைக்கும். குழந்தை இல்லாத பெண்களுக்கு புத்திரப்பேறு உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் அபவிருத்தி பணிபுரிவர். உற்பத்தி, விற்பனை சிறந்து லாபவிகிதம் அதிகரிக்கும். திருமண வய துள்ள பெண்களுக்கு தகுதியான வரன் கிடைக்கும்.

**மாணவர்கள்:** விவசாயம், மருத்து வம், பொறியியல், சட்டம், மேனேஜ்மென்ட், இதழியல், கணினி, ரசாயனம், பவுதிகம், உயிரியல், ஆசிரியர் பயிற்சி, வங்கியி யல், வணிகவியல் மாணவர்கள் உற்சாகத் துடன் படித்து தாராள மதிப்பெண் பெறுவர். ஏனைய துறை மாணவர்கள் தங்கள் தனித் திறமையை வளர்த்து சக மாணவர், ஆசிரியர்களிடம் நன்மதிப்பு, புகழ் பெறுவர். சிலர் புதிய கண்டுபிடிப்புகள் செய்து புகழடைவர். உயர்நிலை, மேல் நிலை மாணவர்கள் சிறப்பான மதிப்பெண் பெற குருபகவான் துணை செய்வார். பயன்படுத் திக் கொள்ளுங்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

*(வளரும்)*

---

36. Tableஇல் (MS Access Primary) எனும் கூற்றானது,
    1) ஒரே தரவு மீண்டும் மீண்டும் இடம்பெற முடியாது.
    2) (Primary key) எனக் கூறப்படும் Field இல் இரு தடவைக்கு மேல் பயன் படுத்தப்பட முடியாது.
    3) ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட தரவினை (Primary key) எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்யமுடியாது.
    4) மேற்கூறிய யாவும் சரி.

37. பின்வரும் முறைமை வாழ்க்கை அபிவிருத்தி வட்டத்தில் (SDLC) மூன்றாவது கட்ட நிலை (Phase) எனக் கூறப்படுவது எது?
    1) System Implementation
    2) System Design
    3) System Analysis
    4) Fea Study

38. பின்வருவனவற்றுள் Non Impact Printer என கருதக்கூடியது?
    1) DOT Matriy
    2) Dalsy Wheel
    3) PThermal
    4) Line Printer


39. பின்வருவனவற்றில் பொது நோக்கு பிரயோக மென்பொருள் எது?
    1) ஒருவர்/ நிறுவனம் சொந்த தேவைக்காக உருவாக்குகின்ற மென்பொருள்.
    2) கணினியை எவ்வாறு தொழிற்படவேண்டும் என்பதற்காக உருவாக்கப்படு கின்ற மென்பொருள்.
    3) எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் (பொது தேவைப்பாட்டிற்காக) உருவாக்கப்படுகின்ற மென்பொருள்.
    4) மேற்கூறிய யாவும் சரி.

40. கணினியில் செய்முறை அலகாக எதைக் கொண்டிருக்கும்?
    1) FLOPPY + RAM
    2) Cu + ALU
    3) HDD + ROM
    4) RAM + ROM

## தகவல் தொழில்நுட்பம் II 2 மணித்தியாலங்கள்

01. ''அன்பு இல்லம்'' என்பது ஒரு சிறுவர் காப்பகமாகும். இக்காப்பகத்திற்கு வருகை தருவோரின் பெயர், விலாசம், கொண்டு வரும் பொருட்களின் விவரங்களைப் பதிவு செய்ய ஒரு கணினி ஒன்றினை வாங்குகின்றார். அத்தோடு அக் காப்பகத்தில் பணி புரியும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் காப்பகத்தில் வசிக்கும் குழந்தை களின் தகவல்களையும் பதிவு செய்வதற்காகவும் இக்கணினியைக் கொள்வனவு செய்ய எண்ணுகின்றனர்.
    1) தேவையான நேரத்தில் இக்காப்பகத்திற்கு பொருட்களை வழங்கியவர்களின் விவரங்களை பெற பயன்படுத்தக்கூடிய மென்பொருள் யாது?
    2) பணிபுரியும் ஊழியர்களின் மாதாந்த சம்பள கணக்கை தயாரிக்க பயன்படுத்தக் கூடிய மென்பொருள் யாது?
    3) இக்காப்பகத்திற்கு பொருட்களை வழங்கிய அனைவருக்கும் ஒரே நேரத்தில் நன்றியை தெரிவித்து எழுத உதவும் மென்பொருள் யாது? என்ன முறையை பயன்படுத்த வேண்டும்.
    4) உயர் அதிகாரிகள் இந்தக் கணினியில் மின்னஞ்சலை அனுப்ப Modem எனும் வன்பொருளை இணைக்க உதவும் மென்பொருள் யாது?
    5) இந்தக் கணினியில் பயன்படுத்தக்கூடிய இயங்கும் முறைமை (Operating System) Dos/ windows x P யும் பயன்படுத்தலாம் என்கின்றனர். இதனை ஆராய்க.

02.




    1) மேலே குறிப்பிட்டுள்ள Logic Gates இன் வெளியீட்டை எழுதுக.
    2) வெளியீட்டின் சுருக்கத்தைத் தருக.
    3) $EF_4$ எனும் HE x A DECIMALஇற்கான octal வலு எது?
    4) நீண்ட நேரம் கணனியைத் தொழிற்படச் செய்வதனால் பெறக்கூடிய பிரதி கூலங்களைத் தருக.

03. என்பவர் XYZ எனும் கம்பனியை கணினி மயப்படுத்த அந்நிறுவனத்தின் உரிமை யாளர் திட்டமிடுகிறார்.
    1) அந் நிறுவனத்தில் பணிபுரியும் இலிகதர்க்கு (Clerk) Manual System இருந்து Computerized ஆக மாற்றுவதனால் எழக்கூடிய நன்மை தீமைகளைப் பற்றி எவ்வாறு விளக்கமளிப்பீர்?
    2) அந் நிறுவனத்தின் உடைய கணக்குகளை பேண எவ்வாறான முறைமையைக் கையாளுவீர்?
    3) Process Control System இற்கும் Office Antomationஇற்கும் உள்ள வேறு பாடுகளை விளக்குக.
    4) Worm எனும் வைரஸின் விரிவாக்கம் என்ன?

04. பின்வருவனவற்றை விளக்குக.
    1) தொகுப்பி என்றால் என்ன?
    2) மொழிமாற்றி என்றால் என்ன?
    3) ICT எவ்வாறு தொழிற்சாலை மற்றும் பொறியியலாளர்களுக்கும் எவ்வாறு உதவுகின்றது?

05. 1) ''தரவு'' என்பதனால் நீர் விளக்குவது யாது?
    2) தகவல் என்றால் என்ன?
    3) தொடர்பாடலுக்கு உதவும் வன்பொருள் யாது?
    4) முதலாம், இரண்டாம் தலைமுறைகளில் உருவாக்கப்பட்ட 2 கணினிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
    5) கணினி துறைகள் (Ports) 6 தருக.
    7) 1010 + 1111இன் சுருக்குக.
    8) கணினியின் பண்புகள் 4இனை குறிப்பிட்டு விளக்குக.

06. 1) செய்முறை அலகு (Process) தொழிற்பாட்டை படத்தின் மூலம் விளக்குக.
    2) 1-100 வரையிலான ஒற்றை எண்களை Flow CHART முறை மூலம் விளக்குக.
    3) MS - Accessஇல் Table ஒன்றில் Query View மூலம் செய்யக்கூடிய தொழிற் பாட்டை விளக்குக.
    4) MS - Word இல் font ஐ பார்ப்பதற்காக உதவும் sortcut key என்ன?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பயிற்றுநர்களுக்கு நியமனங்கள் வழங்க நடவடிக்கை

வலி.வடக்கு,நவ.29

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் விளையாட்டுப் பயிற்றுநர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாண விளையாட்டு அலுவலர்களுக்கு இடையே கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இந்த நியமனங்களை வழங்க வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த மாத முதல் வாரத்தில் விளையாட்டு அலுவலர்களுக்கான பயிற்றுவிப்பாளர் நியமனங்கள் வவுனியாவில் அமைந்துள்ள விளையாட்டுத் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

கடந்த இருபது வருடங்களின் பின்னர் சமகாலத்தில் பெரும் எண்ணிக்கையான விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கான நியமனம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இந்த நியமனங்கள் விரைவாக வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்று விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-86)

## 'பீச்' உதைபந்தாட்டப் போட்டி யாழ்.மாவட்டத்தில் அறிமுகம்

வலி.வடக்கு,நவ.29

யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக 'பீச்' உதைபந்தாட்டப் போட்டி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

19 வயதுப் பிரிவுக்கான ஆண்கள் அணிக்கு அறிமுகம் செய்யப்படும் இந்தப் போட்டி தொடர்ந்து ஏனைய வயதுப் பிரிவுனர்களுக்கு இடையேயும் அறிமுகம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு முதல் வாரத்தில் இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய முன் செயற்பாடு நடவடிக்கைகளை இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் பேர்டி பனிஸ்ரர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நல்ல கடற்கரை சூழலில் இந்தப் போட்டி நடத்தப்பட வேண்டி உள்ளமையால் ஆரம்பத்தில் போட்டிகள் காரைநகர் கடற்கரைப் பகுதியில் நடத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

## பாடசாலை அணிகளிடையே ஹொக்கி; தெரிவுப் போட்டிகள் அடுத்த மாதம்

வலி.வடக்கு,நவ.29

தேசிய மட்டத்தில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவு யாழ். மாவட்ட ஆண்கள், பெண்கள் அணிகளை தெரிவு செய்வதற்கான ஹொக்கிப் போட்டி ஒலிம்பியா விளையாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

ஒலிம்பியா வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் இப்போட்டிகள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலை அணிகளை யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவருடன் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் முதல் தடவையாக யாழ்.மாவட்டத்தில் நடைபெறுவதுடன், முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக் கொள்ளும் அணிகள் தேசிய மட்டத்தில் விளையாட மாத்தளை செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-86)




## மத்தியஸ்தர் கட்டணம் உயர்வு

வலி.வடக்கு,நவ.29

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் போட்டிகளுக்கான மத்தியஸ்தர் கட்டணங்களை அதிகரித்துள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கூடிய பொதுச் சபைக் கூட்டத்தில் இடம்பெற்ற பலத்த வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து கட்டணத்தை உயர்த்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை ஒரு நாள் போட்டிகளுக்கு பெறப்பட்ட ஆயிரம் ரூபா மத்தியஸ்தர் கட்டணத்தை ஆயிரத்தி இருநூறு ரூபாவாக உயர்த்துவதெனவும், 30 ஒவர்களுக்கான போட்டிகளுக்கு 750 ரூபாவும், 50 ஓவர்களுக்கு 1200 ரூபாவும், 20 ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கு 400 ரூபாவும் அறவிடப்படுவதெனவும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

தென்னிலங்கையில் ஒரு நாள் போட்டிகளுக்கு ஆயிரத்தி எழுநூற்றி ஐம்பது ரூபா அறவிடப்படுவதாகவும் அதனை யாழ்ப்பாணத்திலும் வழங்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒரு பகுதியினர் கொண்டு வந்த தீர்மானத்தின் அடிப்படையில் ஆராயப்பட்டு மேற் கூறப்பட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-86)

## 'பீச்' உதைபந்தாட்ட பயிற்சி முகாம் களுத்துறையில்

வலி.வடக்கு,நவ.29

யாழ்.குடாநாட்டில் 'பீச்' உதைபந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு வசதியாக இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளர் ம.பேர்டி பனிஸ்ரர் களுத்துறையில் இடம் பெற்ற பயிற்சி முகாமில் கலந்து கொண்டுள்ளார்.

'பீபா' அமைப்பின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட இப் பயிற்சி முகாமில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டனர். 'பீச்' உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான மத்தியஸ்தர் வகுப்புகளில் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர்களான கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.முகுந்தன், பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் அ. வசந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-86)

## எதிரணியினர் வராமையால் இரு பாடசாலைகளுக்கு வெற்றி

வலி.வடக்கு,நவ.29

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் மற்றும் மூன்றாம் இடத்திற்கான போட்டியும் எதிரணியினர் வராமையினால் மற்றைய இரு அணிகளுக்கும் மைதானத்தில் வைத்து வெற்றி அளிக்கப்பட்டுள்ளது.

சுன்னா கம் ஸ்கந்தவரோதயாக் கல்லூ ரியில் நடைபெறுவதாக இருந்த மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு சமூகம் கொடுக்காமையால் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இறுதிப் போட்டியில் மோதவுள்ள இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திற்கு சமூகமளிக்காத நிலையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு சம்பியன் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தச் சுற்றுப் போட்டியில் மோதிக் கொண்ட அணிகள் பன்னிரெண்டாக இருந்த போதிலும் 90 வீதமான அணிகள் சமநிலையில் காணப்பட்டதுடன் வெற்றி பெற்ற அணிகள் ஒரு கோலைப் பெற்று இந்த இறுதிப் போட்டிகளில் மோத வேண்டிய இரு அணிகள் மைதானத்திற்கு சமூகம் தராமையால் மைதானத்திற்கு சமூகம் கொடுத்த அணிகளான ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் இலகுவாக தமது வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொண்டன. (த-86)

பலப்பரீட்சை....



வெற்றி:-சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கழகங்களுக்கு இடையேயான மின் ஒளியில் நடத்திய மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்களை படத்தில் காணலாம். (23)

## 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,நவ.29

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு:-

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தை வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் சுழிபுரம் விக்ரேறியாக் கல்லூரியை வெற்றி பெற்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 05:00 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 01:00 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வெற்றி பெற்றது.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை வென்றது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 01:00 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதையாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சம நிலையில் இருந்தன.

குழு நிலையில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப் பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி 04:02 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி பெற்றது. (த-86)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் ஆசிய விளையாட்டு விழா நிறைவு

# இலங்கைக்கு ஒரு பதக்கம் கூட இல்லை

## சீனா முதலிடம்; 6ஆவது இடத்தைப் பிடித்தது இந்தியா!

குவாங்சு, நவ. 29

16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் வண்ணமயமான கலை நிகழ்வுகளுடன் கோலாகலமாக நிறைவுபெற்றது. இதில் பதக்கப்பட்டியலில் போட்டியை நடத்திய சீனா, முதலிடத்தைப் பிடித்தது. இந்தியாவுக்கு 6ஆவது இடம் கிடைத்தது. அதேவேளை, இலங்கைக்கு ஒரு பதக்கம் கூட கிடைக்கவில்லை.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் குவாங்சு நகரில் கடந்த 12ஆம் திகதி தொடங்கியது.

45 நாடுகளை சேர்ந்த 9 ஆயிரத்து 700 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்றனர். 42 விளையாட்டுகளில் 476 பிரிவுகளில் போட்டிகள் நடந்தன.

வழக்கம் போல் இந்த முறையும் சீனா பதக்க அறுவடையில் கொடி கட்டிப் பறந்தது. 199 தங்கங்கள் உட்பட 416 பதக்கங்களைக் குவித்து தொடர்ந்து 8ஆவது தடவையாகவும் முதலிடத்தை ஆக்கிரமித்தது.

ஆசிய விளையாட்டில் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த முறை அதிக தங்கங்களை சீனா அள்ளியிருக்கிறது. இதற்கு முன்பு 1990ஆம் ஆண்டு அதிகபட்சமாக 183 தங்கங்களைப் பெற்றிருந்தது.

609 வீரர் - வீராங்கனைகளுடன் களமிறங்கிய இந்தியா, 14 தங்கங்கள் உட்பட 64 பதக்கங்களுடன் 6ஆவது இடத்தைப் பிடித்தது. 2006ஆம் ஆண்டு டோகாவில் நடந்த ஆசிய விளையாட்டை விட இப்போது இந்தியாவின் செயற்பாடு மேம்பட்டிருக்கிறது.

கடந்த முறை இந்தியா, 10 தங்கங்கள் உட்பட 53 பதக்கங்களுடன் 8ஆவது இடத்தில் இருந்தது.

இந்த முறை அதைவிட முன்னேறியுள்ளது. அத்துடன், ஒட்டுமொத்த ஆசிய விளையாட்டு வரலாற்றில் இந்தியா அதிகபதக்கங்கள் வென்ற போட்டியாகவும் இது பதிவாகியிருக்கிறது. 1982ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டில் 57 பதக்கங்களை வென்றதே இந்தியாவின் முந்தைய சிறப்பான பெறுபேறாக இருந்தது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா நேற்றுமுன்தினம் கோலாகலமாக நடந்தது. தொடக்க விழா நடந்த திறந்த வெளி அரங்கான குவாங்சுவில் உள்ள ஹைஸின்ஷா தீவு, 'பேர்ல்' நதியோரம்தான் நிறைவு விழாவும் களை கட்டியிருந்தது.

தொடக்க விழாவுக்கு நிகராக நிறைவு விழாவையும் போட்டி அமைப்பாளர்கள் பிரமாண்டமாக நடத்தினார்கள். இதற்காக சுமார் 600 கோடி ரூபா வரை செலவிடப்பட்டது.

லேஷர் காட்சிகள், ஆடல், பாடல், கண்கவர் பிரமாண்ட கலை நிகழ்ச்சிகள், வித்தியாசமான வேடங்களில் கலக்கலான கலாசார நடனங்கள், இசை வெள்ளத்தில் தென்கொரிய பாடகர் ரெய்னின் பாடல், வாண வேடிக்கை என்று இரண்டு மணி நேரம் மனதை பரவசத்தில் மூழ்க வைத்தனர்.

சுமார் 7 ஆயிரம் கலைஞர்கள் அரங்கில் தங்களது திறமையை வெளிப்படுத்தி, பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

மையப்பகுதியில் ஆசிய ஜோதி சுடர் விட்டு எரிந்தது. 15 நாள்கள் நடந்த ஆசிய விளையாட்டை வழியனுப்பும் உணர்ச்சிகரமான விழாவில், வீரர்-வீராங்கனைகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

விழா அரங்கில் அமைக்கப்பட்ட பெரிய திரையில் புனித நதியான கங்கை, மற்றும் இந்தியாவில் புகழ் பெற்ற கோவில்கள், தாஜ்மஹால், நவீன சிற்ப வேலைப்பாடுகள் ஆகியவையும் காட்டப்பட்டன.

இறுதியில் 2014ஆம் ஆண்டு இன்ஷியான் நகரில் ஆசியப் போட்டியை நடத்தும் தென்கொரியாவிடம் போட்டிக்கான கொடி, ஜோதி ஆகியவை ஒப்படைக்கப்பட்டன.

முதல் 10 இடங்களைப் பிடித்த நாடுகளின்
பதக்கப் பட்டியல்

| நாடு | த | வெ | வெ.க. | மொத்தம் |
|---|---|---|---|---|
| ★ சீனா | 199 | 119 | 98 | 416 |
| ★ கொரியா | 76 | 65 | 91 | 232 |
| ★ ஜப்பான் | 48 | 74 | 94 | 216 |
| ★ ஈரான் | 20 | 14 | 25 | 59 |
| ★ கஸகஸ்தான் | 18 | 23 | 38 | 79 |
| ★ இந்தியா | 14 | 17 | 33 | 64 |
| ★ தாய்வான் | 13 | 16 | 38 | 67 |
| ★ உஸ்பேகிஸ்தான் | 11 | 22 | 23 | 56 |
| ★ தாய்லாந்து | 11 | 9 | 32 | 52 |
| ★ மலேஷியா | 9 | 18 | 14 | 41 |




ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் முதலாவது தங்கத்தை 'உஷூ' போட்டியில் சீனா வென்றது. கடைசித் தங்கமும் சீனாவுக்கே கிடைத்தது. நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் சீனா 21-25, 22-25, 25-10, 25-17, 16-14 என்ற செற் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை முகர்ந்தது.

நியூஸிலாந்துடனான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி:

# 40 ஓட்டங்களால் இந்தியா வெற்றி!




நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் பேட்டியில் இந்திய அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் பங்கேற்றும் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்றுவருகிறது.

முதலாவது போட்டி நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் இரு அணிகளும் முன்னணி - அனுபவ வீரர்கள் இன்றி களம் கண்டன. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி, ஓரளவு சிறப்பான ஆரம்பத்தைக் கண்டது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய முரளி விஜய்-கம்பீர் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 44 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அணிக்காக 29 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் முரளி விஜய் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து கம்பீர் (38), யுவராஜ் சிங் (42), ரெய்னா (13) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் நின்று அதிரடியாக ஆடிய கோஹ்லி சதம் கண்டார். அவர் 104 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 105 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்களில் பதான் (29) தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தொடவில்லை.

இறுதியில் இந்திய அணி, 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 276 ஓட்டங்களைச் சேர்த்தது. நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், மைக்கேய் 4 விக்கெட்டுகளையும், மில்ஸ் 3 விக்கெட்டுகளையும், ரியூவ்வி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர், 277 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 236 ஓட்டங்களையே பெற்றது.

இதனடிப்படையில், இந்திய அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நியூஸிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில், ஆகக் கூடுதலாக ரெய்லர் 66 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்ரீசாந்த், அஷ்வின், யுவராஜ்சிங் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், நெஹ்ரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக இந்திய வீரரான கோஹ்லி தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றது.

# சச்சின், டோனியின் ஐ.பி.எல். விலை நாலரைக் கோடி ரூபா

ஐ.பி.எல். நான்காவது தொடரில் விளையாடவிருக்கும் 64 வீரர்களுக்குமான ஏலத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன் முதலாவது பிரிவில் இடம்பிடித்துள்ள சச்சின், டோனி, ஷேவாக், ஹர்பஜன் சிங் உள்ளிட்ட வீரர்களுக்கு சுமார் 4 கோடி 50 லட்சம் ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் பிரிவில் இடம்பிடித்திருக்கும் யூசுப்பதான், சஹீர் கான், சுரேஷ் ரெய்னா உள்ளிட்ட வீரர்களுக்கு சுமார் 3 கோடி 25 லட்சம் ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் பிரிவில் இடம்பிடித்திருக்கும் கங்குலி, கௌதம் கம்பீர், கும்ளே, டிராவிட், லக்ஷ்மன் உள்ளிட்ட வீரர்களுக்கு சுமார் 2 கோடி 30 லட்சம் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நான்காம் பிரிவில் இடம்பிடித்திருக்கும் மனோஜ்திவாரி, விரிட்கிமன் ஷா, அசோக் திண்டா, புஜாரி உள்ளிட்ட வீரர்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் ஐ.பி.எல். அமைப்பால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த பட்ச ஏல விலைத் தொகையாகும். ஏலம் கேட்கும் நிறுவனங்கள் இதற்கும் மேல் கேட்கலாம்.

# சமனிலை நோக்கி நகர்கிறது பிரிஸ்பேர்ண் டெஸ்ட்



பிரிஸ்பேர்ணில் நடைபெற்றுவரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி சமனிலையில் முடியும் நிலையை எட்டியுள்ளது. அணித்தலைவர் ஸ்டிரஸ், குக் ஆகியோர் சதமடித்து இங்கிலாந்து அணியை தோல்வியிலிருந்து மீட்டனர்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேணில் நடைபெற்றுவருகிறது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, முதல் இனிங்ஸிற்காக 260 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் தனது முதல் இனிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு, ஹஸி (195), ஹடின் (136) இருவரும் சதமடித்து அணியை வலுப்படுத்தினர். ஹஸி-ஹடின் ஜோடி 6ஆது விக்கெட்டுக்காக 307 ஓட்டங்களைச் சேர்த்து சாதனை படைத்தது. பிரிஸ்பேர்ண் மைதானத்தில் ஒரு விக்கெட்டுக்காகப் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகவும் அமைகிறது.

ஆஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 481 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 221 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. மீண்டும் நேற்றுத் தனது இனிங்ஸைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, ஆஸியின் துடுப்பாட்டத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சிறப்பாக ஆடியது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ஸ்டிரஸ் - குக் ஜோடி சிறப்பாக ஆடி முதல் விக்கெட்டுக்காக 188 ஓட்டங்களைக் குவித்தது. சதம் கடந்த ஸ்டிரஸ், 110 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து சென்றார். பின்னர் வந்த டிராட், குக்குடன் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சிறப்பாக ஆடிய குக், சதம் கடந்தார்.

ஆட்ட நேரம் முடியும்போது இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 309 ஓட்டங்களைப் பெற்றது. குக் 132 ஓட்டங்களுடனும், டிராட் 54 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் நோர்த் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். நேற்றுவரையான நிலவரப்படி இங்கிலாந்து அணி 88 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று ஆட்டத்தின் கடைசி நாள் என்பதால் இந்தப் போட்டி சமனிலையில் முடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி யோகம்மா வேலாயுதபிள்ளை



கொக்குவில், தாவடி தெற்கு, வேம்படி முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா வேலாயுதபிள்ளை 26.11. 2010 ஆம்திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர்-நீலாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், சிவநேசனின் (கனடா) அன்புத் தாயாரும், இந்திராதேவியின்(கனடா) அன்பு மாமியாரும், இராசையா(அமரர்), இரத்தினம் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரா, தம்பித்துரை(அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியை), பரமேஸ்வரி மற்றும் தனபாலசிங்கம்(ஓய்வுபெற்ற புள்ளிவிபர திணைக்கள உதவி ஆணையாளர்), பாலச்சந்திரன்(ஓய்வு பெற்ற நில அளவையாளர்), தங்கேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயாரும், அரியராசா(லண்டன்), துரைசிங்கம், மகேஸ்வரி, தர்மேஸ்வரி, பாலச்சந்திரன்(சந்திரன்) ஆகியோரின் அன்பு மாமியும், அபிநயா(கனடா), பிரிவியா (கனடா), ஜெயந்தன்(லண்டன்), யாழினி(கனடா), பாலமுரளி (HSBC, கொழும்பு), காலஞ்சென்ற தயாநிதி(ஜேர்மனி) மற்றும் கமலராசன், ராகவன்(நல்லூர்) சுரேஸ்குமார் (லண்டன்), செந்தில்குமார் (ஆசிரியர்), சஞ்சீவன் (போர்த்துக்கல்), தணுசா (தாவடி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(29.11.2010) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

அன்றைய தினம் அன்னாரின் மகளின் தாவடி இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இ.சந்திரன்,
வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில். (106620)

தகவல்:
குடும்பத்தினர்.

# வரலாற்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 29

யோசேஷ்வாஸ் அடிகளாரின் வரலாற்று நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை பாதுகாவலன் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நூல் அறிமுக விழாவில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமியத்துறை பேராசிரியர் ஞா.பிலேந்திரன் அடிகளின் மொழிபெயர்ப்பில் வாழ்வும் பணியும் எனும் நூல் வெளியிடப் படவுள்ளது.

அறிமுக விழாவின் ஆசியுரையை யாழ்.மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் நிகழ்த்து வார்.

அறிமுகவுரையை ஜெயந்தன் பச்சேக் அடிகள் நிகழ்த்த முதல் பிரதியை அருட்குரு ஜே.மி.இ செல்வராசா அடிகள் வெளியிட்டு வைக்கவுள்ளார். ஆய்வுரையை அருட்குரு எஸ்.மி மங்களராசா அடி கள் நிகழ்த்தவுள்ளார்.

(204-135)

SMI Bank இன்று நாங்கள் உங்கள் மண்ணில்...

அரச ஈட்டு முதலீட்டு வங்கி தனது 15ஆவது கிளையை இன்று (2010.11.29) திங்கட்கிழமை மு.பகல் 10 மணிக்கு இல.127, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் வங்கியின் தலைவர்
திரு.ஜகத் வெள்ளவத்த
அவர்களினால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அரச ஈட்டு முதலீட்டு வங்கி.



(106610)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் (பலாலி) | கர்த்தன் காலடியில் (அச்சுவேலி) |
|---|---|
| 30.09.1930 | 29.11.2003 |

## சின்னத்தம்பி திருநாவுக்கரசு

(6ஆம் திருவிழா உபயகாரர், பொலிகண்டி கந்தவனம் கோயில்)

ஏழாண்டுகள் சென்றது ஐயா- உன்
பாசமுகம் எம் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

உங்கள் அன்பு மனைவி: அன்னமுத்து,
மகன்: லோகநாதன் (கனடா),
மருமகள்: தங்கராணி (கனடா),
பேரப்பிள்ளைகள்: பிரசாந் (கனடா),
அனுசாந் (கனடா),
அனுசாந்தி (கனடா).

தி.அன்னமுத்து (மனைவி)
தோப்பு, அச்சுவேலி.

(சி/572582)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## செல்லத்துரை சிங்கராசா

மண்ணில் : 1932.01.28

விண்ணில்: 2010.10.30



அன்பின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
அன்பினால் எல்லோரையும் அரவணைத்தீர்!
பண்புடனே எமை வளர்த்துப் பாசப்பிணைப்புடனே
பார் புகழ நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இன்பமாக வாழ்க்கையில் இறையடி சேர்ந்தீரே
என்றும் நாம் மறவோம் நெஞ்சிருக்கும் வரை
உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த (30.10.2010)இல் அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஆறுதல் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

இன்று (29.11.2010) திங்கட்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.12, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் போட்டிப் பரீட்சை டிசெம்பரில்

கொழும்பு, நவ.29

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொழும்பில் உள்ள சில பாடசாலைகளில் இப் பரீட்சையை நடத்துவதற்கான ஒழுங்குகளை பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள 1,400 பேர் வரையிலான பரீட்சார்த்திகள் தகுதிகளைப் பெற்றிருப்பதாக பொலிஸ் பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் பிரிவின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகர் சித்சிறிஜயலத் கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் கடந்த 23ஆம் திகதி தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-22)

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 . 08 . 1934



உதிர்வு 05 . 12 . 1985

**அமரர் கந்தையா இராசரத்தினம்**

(முன்னாள் தலைவர், காமாட்சி அம்பாள் கூட்டுறவு கைத்தொழில் சங்கம்)

திதி: அட்டமி

எங்கள் குடும்பத்தின் தீபமாய்
திகழ்ந்து அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மைப் பேணிப்
பாதுகாத்து நல்வழிப்படுத்தி இன்று
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து
இருபத்தைந்து ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்....

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

மனைவி பூமணி
இராசரத்தினம் குடும்பத்தினர்.

(106611)

## வங்கிக் கிளை திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

அரச முதலீட்டு வங்கியின் கிளை ஒன்று இல-127 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

மேற்படி வங்கியின் கிளையை அரச முதலீட்டு வங்கியின் தலைவர் ஜகத் வெள்ளவத்த திறந்து வைக்கவுள்ளார். (201)

## மரண அறிவித்தல்

### செல்லையா கண்மணி



வெளிப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கண்மணி நேற்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லத்துரை, கந்தசாமி, கனகம்மா மற்றும் ஆச்சிப்பிள்ளை, சரசுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவமணிதேவி, சந்திரராசா, பத்மநாதன் (பப்பி), ஈஸ்வரன் (நோர்வே), ரஞ்சினிதேவி ஆகியோரின் சிறிய தாயாரும், மகாலிங்கம், சந்திரவதனா, புஸ்பராணி, பிரேமலதா (நோர்வே), தவராசா ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீமதன் (சுவிஸ்), ஸ்ரீமதனி (லண்டன்), நளாயினி (சுவிஸ்), நவஜீவன் (லண்டன்), கேஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வெளிப்புலம்,
சுன்னாகம்.

(106621)

தகவல்:
குடும்பத்தினர்.


வெளிவரவுள்ளது...

**புலமைச் சுடர் 2011-2012**



திங்கள் தோறும்

விலை ரூபா 10

முயற்சியும் பயிற்சியும் உயர்ச்சி தரும்

எதிர்வரும் 06.12.2010முதல் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிற்கான ஒருவாரகாலம் கற்பதற்குப் போதுமான கற்றல் குறிப்புக்கள், மாதிரி வினாத்தாள்களைத் தாங்கிய விசேட கையேடு வெளிவரவிருக்கின்றன.

உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு: யாழ் விநியோகப்பிரிவு இலக்கம்: 021 5677222

ஆசிரிய பீடம்: 011 576 8855, 071 427 3035.


## நெஞ்சுருக்கும் மூன்றாண்டு நினைவலைகள்

அமரர் டாக்டர் திருமதி

### குணரஞ்சிதம் குகதாஸ்

(தோல் வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

(திதி: 22.11.2010)





அன்னை
மடியில்
31.10.1950



ஆண்டவன்
அடியில்
25.11.2007

எம் ஆருயிர் அம்மாவுக்கு....
நேசமாய் நின்றெமக்கு
நிழல் கொடுத்த உயிரே!
பாசமாய் அரவணைத்து
பாங்குடன் வளர்த்தாயே
நேசமும் பாசமும்- அந்தோ
இன்று கனவாகிப் போனதோ- நீ
பேசாமல் கண்மூடி
மூன்றாண்டுகள் ஆயிற்றே!!...

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குறைவில்லா அன்புடனே,
வழிகாட்டிய ஆசானே- இன்றோ
குலவிளக்கு ஒளியிழந்ததால்
நிர்க்கதியாகியே
தவிக்கின்றோம் நாம் இங்கே!....

பாசமிகு தாயாய்- எம்மை
பரிவுடன் வழிகாட்டி
பார்போற்றும் வைத்தியராய்
பிறர்பிணி நீக்கியே
தடம் பதித்த இடமெல்லாம்
நற்பெயர் ஈட்டினீர்!
கல்நெஞ்சகன் காலனவன்
கவர்ந்து தான் சென்றிட்டானோ!...

கல்லையும் கனிய வைக்கும்
உன் இனிய வார்த்தைகள்
தேன் பொங்கும் நாதமாய்
இன்றும் எமக்கு ஒலிக்கிறதே!..

மடல் இது மூன்றம்மா
பதிலுக்காய் ஏங்குகின்றோம்
உன் நினைவுகள் எம் நெஞ்சங்களில்
என்றென்றும் பசுமையுடன்!
நனைந்தவிழி நீரின்னும்
நீங்கவில்லை எம்மவர்க்கு...
நலம் பெறட்டும் நல் ஆத்மா
நற் சாந்தி பெற்றிட்டும்.

11, 2/6, 12ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை.

பாசமுடன்:
கணவர், மகன், மகள், மருமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - பாக். நாடுகளிடையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்தாரி பாராட்டினார். பிராந்திய பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இலங்கையின் அநுபவம் மிகவும் இன்றியமையாதது எனத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் கட்டியெழுப்புவது தொடர்பாகக் கவனம் செலுத்திய இரு நாட்டுத் தலைவர்களும் இலங்கையிலிருந்து தேயிலை மற்றும் இரத்தினக் கற்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் ஆராய்ந்தனர் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இலங்கையின் சுகாதாரத்துறை அபிவிருத்தி தொடர்பாகப் பாராட்டுத் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி, தமது நாட்டின் தாதியர்களுக்கு இலங்கைத் தாதியர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது தொடர்பிலும் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினார். அத்துடன் பாகிஸ்தானின் கல்வி அபிவிருத்திக்காக இலங்கையிலிருந்து கணித மற்றும் ஆங்கில ஆசிரியர்களை அழைப்பிப்பது தொடர்பிலும் இரு நாட்டுத் தலைவர்களும் ஆராய்ந்தனர்.

இலங்கையின் எதிர்காலச் சந்ததியினரை போதைவஸ்துப் பழக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மதுவுக்கு முற்றுப்புள்ளி திட்டம் தொடர்பாக சிலாகித்துப் பேசினார் சர்தாரி. போதைப் பொருள்களை ஒழிப்பதற்காக பிராந்திய நாடுகள் அனைத்தும் இணைந்து செயற்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார். இரு நாடுகளுக்கும் இடையில் வங்கித்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் பேசப்பட்டது.

இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் நான்கு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்போர் விஸா இல்லாமல் இரு நாடுகளுக்கும் இடையில் பயணம் செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மக்தூம் ஷா மஹ்முத் குரைஷியும் கைச்சாத்திட்டனர்.

விவசாயத்துறையில் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் கே.ஈ.கருணாதிலக பாகிஸ்தான் தூதுவர் சீமா இலாஹி பலோச் ஆகியோர் கைச்சாத்திட்டனர். சுங்க நடவடிக்கைகள் ஒத்துழைப்புத் தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றும் இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்தில் கைச்சாத்திடப்பட்டது. இரு நாடுகளுக்கிடையில் கலை கலாச்சார ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்கான ஒப்பந்தமும் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

நேற்றைய பேச்சில் பாகிஸ்தான் தூதுக்குழு சார்பில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மக்தூம் ஷா மஹ்முத் குரைஷி, பாதுகாப்பு அமைச்சர் அஹமட் முகதார், நிதி அமைச்சர் செய்யத் முராட் அலிஷா, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் சீமா இலாஹி பலோச், பாகிஸ்தான் ஜனாதிபதியின் செயலாளர் சல்மான் பர்கியு, பாதுகாப்பு செயலாளர் செய்யத் முஹமதி அத்னன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை சார்பாக அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ஏ.எச்.எம்.பௌசி, சரத் அமுனுகம, பந்துல குணவர்த்தன, டீ.பி. ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

# ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அங்கு ரில்வின் சில்வா தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தேரர்களின் முன்னிலையில் அரச ஊழியருக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதி இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் நிறைவேற்றப்படவில்லை. அத்துடன் யுத்தம் முடிவுற்றதும், மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார். அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இதைவிட மிக மோசமான விடயம், இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் எமது நாட்டின் பொருளாதாரம் புதிய லிபரல் வாதத்துக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படியே மேற்படி நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட உரையில் தெரிவிக்கப்படாத போதும் செலவாணிச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. இதன்படி வெளிநாட்டுக் நிறுவனங்களிடம் இருந்து கடன் பெறமுடியும். வெளிநாட்டவர்கள் வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டே வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்க முடியும். அதே போல் வெளிநாட்டவர்கள் இலங்கையில் வர்த்தக நிலையங் களையும் சொந்தமாக ஆரம்பிக்கலாம். இது எமது பொருளாதார அபிவிருத்திக்கு உகந்ததல்ல - என்றார்.

# தமிழ்க்கட்சிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணிச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இருந்தும், அந்தச் சந்திப்பின்போது அமைச்சர் கிருஷ்ணாவிடம் கையளிக்கப்பட இருந்த மனுவை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் மூலமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்படவிருந்த இந்திய உதவித் தூதரகம் கடும் மழை காரணமாக திறக்கப்படவில்லை. இந்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று தூதரகத்தைத் திறந்து வைக்கச் சென்றதால் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு இடம்பெறவில்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாந்தோட்டை சென்ற அமைச்சர் கிருஷ்ணா அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் நேரடியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்தார். அங்கிருந்து நேற்றுப் பகல் புதுடில்லி நோக்கிப் பயணமானார்.

தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பை கிருஷ்ணா அலட்சியப்படுத்தி இருப்பது தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இனப்பிரச்சினை முக்கியமானதொரு கட்டத்தில் உள்ள நிலையில் அமைச்சர் கிருஷ்ணா தமிழ்த் தரப்பை புறக்கணித்திருப்பதானது ஆழ்ந்த கவலை தரக்கூடிய செயல் என தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ)

# மேற்குநாடுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திரண்டு வந்த மக்கள் மாவீரர்களுக்கு அகல் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, உள்நாட்டில் மாவீரர் தினம் அமைதியாகவே கழிந்தது. மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கக் கூடாது. அது தொடர்பான செய்திகளை வெளியிடக் கூடாதென சில தரப்பினர் யாழ். குடாநாட்டிலுள்ள பத்திரிகை அலுவலகங்களை மிரட்டி இருந்தனர். எனினும் குடாநாட்டின் சில பகுதிகளில் மாவீரர் தினத்தையொட்டி துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. கிழக்கிலும் சில இடங்களில் இரகசியமான முறையில் மாவீரர் தினம் நிகழ்வுகள் இடம்பெற்றன எனச் செய்திகள் தெரிவித்தன. கனடா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, நோர்வே போன்ற நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தனர்.

# மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணப்பட்டுவரும் ஒரு பொக்கிஷமாகவே இந்திய - இலங்கை உறவை நான் கருதுகிறேன். 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இலங்கையின் தெற்கு உட்பட பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. அப்போது அயல் நாடு என்ற வகையில் இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கியது.

அம்பாந்தோட்டையை நாட்டின் மிக முக்கிய நகரமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒரு திட்டம் உள்ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடனேயே அங்கு இந்திய உதவித் தூதரகத்தைத் திறக்க ஏற்பாடு செய்தோம்.

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 2000ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இதனால் இரு நாடுகளுமே பல மடங்கு நன்மையை அனுபவித்து வருகின்றன. கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதி 50 சதவீதத்தால் அதிகரித்துள் ளது.

இந்தியாவுடனான உறவை வலுப்படுத்து வதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு வழங்கும் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது. இலங்கையுடனான உறவுகளை எதிர்காலத்திலும் வலுப்படுத்த இந்தியா என்றும் நடவடிக்கை எடுக்கும்.

- இப்படி அவர் கூறினார்.


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா கிருஷ்ணபிள்ளை



நெற்கொழு கிழக்கு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கிருஷ்ணபிள்ளை நேற்று (28.11.2010) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வைரவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சீதவன் தம்பதியரின் அன்பு மருமகனும் மணிமாலையின் அன்புக் கணவரும் கண்மணியின் சகோதரனும் பொன்னுத்துரையின் மைத்துனரும் மல்லிகாதேவி, மலராதேவி, கமலாதேவி, சிவபாலசுந்தரம், அமரர் தவபாலசுந்தரம் மற்றும் திருஞானசுந்தரம் (சுவிஸ்), வர்ணபாலசுந்தரம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்தம்பு, தவராசா, கிருபாகரன், (அச்சுவேலி பிரதேச சபை), சுலோசனா, யமுனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அமுதப்பிரியா, பிரபதாஸ், பிறேமலதா, திவாகர், சுதாஸ்கர், கவாஸ்கர், சுபாஸ்கர் காலஞ்சென்ற பிரகாஸ் மற்றும் ஸ்ரீ மிதுலா, துசிதா, விவேக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெற்கொழு கிழக்கு,*
*வல்வெட்டித்துறை.* (106626)
தகவல்:
குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற தபால் சேவகர் கண்டாவளை, விசுவமடு)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் இல. 102, ஸ்கந்தபுரத்தில் வசித்தவரும் மீசாலை வடக்கில் (சியாமளா மில் வீதி) தற்போது வடலியடைப்பை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று(28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கண்மணி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற அன்னலக்சுமியின் (மணி) அன்புக் கணவரும் உதயகுமாரி (உதயம்), மலைக்குமாரி (லதா), சிவகுமாரி(பிறேமா - பிரான்ஸ்), புவீந்திரகுமார் (முருகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சங்கரலிங்கம் (ராசன்), மதிபாலசிங்கம் (பெரியதம்பி பெயின்ரர்), பாலசுப்பிரமணியம் (சந்திரன் -பிரான்ஸ்), தயாளினி (யாழினி) ஆகியோரின் அருமை மாமனும் தனுஷா, தர்சன், அனுஷா, மதுஷா, மயூரிகா, புவிகா, கீர்த்திகா, அனித்தா (பிரான்ஸ்), சாம்பவி, சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு* (106625)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



**Projector & Laptop for Rent**




Call on 0773126712, 0777425974
Also available Screen, Sound System & Mic
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

**மாபெரும் இலவச கருத்தரங்கு**
**O/L 2010**
யாழ்.நகரில் முன்னணி ஆசிரியர்களினால்
நடத்தப்படும் தொடர் கருத்தரங்கு
30.11.2010 செவ்வாய் தொடக்கம்
04.12.2010 சனி வரை நடைபெறும்.
*(மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை)*
கருத்தரங்கில் கையேடுகள் வழங்கப்படும்.
ஆரம்பம் 30.11.2010 செவ்வாய் மாலை 3.00 மணி
BRAIN POWER INSTITUTE [BPI]
பாங்ஷால் வீதி (106624) குருநகர்

**Quick Learning Course**

**Spoken English with Grammar**

Duration
1 Month
Rs.2000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள்
நடைபெறும் & Full time special

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road,
Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

30-11-2010
Batch 6 : 8.00 AM- 11.00 AM
Batch 7 : 11.00 AM - 2.00 PM
Batch 8 : 2.00 PM - 5.00 PM


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org